# இந்து ஒளி
# HINDU OLI

அகில இலங்கை இந்து மாமன்றம்






அகில இலங்கை இந்து மாமன்றம்
காலாண்டிதழ்

தீபம் - 9 சுடர் - 1

*Quarterly of*
*All Ceylon Hindu Congress*





## திருவெம்பாவை சிறப்பிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தச் சுடரில் .........


01. பஞ்ச புராணங்கள்

2. "ஆதியும் அந்தமுமில்லா அரும் பெரும் சோதி"யாம் சிவசோதி

5. இன்பமே எந்நாளும் துன்பமில்லை

7. ஸ்ரீ நந்திகேஸ்வரர் நமஹ

9. இந்துக்கோட்பாடுகளில் காணப்படும் ஒழுக்கவியல் சிந்தனைகள் – ஒரு கண்ணோட்டம்

15. திருவெம்பாவைச் சிறப்பு

16. நாட்காட்டி 2005

17. இந்து சமய விழாக்களும் விரத நாட்களும் [2005]

18. சந்திரமௌலீஸ்வரர் கோயில்கொண்ட தொண்டீஸ்வரம்

20. தன்வினை தன்னைச் சுடும்

22. பெரிய புராணக் கதைகள்

24. மார்கழித் திருவாதிரை

25. தைப் பொங்கல்

26. பட்டினத்தாரும் இறை வழிபாடும்

28. இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இல்லம்

31. கிளிநொச்சியில் அறநெறிப் பாடசாலை


**அடுத்த சுடர்**

**தாரண வருடம்**

**தை – பங்குனி**

"இந்து ஒளி"யின் அட்டையிலும் பின் பக்கத்திலும் வெளியாகியிருக்கும் படங்கள் மன்னாரில் நிறுவப்படிருக்கும் "இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இல்லம்" திறப்பு விழா நிகழ்வுகளாகும்.

**மாமன்றத்தின் பராமரிப்பிலுள்ள இரத்மலானை மாணவர் விடுதி, 'சக்தி இல்லம்' பிள்ளைகள்**










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணங்கள்

– திருச்சிற்றம்பலம் –

## தேவாரம்

[சுந்தரமூர்த்திநாயனார் அருளியது]

தம்மையே புகழ்ந் திச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோக மாள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே

## திருவாசகம்

[மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது]

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்.
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

[கருவூர்த் தேவர் அருளியது]

சித்தனே அருளாய் செங்கணா அருளாய்
சிவபுர நகருள்வீற் றிருந்த
அத்தனே அருளாய் அமரனே அருளாய்
அமரர்கள் அதிபனே அருளாய்
தத்துநீர்ப் படுகர்த் தண்டலைச் சூழல்
சாட்டியக் குடியுள்ஏ ழிருக்கை
முத்தனே அருளாய் முதல்வனே அருளாய்
முன்னவா துயர்கெடுத் தெனக்கே

## திருப்பல்லாண்டு

[சேந்தனார் அருளியது]

நிட்டை இலா வுடல்நீத்து என்னை ஆண்ட
நிகரிலா வண்ணங் களும்
சிட்டன் சிவன் அடியாரைச் சீராட்டும்
திறங் களுமேசிந் தித்து
அட்டமூர்த்திக்கு என் அகம் நெகவூறும்
அமிர் தினுக்கு ஆலநிழல்
பட்டனுக்கு என்னை தன்பாற் படுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## பெரியபுராணம்

[சேக்கிழார் அருளியது]

ஆதியாய் நடுவுமாகி அளவிலா வளவுமாகிச்
சோதியாய் யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகி
பேதியா வேகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி!

– திருச்சிற்றம்பலம் –

உ
சிவமயம்

# இந்து ஒளி

தீபம் - 9 சுடர் - 1

தாரண வருடம் மார்கழித் திங்கள் 9ம் நாள்

24. 12. 2004

## நந்திக் கொடியை ஏற்றுவோம்! போற்றுவோம்!

ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் ஜோதி சிவபெருமான். உலகின் முழுமுதற் கடவுளான சிவனுக்குரிய கொடி நந்திக் கொடி என்பதால் அதுவே உலகின் முதற் கொடியாகவும் முக்கியத்துவம் பெறுகிறது. சிவபெருமானின் வாகனமும் இடபம், அதுவே நந்தி. இது ஒரு சிவசின்னம் என்ற வகையிலும் சைவப் பெருமக்களால் போற்றித் துதிக்கப்படுகிறது.

உலகின் ஒவ்வொரு நாடுகளுக்கும், அந்தந்த நாட்டுமக்களது மதத்திற்கும் அவரவர்கள் தனித்துவத்தைப் பேணுவதற்கு உரிமையுமுண்டு; வழமையுமுண்டு. இன்றும் உலக நாடுகள் தம் தனித்துவத்தை நாட்டுக் கொடிகளால் பேணிவருவதைக் காணமுடிகிறது. அதுபோல ஒவ்வொரு மதத்தினரும் அவர்களுக்கே உரித்தான கொடிகளைப் பயன்படுத்தி வருகின்றனர். அந்தவகையில் பாரம்பரியமிக்க நமது சைவ சமயத்தின் சின்னமாக நந்திக் கொடி விளங்குகிறது. நீண்ட காலமாகவே இத்தகைய பாரம்பரிய சிறப்புகளும், அதன் அத்தியாவசியமும் பலருக்குத் தெரியாமலிருந்து வந்தது.

அண்மைக் காலமாக மாமன்றத்தின் துணைத் தலைவரான திரு. சின்னத்துரை தனபாலா தனி மனித முயற்சியாக நந்திக் கொடிகளைப் பெற்று சைவப் பெருமக்களுக்கும், சைவ நிறுவனங்களுக்கும், பாடசாலைகளுக்கும் இலவசமாக விநியோகித்து வருகிறார். இத்தகைய ஒரு சிறப்பான கைங்கரியம் பெரிதும் போற்றப்பட வேண்டும்.

அண்மையில் நடைபெற்ற மாமன்றத்தின் 48வது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் நந்திக் கொடியை சகல ஆலயங்களிலும் பறக்கவிடுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும் என்பதை மாமன்றம் தீர்மானமாக வலியுறுத்தி இருப்பதுடன் அதனை மேலும் முன்னெடுத்துச் செல்கிறது.

சைவ மத நிறுவனங்கள் பாடசாலைகள், மற்றும் சைவப் பெருமக்களின் வீடுகளிலும்கூட நந்திக் கொடியைப் பறக்கவிடப்படவேண்டும். அதேவேளையில் சைவ விவகாரங்கள் சம்பந்தப்பட்ட விழாக்கள், வைபவங்கள், மற்றும் பண்டிகைக் காலத்தின்போதும், ஆலய உற்சவ காலங்களிலும் நந்திக் கொடி ஏற்றப்படவேண்டும் என்பதையும் மாமன்றம் வலியுறுத்துகின்றது. நமது நாட்டில் மட்டுமல்ல, உலகளாவிய ரீதியிலும் எங்கெல்லாம் சைவப் பெருமக்கள் வாழ்ந்து வருகிறார்களோ அங்கெல்லாம் நந்திக்கொடிக்கு உரிய முக்கியத்துவம் அளித்து பறக்கவிடுவது மட்டுமன்றி, தேவையான காலங்களில் ஏற்றப்படவும் வேண்டும்.

மாமன்றத்தின் காலாண்டிதழான "இந்து ஒளி"யின் ஒவ்வொரு வெளியீட்டிலும் நந்திக் கொடியின் தனித்துவ சிறப்பை வெளிப்படுத்தும் வகையிலான கட்டுரைகளை வெளியிட்டு வருகின்றோம்.

சைவப் பெருமக்கள் அனைவரும் இந்தப் புனிதமான கைங்கரியத்தை மலரவிருக்கும் 2005ம் ஆண்டு புதுவருடத் தீர்மானமாகக் கைக்கொள்ளுவதுடன், எதிர்வரும் சிறப்புத் தினங்களில் குறிப்பாக - தைப்பொங்கல், மகாசிவராத்திரி, சித்திரைப் புத்தாண்டுக் காலங்களில் நந்திக்கொடிக்கு உரிய மதிப்பையும் முக்கியத்துவத்தையும் வழங்கவேண்டும் என்பதும் மாமன்றத்தின் அன்பு வேண்டுகோளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# “ஆதியும் அந்தமுமில்லா அரும் பெரும் சோதி” யாம் சிவசோதி



குமாரசாமி சோமசுந்தரம்

சிவபெருமான் பேரொளிப் பிழம்பாக உள்ளான். அவன் ஒளிக்கடவுள். சிவப்பிரகாசம் சொல்லுந்தரமன்று சூரியன், சந்திரன், அக்கினி, நட்சத்திரங்கள் யாவும் ஒளியைத் தருகின்றன என்றால், அவை எந்த மூலத்திலிருந்து தத்தம் ஒளியைப் பெற்றுக் கொள்கின்றன. சிவப்பிரகாசம் தான் அவற்றிற்கும் ஒளியைக் கொடுத்து, அவற்றின் ஊடாக இந்தப் பூமி மற்றும் பிரபஞ்சத்திலுள்ள எல்லா அண்டங்களுக்கும் சராசரங்களுக்கும் ஒளியை வழங்கும் மூல ஒளியாகத் திகழ்கின்றது. ஒரு விளக்கிலிருந்து பல விளக்குகள் ஏற்றப்படுவது போல, ஆதியும் அந்தமுமில்லா அரும் பெரும் சோதியாம் சிவப்பிரகாசத்திலிருந்து எல்லா ஒளிகளும் ஒளியைப் பெற்று ஒளிர்கின்றன. சிவசோதியே மூலப் பேரொளி.

“ஒளிவளர் விளக்கு” என்றும் “மாமணிச் சோதியான்” என்றும் “சோதியே! சுடரே! சூழொளி விளக்கே!” என்றும் “அருளுடைச் சுடரே” என்றும் இறைவனைச் சோதி நிலையில் தரிசித்த அருளாளர்கள் அவனின் தோற்றம் பற்றி விவரித்துள்ளனர். பிரம விட்டுணுக்களுக்கும் சிவபெருமான் பெரும் சோதியாகவே காட்சியளித்தான். அந்தச் சோதி, சிவசோதியே என்பதை உணர்த்த, இலிங்கோற்பவத்தையும், மகாசிவராத்திரி நடுநிசியில் நிகழ்த்திக் காட்டினான்.

எல்லாச் சுடர் விளக்கும், சூட்டையும் ஒளியையும் சேர்த்தே தரும். ஆனால் சிவசோதி, அருளுடைச் சுடர் ஆக விளங்குவதால், அது நம்மைச் சுடுமோ என்று ஐயுற வேண்டியதில்லை. அது அருள் நிறைந்த சுடர், கருணைமயமான தண்ணொளிச் சுடர். அது நமக்கு இதத்தையே செய்யும். பரத்தையும் நல்கும். அந்த அருட் பெருஞ்சோதியானது ஞானச் சுடர் ஆகவும் ஒளிர்கிறது. “ஞானச் சுடர் விளக்காய் நின்றாய் நீயே” என்கிறார் அப்பர் சுவாமிகள்.

எமது துன்பங்களுக்கெல்லாம் காரணம், நம்மிடத்தில் காணப்படுகின்ற அறியாமை. அறியாமை என்னும் இருள் அகல வேண்டுமானால், ஞானச் சுடர் பிரகாசிக்க வேண்டும். அந்த ஞானச் சுடராக விளங்குபவன் இறைவன் சுடர் என்றால், ஒளி என்று பொருள்படும்.

*“உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாகின்*
*வாக்கினிலே ஒளி உண்டாகும்”*

என்பது மகாகவி பாரதியின் வாக்கு. நாம் ஒவ்வொருவரும் உள்ளத்தில் இறை ஒளியைப் பிரகாசிக்கச் செய்ய வேண்டும். இறை ஒளியே உண்மை ஒளி. சத்தியமே சிவம்; சிவமே சத்தியம் – அதாவது மெய்ப் பொருள்.

மின்குமிழின் உள்ளேயும் புறத்தேயும் அழுக்குப் படிந்திருந்தால், மின்னொளி வெளியில் பிரகாசிக்காது. இலாம்புச் சிமினியும் புகை படிந்திருந்தால் அதனுள் எரியும் திரியிலிருந்து ஒளி வெளி வராது. அவ்வாறே, எமது உள்ளங்களிலும் பொறாமை, ஆசை, செருக்கு, தற்பெருமை, வஞ்சகம், சூது, கோபம், பகைமை, காமம், பொய் போன்ற அழுக்குகளும், அசுத்தங்களும் கசடுகளும் நிறைந்திருந்தால், இறை ஒளி அங்கு தோன்றாது. சிவப்பிரகாசம் இருக்காது. உள்ளத்தில் உண்மை ஒளி தோன்றிப் பிரகாசிப்பதற்கு, இந்த அழுக்குகள், அசுத்தங்கள் என்பன அகற்றப்படுதல் வேண்டும். அதற்கு மனித முயற்சியும் இறைவன் அருளும் நமக்குத் தேவை.

உள்ளத்தில், அதாவது தூய உள்ளத்தில் தோன்றும் உண்மை ஒளி; தூய்மையான நல்ல எண்ணங்களையும், சிந்தனைகளையும் அங்கு பிறப்பிக்கும். இந்த ஞானச் சுடர், அறியாமை என்னும் இருளையும், அதைப் பிறப்பிக்கின்ற ஆணவம் என்னும் கொடிய இருளையும் துரத்திவிடும். அந்த உள்ளத்து உண்மை ஒளி, வாக்கையையும் சுத்தப்படுத்திப் பேச்சிலும் ஒளியேற்றும், அப்போது, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி, அமைதியைக் கெடுக்கும் பொய்ப் பேச்சுக்கள், போலிப் பேச்சுக்கள், வீண்பேச்சுக்கள், விஷப்பேச்சுக்கள் எல்லாம் நீங்கி விடும். “யாகாவாராயினும் நாகாக்க” என்ற வள்ளுவனார் வாய்மொழிக்கும் செவிசாய்த்தவராவோம்.

உள்ளத்திலும், பேச்சிலும் உண்மை ஒளியாம் சிவஒளி பிரகாசிக்கையில், எமது செயல்களிலும், பிரசாசிக்கும் என்பது உறுதி. அதன் வழி, எமது வாழ்விலும் ஒளி ஏற்படும். வாழ்வு ஒளிமயமானதாக; சீரும் சிறப்பும் நிறைந்ததாக; திருவும் கல்வியும் ஆன்மிகமும் பொலிந்ததாக விளங்கும்.

சைவர்களால் கோயில் என்று அழைக்கப்படுவது சிதம்பரம். அங்கு ஸ்ரீ நடராசப் பெருமான் இடைவிடாது திருநடனஞ் செய்து கொண்டிருக்கிறார். அத்திருநடனமே இந்த உலகமும் அண்ட சராசரங்களும் இயங்கிக் கொண்டிருப்பதற்குக் காரணம். உலக இயக்கம் நின்று விடக்கூடாது; இயற்கை ஒழுங்கு சீர்கெட்டு விடக்கூடாது என்பதற்காக எம்பெருமான் ஆடல்வல்லான் தில்லையில் கனகசபையில் சதா ஆடிக் கொண்டிருக்கிறான்.

*“குனித்த புருவமும் கொவ்வைச் செய்வாயிற் குமிண்சிரிப்பும்*
*இனித்தசடையும் பவளம் போல் மேனியிற் பால்வெண்ணீறும்*
*இனித்தமுடை எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்*
*மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே”*

அப்பர் சுவாமிகள் இவ்வாறு ஸ்ரீ நடராஜப் பெருமானின் தெய்வீகப் பொலிவையும் ஆனந்த நடனத்தையும் கண்ணாக் கண்டு வருணிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவெம்பாவை உற்சவம் சிறப்பாக நடைபெறுவது சிதம்பரத்திலேயாகும். திருவெம்பாவை பாடிய வாயால் திருக்கோவையும் பாடி, மாணிக்கவாசக சுவாமிகள் சாயுச்சிய முத்தியடைந்த திருத்தலம் சிதம்பரம். திருவெம்பாவைக் காலத்தில் சிதம்பரம் சென்று தரிசனம் செய்தல் சிறப்பானது. அது எல்லோருக்கும் இயலக் கூடியதன்று. அதனால், தாம் வாழும் பிரதேசங்களிலுள்ள திருக்கோயில்களுக்குச் சென்று சிவகாமசுந்தரரி சமேத ஸ்ரீநடராஜப் பெருமானை உள்ளன்போடு வழிபாடு செய்யலாம். திருவருள் சித்திக்கும்.

எமது உள்ளத் தாமரையில் ஸ்ரீ நடராஜப் பெருமான் சதா ஆனந்த நிருத்தஞ் செய்து கொண்டிருக்கிறார். எமது உள்ளம் சித்தாகாசம் ஆகும். இதனை உணரும் பக்குவம் பெற்றவர் தம் உள்ளத்திலே நடராஜ தரிசனம் காணலாம். கண்டு சதா ஆனந்தத்தில் திளைக்கலாம். இத்தகைய பக்குவத்தை எவ்வாறு அடையலாம் என்ற கேள்வி எழுகிறது. மனம் வைத்தால் அது மிகச் சுலபம். ஒன்று இறைவன் திருவருள் வேண்டும். அடுத்தது மனத்தில் தூய்மை வேண்டும். தூய்மை எவ்வாறு எய்தப்படலாம்?

அழுக்காறு, அவா, வெகுளி அகந்தை, மமதை, ஒவ்வாத சிந்தனைகள், காமம் முதலிய மாசுகளை மனத்திலிருந்து அகற்றிவிட்டால் மனந்தூய்மை எய்தப் பெற்றுவிடும்.

உள்ளத்தை மறைத்துக் கொண்டிருக்கும் இந்த இருள் திரை விலகியதும், உள்ளே நடராஜப்பெருமானின் திருநடனத் தோற்றம் பட்டவர்த்தனமாக நமக்குத் தெரிகிறது.

சிதம்பரத்திலே ஞானசபையில் சிவபெருமான், சிவகாமி அம்மையார் காண, ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அனவரதமும் ஆனந்தத் தாண்டவம் செய்யும் அற்புதக் காட்சியை அப்படியே உள்ளத்திலும் காண்கின்றோம்.

கோடி சூரியருடைய ஒளிப் பிரகாசம் தவழும்பொன்னார் திருமேனி புன்முறுவலோடு கூடிய ஒரு திருமுகமும்; முக்கண்ணும்; கங்கையும் பிறையுங் கொன்றை மாலையுந் தாங்கிப் பரந்து விரிந்த திருச்சடையும்; வலது திருச் செவியில் குண்டலமும், இடது திருச் செவியில் திருத்தோடும்; திருநீலகண்டமும்; டமருகம் பொருந்திய திருக்கரம், அபயகரம், அக்கினியகல் ஏந்திய திருக்கரம், டோளகரம் ஆகிய நான்கு கரங்களும்; புலித்தோலை ஆடையாகக் கொண்ட திருஅரையும் முயலகன் மீது ஊன்றிய வலது திருப்பாதமும்; தூக்கிய இடது திருவடியும் கொண்டிலங்கும் அழகுத் திருக்காட்சியாக ஆடல் அரசனின் திருக்கோலம் அமைகிறது. அருகே, சிவகாமியம்மையார், பச்சை மேனியும் திருக்கழுத்திலே பொருந்திய திருமங்கல சூத்திரமும்; செங்கழுநீர் மலர்பிடித்த வலது திருக்கரமும்; கடிக்கீழ்த் தொங்கவிட்ட இடது திருக்கரமும், மிக ஒடுங்கிய திருநிலையும் உடையராய் காட்சியளிக்கிறார். இத்தெய்வீகக் காட்சிகளைக் கண்ணாரக் கண்டு களிக்கத்தான் மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே என்று அவாவி நிற்கின்றோம்.

தேவர்களுக்கும் வேறு கணங்களுக்கும் கிடைக்கப் பெறாத தில்லைக் காட்சி மனிதப் பிறவி எடுத்தவர்களுக்குத்தான் கிடைக்கப் பெறுகிறதென்றால், மனிதப் பிறப்பின் அருமையும் பெருமையும் தான் என்னே! நமக்குக் கிடைத்த இம்மனிதப் பிறவியை நாம் துஷ்பிரயோகம் செய்தல் கூடாது. கிடைத்த அரியவாய்ப்பினை நழுவவிடல் விவேகம் ஆகாது. பிறவியின் நோக்கத்தை அறிந்து நாம் எதற்காக இங்கு வந்தோமோ, வந்த வேலையை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ யாதுமறியாதவர்கள் நாம்.

காரைக்காலம்மையார், வியாக்கிரபாதர், பதஞ்சலி, அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலிய பல அநுபூதிமான்கள் நடேசப் பெருமானுடைய ஆனந்த நடனத்தை நேரில் தரிசித்து, துதித்து சிவானந்தப் பெருவாழ்வு பெற்றவர்கள்.

அந்தச் சிவநிலைக்கு ஒப்பாக, உவமையாக, உயர்வாக எதுவும் இல்லை. அதனால், சிவமே எம் தலைவர்; தனிப் பெருந்தலைவர்; எம் எல்லோருக்கும் அம்மையும் அப்பருமாக உள்ளது. எமக்கு அன்பு சொரியும், அருள் வழங்கும், கருணை பொழியும், ஞானம் தரும் மாபெரும் மூலமும் முதலுமாக இருக்கின்றது. அதுவே சிவம் என்னும் செம்பொருள் சிவம் ஆனது குளிர்ச்சியும் கருணையும் நிறைந்த சுத்தசத்தியை இணைத்துக் கொண்டு அதனுடன் ஐக்கியமாக உள்ளது. சிவசக்தி, எம்மை ஈன்ற தாயிலும் பார்க்கப் பரிந்து நாம் கேட்டவற்றையும் எமக்குத் தேவையானவற்றையும் வழங்குகிறது.

இந்த மண்ணையும் வானையும் அதற்கு மேல் விண்ணையும் தாங்கி நிற்பது சிவம். உண்மை என்றும் பரம்பொருள் என்றும் அதையே அழைக்கின்றோம். தீயாக சூரியனாக, சந்திரனாக ஒளி தருவதும்; குருவாக, தந்தையாக, தாயாக விளங்குவதும் அந்தச் சிவம் என்னும் பரம் பொருளே தாமாகவே விரும்பி எம்மீது கருணை மழை பொழிகின்ற தையல் ஆக, பெண்மையாக சுத்த சக்தியாக விளங்குவதும் சிவமே ஆகும்.

அந்தச் சிவபரம் பொருளை, சுத்த சக்தியை நோக்கி பெண்கள் அனுட்டிக்கும் விரதங்களிலே மார்கழி நோன்பு, தொன்று தொட்டு முக்கியத்துவம் பெற்று வருகிறது. இதனை மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவெம்பாவை நமக்கு உணர்த்துகிறது. குடும்பம், சமூகம், நாடு என்பன நலன்பெற வேண்டுதல் செய்தலே மார்கழி நோன்பின் நோக்கமாகும். இவ்விரதத்தைப் பெண்கள் நோற்கிறார்கள் என்றால் அத்தகைய நலன்களில் பெண்கள் எத்துணை சிரத்தை கொண்டிருந்து வந்துள்ளனர் என்பதை உணரமுடிகின்றது.

மார்கழி மாத நன்னாள்களில், அதிகாலைவேளை கொட்டும் பனிக்குளிரையும், தூறும் மழையையும் பொருட்படுத்தாமல், தாமும் துயிலெழுந்து, தோழியரையும் துயில் உணர்த்தி இறைவனைப் புகழ்ந்து பாடியவாறு, ஆறு முதலிய நீர்நிலைகளுககுச் சென்று நீராடி, அகப் புறத்தூய்மையராய், கன்னிப்பெண்கள் இறைவன் முன் தம் விருப்பங்களை முன்வைப்பதை திருவெம்பாவைப் பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. சிவனும் சக்தியும் தம் நியாயமான வேண்டுதல்களை நிறைவேற்றுவர் என்று கன்னிப் பெண்கள் நம்புகின்றனர். தமக்கு வரவேண்டிய கணவர் சிவபக்தராக விளங்கவேண்டும் என்பதை வெளிப் படுத்துகின்றனர். அத்தகைய கணவர் கிடைக்கப் பெற்றால் தமக்கு என்ன குறையும் இருக்காது என்று பெண்கள் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்*
*உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்*
*அன்னவரே எங்கணவராவார் அவருகந்து,*
*சொன்ன பரிசே தொழும்பாய் பணி செய்வோம்.*
*இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்*
*என்ன குறையுமிலோம் ஏலோ ரெம்பாவாய்"*

என்பது திருவெம்பாவை தரும் செய்தி.

மார்கழி நோன்பின் முதல் நோக்கம் நல்ல கணவரை அடைதல். அவ்வாறு நல்ல கணவர் கிடைப்பாரானால் "எங்கெழிலென் ஞாயிறு எமக்கு ஏலோ ரெம்பாவாய்"என்கிறார்கள் கன்னிப் பெண்கள் எனத் திருவெம்பாவைப் பாடலடி குறிப்பிடுகின்றது. அதாவது சூரியன் எங்கு உதித்தாலும் அவர்களுக்குக் கவலையில்லை. நோன்பின் இரண்டாவது நோக்கம் சமூகமும் நாடும் வளமுறவும் செழிக்கவும் மழை வேண்டுதல்.

"....................எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவனமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்னப், பொழியாய் மழை ஏலோரெம்பாவாய்"

என்னும் திருவெம்பாவைப் பாடலடி மழை வேண்டுதலை உணர்த்துகின்றது.

எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்த பொங்குமடுவில், மார்கழி நீராடும் போது, சிற்றம்பலம்பாடி, வேதப் பொருள்பாடி, சோதி திறம்பாடி, ஆதிதிறம்பாடி, பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன் பாதத்திறம்பாடித்தான் அப்பெண்கள் நீராடுகின்றனர். அத்தகைய உத்தமப் பெண்கள் கேட்ட வரம் நிச்சயம் கிடைக்கும். சைவ பக்தி உணர்வுக்கும் மேன்மைக்கும் கிடைத்த வெற்றி இதுவாகும்.

---

**அபிராமி அந்தாதி**

### நோய்கள் விலக

*மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த*
*அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்*
*பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே*
*பணியேன் ஒருவரை நின்பத்மபாதம் பணிந்தபின்னே.*

இஃது அபிராமி அந்தாதியில் ஒரு பாட்டு. நோய்கள் விலக அம்மனின் அருள் வேண்டி பாடக்கூடிய பாடல். இப்படியான நாளாந்த வாழ்க்கை சிறப்புற வழிவகுக்கும் வழிபாட்டுப் பாடல்கள் கொண்ட சிவ வழிபாட்டு மலரினை மாமன்றம் வெளியிட்டிருக்கிறது.

## தீபமங்கள ஜோதி

இருளை விலக்கி ஒளி கொடுப்பது விளக்கு. அஞ்ஞான இருளை நம் மனதிலிருந்து நீக்கி, ஒளி பொருந்திய ஞானம் தருவது விளக்கின் ஒளி விளக்கிற்கு ஜாதி மத பேதமில்லை. எல்லா இடத்து இருளையும் நீக்கும். தினமும் காலை, மாலை இருவேளையும் வீடுகளில் தீபம் ஏற்றுவது அவசியம். பெண்கள் செய்யக்கூடிய பூசைகளில் மிகவும் சிறந்தது, தலைமையானது திருவிளக்கு பூசை. இதை ஆலயங்களில் பலர் சேர்ந்து செய்யும்போது கிடைக்கும் பலனும் அதிகம். விளக்கை பெண்கள் ஏற்றுவதே சிறப்பு. விளக்குகளில் வெள்ளி விளக்கு, ஐம்பொன், பித்தளை, வெண்கல விளக்குகள் சிறப்புடையன.

மண்ணினால் செய்யப்பட்ட அகல் விளக்குகள் மிக விசேஷமானவை. ஆதிகாலத்தில் இவையே உபயோகத்தில் இருந்தன. அகல், எண்ணெய், திரி, சுடர் இவை நான்கும் சேர்ந்தே விளக்கு இவை அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களையும், சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு சாதனங்களையும் குறிப்பன. ஆலயங்களில் எண்ணெய் ஊற்றி விளக்கேற்றுவதால் முத்தி கிடைக்கும்.

(நன்றி : ஞானபூமி)

## மாமன்ற வெளியீடு

### சிவ வழிபாட்டு மலர்

இறைவனை தினந்தோறும் பிரார்த்தனை செய்து வழிபாடியற்றும் வகையில் அமைந்துள்ள பாராயண நூலாக 'சிவ வழிபாட்டு மலர்' வெளிவந்துள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வெளியீடான இந்த நூலுக்கு வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் வழங்கியிருக்கும் முன்னுரையில் தெரிவித்திருப்பதை இங்கு நோக்குவது பொருத்தமாக இருக்கும்.

"மான்றம் அரியதொரு பாராயண நூலை வெளியிடுவது போற்றத்தகும் நல்லதொரு பெரும் பணியாகும். இது காலத்தோடொட்டிய பணி. இது அனைவருக்கும் பாராயணம் பண்ணுவதற்கு உகந்தது. இதிலுள்ள அனைத்தும் மனப்பாடஞ் செய்து, தினமும் சுவாமியறையிலே குடும்பத்துடன் ஓதிச் சிவனை வழிபடத்தக்கன."

மாமன்றத்தின் இலவச வெளியீடான இந்நூலில் ஞாயிறு முதல் சனிவரை ஓதக்கூடிய பஞ்சபுராணங்கள், மற்றும் திருவாசகம், திருவெம்பாவை, கந்தசஷ்டி கவசம், போற்றித் திருவகவல், அபிராமி அந்தாதி என்பன உள்ளடக்கம் பெற்றுள்ளன.

இந்நூலை பெற விரும்புவோர் ரூபா 15/= பெறுமதியான முத்திரைகளை மாமன்றத்திற்கு அனுப்பி, தபாலில் பெற்றுக்கொள்ளலாம்.

**அகில இலங்கை இந்து மாமன்றம்**
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு -2.
தொலைபேசி: 2434990, தொலைநகல் : 2344720

*சொல், செயல், சிந்தனையால் பிறரையும், பிற உயிர்களையும் துன்புறுத்தாமல் இருப்பது அகிம்சை. இந்நெறியே மனித வாழ்க்கைக்கு அடிப்படையாகும்.*
(சுவாமி கமலாத்மானந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பமே எந்நாளும் துன்பமில்லை

திருமதி கௌரி இரத்தினவேல் B. A, Dip in Edu.
ஆசிரியை கொ/ இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்றார் ஔவையார். ஆம்! உலகிலே பிறவியெடுத்த உயிர்கள் இன்பப் பேற்றையே நாடுகின்றனர். இஃது இயற்கைப் பேரின்பம் அடைதலே மானிடப் பிறிவியின் பயன். ஆனால் நாம் அன்றாடம் வாழ்க்கையில் காணும் ஒவ்வொரு மக்களதும் வாயிலிருந்து வரும் சொற்களாக 'எங்கே இன்பம்? எங்கே நிம்மதி' என்றவையாக இருக்கின்றன. எங்கே நிம்மதி அங்கே எனக்கோர் இடம் வேண்டும் என்று கவிஞர் பாடினார். இன்பம், நிம்மதி ஆகியவற்றைத் தேடியலையும் மனிதகுலம் பெரும்பாலும் துன்பத்தையே சந்திக்கின்றனர். இவை இவ்வாறிருக்க இப் பூவுலகில் சரியை நெறி நின்று எண்பத்தொரு ஆண்டுகள் வாழ்ந்த அப்பர் சுவாமிகள் "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்று பல்லவர் காலத்தில் கூறியிருக்கின்றார். இந்த அற்புதவாக்கு மனித குலத்தின் குறிக்கோள்களையும் சைவத்தின் உள் நோக்கத்தையும் பறைசாற்றி நிற்கின்றது.

நாம் இவ் வையத்துள் வாழும்போது என்ன செய்கின்றோமோ அதைப் பொறுத்தே வாழ்வு இன்பத்தின் உறைவிடமாகவும் அல்லது துன்பத்தின் தொடர் கதையாகவும் அமைந்து விடுகிறது. நாம் செய்யும் நல்வினை, தீவினைக்கு ஏற்ப பிறவி எடுக்கின்றோம். இன்னும் எத்தனையோ பிறவிகள் எடுக்கக்கூடும். இதற்கு முன்னரும் எத்தனையோ பிறவிகள் எடுத்திருக்கக்கூடும். மணிவாசகர் அருளிய திருவாசகம் என்னும் தேனில் "புல்லாகிப் பூடாகிப் புழுவாகி மரமாகி பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாய்....." என்பது நோக்கத்தக்கது.

"கன்மம் என்றால் வினை. அது நல்வினை, தீவினை என இரு வகைப்படும். புண்ணியஞ் செய்த உயிர்கள் நல்ல சூழ்நிலையில் பிறந்து இன்பத்தை அனுபவிக்கும். பாவம் செய்த உயிர்கள் துன்பத்தை அனுபவிக்கும். நல்வினையும் தீவினையும் பிறவிக்கு வித்தாதலால் நல்வினையை பொன் விலங்குக்கும், தீவினையை இரும்பு விலங்குக்கும் ஒப்பிட்டுக் கூறுவர்.

யோகர் சுவாமிகள் நாம் பிறக்கும் காலத்தையும், இறக்கும் காலத்தையும் எமது உலக வாழ்க்கை அமைய வேண்டிய விதி வழியையும், எமக்குள் இயங்கும் அழியாத மெய்ப்பொருளான ஆத்மா ஏற்கனவே நிர்ணயித்து வைத்திருக்கும் இந்த உண்மையையே, எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்" என்று வேதவாக்கியமாக கூறியுள்ளார். திருமூலரும் திருமந்திரத்தில் இதனை உறுதிப்படுத்துகின்றார்.

*"முடிவும் பிறப்பையும் முன்னே படைத்த*
*அடிகள் உறையும் அறநெறி நாடில்*
*இடியும் முழக்கமும் ஈசன் உருவம்*
*கடிமலர்க் குன்றம் மலையதுவாமே"*

பட்டினத்தடிகளும் இந்தக் கருத்தையே ஆன்மா முற்பிறப்புகளில் எடுத்த உடம்புகள் செய்த தீவினைகளின் கன்ம பலனே இப்பிறப்பில் விதிவழியாய் நின்று செயற்படுகின்றது என்று கூறி எப்பவோ முடிந்த காரியமாக விளக்கி அவற்றின் பலாபலன்களைத்தான் நாம் அனுபவிக்கின்றோம் என்று காட்டுகின்றார்.

*என் செயலாவதி யாதொன்றுமில்லை இனித்தெய்வமே*
*உன்செயலேயென்று உணரப் பெற்றேன் இந்தவூனே*
*பின்செய்த தீவினை யாதொன்று மில்லை பிறப்பதற்கு*
*முன்செய்த தீவினையோ இங்ஙனமே வந்து மூண்டதுவே*

நான் செய்த பாவவினைகளின் பலனாக என் ஆன்மா எனக்குப் பகைவனாயும் அறவினைகளால் நண்பனாகவும் நிற்கின்றது. என் வினைகளின் பலனாகவே எனது இப் பிறப்பும் நடந்து கொண்டிருக்கின்றது. இவையெல்லாம் எப்பவோ முடிந்த காரியம். எமது அடுத்த பிறப்பும் எமது வினைகளாலேயே அமையும். ஒருவன் செய்த வினைகளின் பயனை அவன் எடுக்கும் பிறப்புக்களில் அனுபவிப்பான். தனக்குள் இயங்கும் ஆன்மாவே தனக்குத் தலைவனாய் நிற்கும் இறைவன் என்று திருமந்திரம் எடுத்துக் காட்டுகின்றது.

*"தானே தனக்குப் பகைவனும் நட்டானும்*
*தானே தனக்கு மறுமையும் இம்மையும்*
*தானே தான் செய்த வினைப்பயன் துய்ப்பானும்*
*தானே தனக்குத் தலைவனுமாமே"*

கர்ம வினையால் விளையும் விதிவழியை யாராலும் மாற்றமுடியாது. அனுபவித்தே தீரவேண்டும். அவரவர் தலையெழுத்து எப்பவோ முடிந்த காரியம் என்பர். ஆனால் விதியை வெல்லும் மார்க்கமொன்றுண்டு. இறைவனையே அந்தி சந்தி சிந்தி நெஞ்சே என்று அவ்வழியே சுவாமி அவர்கள் காட்டியுள்ளார். அவ்வழியே திருமூலரும் மிகத் தெளிவாக திருமந்திரத்தில் எடுத்துக் காட்டுகின்றார்.

*"நிற்கின்றபோதே நிலையுடையான் கழல்*
*கற்கின்ற செய்மின் கழிந்தறும் பாவங்கள்*
*சொற்குன்றலின்றித் தொருமின் தொழுதபின்*
*மற்றொன்றிலாத மணி விளக்காமே"*

எமது நாட்டில் உதித்த முக்காலத்தையும் உணர்ந்த தத்துவஞானி யோகர் சுவாமி, எமக்கு அளித்திருக்கும் அமுத வாக்குகளை நற்சிந்தனைகளை அறிந்து, உணர்ந்து அதன்வழி நின்று எமது மானிடப் பிறப்பின் நோக்கத்தைப் பூர்த்தி செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். மனிதன் இன்பம் காண்பதற்கு துறவியாக வேண்டும் என்பதில்லை. இம் மானிடப் பிறவி மிக மிக உன்னதமானது. தாயுமானவர்,

*'இப் பிறவி தப்பினால் எப்பிறவி*
*வாய்க்குமோ பராபரமே' என்கிறார்.*

ஆன்மீக விடுதலை அடையும் வழியையும் நமது இந்து மதம் காட்டுகின்றது. எமது இந்து மதமானது நாம் எந்தெந்த காலத்தில் எதையெதைச் செய்ய வேண்டுமோ அதை அந்தந்த பருவத்தில் செய்வதன் மூலம் அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றை அனுபவித்துவிட்டே விடுதலை அடையக் கூறுகின்றது.

அதாவது பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப் பிரஸ்தம், சன்னியாசம் என்ற நான்கு நிலைகளில் நின்று கடமைகளைச் செய்தல் வேண்டும்.

"கற்க கசடற கற்பவை" கற்கும் பிரமச்சரிய நிலையில் ஒழுக்கம் பேணி, ஐயம் திரிபறக்கற்க வேண்டும். கிருகஸ்த நிலையில் செவ்விய வழியில் பொருளை ஈட்டி தானம், தருமம் செய்து நன்மக்களைப் பெற்று சமுதாயத்திற்கு உறுதுணையாக நிற்க வேண்டும். இங்கு இல்லறத்தானின் கடமைகளை தெய்வப் புலவர் வள்ளுவர் ஈரடி வெண்பா திருக்குறளில் பின்வருமாறு கூறுகின்றார்.

*"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தானென்று ஆங்கு*
*ஐம்புலத்தார் ஒம்பல் தலை"*

வானப்பிரஸ்த நிலையில் கணவனும் மனைவியும் ஆத்மிக வாழ்க்கையில் ஈடுபட வேண்டும். இன்றைய நவீன உலகத்தில் இந் நிலையில் உள்ளோர் உலகியல் வாழ்வில் ஈடுபட்டு தமது பேரப்பிள்ளைகளைப் பராமரிக்கின்றனர். சன்னியாச நிலை என்பது முற்றுந் துறந்து இறை சிந்தனையுடன் காட்டில் தவம் செய்தலாகும். இன்று அவ்வாறான நிலை இல்லையென்றே திட்டமாகக் கூறலாம். "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என கச்சியப்பசிவாச்சாரியார் சைவநீதி உலகில் விளங்க வேண்டும் என கந்த புராணத்தில் பாடியுள்ளார். ஆனால் இன்று கலியுக காலத்தில் நடப்பது என்ன? மக்கள் நிதியை உயிருக்கு உயிராக நேசிப்பதால் சுயநலவாதிகளாகக் காணப்படுகின்றார்கள். நீதியும் நிதியாக மாறி விடுவதால் சைவசமய மதுர வாழ்வின் இன்பத்தை எல்லோராலும் நுகரமுடியாமையால் குழப்பமும் அமைதியின்மையும் மக்கள் வாழ்விலும் சூழ்நிலையிலும் உண்டாவதை அனுபவ வாயிலாக உணர்கின்றோம். எவ்வாறாயினும் இன்றைய உலகை உற்று நோக்குமிடத்து இயந்திரமாக மாறிக் கொண்டிருக்கும் மனிதனின் தினசரி வாழ்வில் ஏற்படுகின்ற மனக்குழப்பங்களும், பிரச்சனைகளும், சஞ்சலங்களும் மனித மனதை ஆட்டிப் படைக்கின்றன. பிரச்சினைகள், துன்பங்கள், சிக்கல்கள் இருப்பது தமக்கு மட்டும் தான் என்று எண்ணுவது கூடாது. தமக்கு கிடைக்காமற் போனதைப் பற்றி கவலைப்படுவதை விட தமக்கு கிடைத்தவற்றை எண்ணி திருப்தி அடைய வேண்டும். மனதை ஒருமுகப்படுத்தி இறைவனை நாடுதல் வேண்டும். துக்கம் அனைத்திற்கும் காரணம் பற்று. நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்திலோ பொருளிலோ பற்று வைத்திருக்கின்றோம். மகாபாரதத்தில் அர்ச்சுனனுக்கும் தனது உற்றார், உறவினர், ஆசாரியர் ஆகியோரிடம் பற்று இருந்து. அதனால் தான் அவர்களது அழிவை எண்ணியதும் மனம் கலங்கியது. பற்றை நீக்குவதே துக்கம் அனைத்தையும் போக்குவதற்கு வழியென பகவான் கிருஷ்ணன் "கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே" என உபதேசிக்கின்றார்.

நிலையற்ற உலகப் பொருள்களில் பற்று ஒழிவதற்கு நிலையான இறைவனை பற்றி நிற்றல் வேண்டும்.

*"பற்றுக பற்றற்றான் தாளினைப் பற்றுக*
*பற்று விடற்கு"*

என்கிறார் வள்ளுவர்.

ஸ்ரீ சாரதாதேவி அம்மையாரும் உலகத்தாருக்கு குடும்பமே இறைவனுடையது. எனவே இறைவன் எந்தப் பணியை உனக்கு விதித்திருந்தாலும் நீ இறைவனை முற்றிலும் சார்ந்திருந்து அந்தக் கடமையை உன்னால் இயன்ற வரையில் சிறப்பாகச் செய். உன்னை வேதனையும், துன்பமும் நெருங்கும் பொழுது குருதேவரிடம் பிரார்த்தனை செய். அவர் உனக்கு வழி காட்டுவார் என்று கூறியிருக்கின்றார்.


பத்தாம் திருமுறை ஆகிய திருமந்திரத்தில் திருமூலரும்

*"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்*
*வான் பற்றி நிறைமறை பொருள் சொல்லுவன்*
*பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்*
*பற்றப் பற்றத் தலைப்படும் தானே"*

இந்து மதம் மக்கள் இன்பமாக வாழ்வதற்கு சிவலிங்க பூசை செய்தல், திருமுறைகளை ஓதுதல், துதித்தல், திருவைந்தெழுத்து மந்திரங்களை செபித்தல், விரதங்களை அனுட்டித்தல், உண்மை பேசுதல், மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணங்களைத் தூய்மையாக வைத்திருத்தல், பிற உயிர்களிடம் அன்பும் பரிவும் காட்டல், அன்னதானம் செய்தல், ஆன்ம சுத்தி செய்தல் ஆகியன இன்றியமையாதன எனக் கூறுகிறது.

*'அவன் அருளாலே அவன் தாள் வணங்கி'*
*ஆன்ம ஈடேற்றம் அடைவோமாக.*

**க**டவுளிடத்திலே சிந்தனையைச் செலுத்துபவன் கடவுளின் அருள் மயமாகின்றான்.



"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சேநீவா
நித்திலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலவர்தன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல் சேர் செஞ்சடையெம் மாதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ நந்திகேஸ்வரர் நமஹ



*சிவக்கவிமணி*

**திருமதி செல்வநாயகி முத்தையா**

"நந்தி" என்ற பதத்திற்கு சந்தோசம் என்று பொருள். பிறரைச் சந்தோசப்படுத்துபவரும் அவரே. நந்திக்கு முன்னால் 'ஆ' சேர்த்தால் 'ஆனந்தி' வருகிறது. ஆனந்த மயமே நந்தி. சந்தோசம் நிலைத்திருப்பதன்று. ஒரு காலத்தில் மறைந்து விடக்கூடியது. ஆனால் ஆனந்தமோ என்றும் நிலைத்திருக்கக் கூடியது.

நந்தி, நம்பன் முதலியவை இறைவனின் பெயர்கள். தேவர் என்பதும் நந்தியின் பெயர். தேவர்களுக்குரிய சிறப்பு அமிர்தம் உண்டவர். பொன்னுலகத்தில் உள்ளவர் முதுமை இல்லாதவர். காளைப் பருவமுடையவர். நல்லனவற்றைச் செய்து புகழுடம்புடையவர். மேன்மை பெற்றவர் என்பதாகும்.

*ஆதியிலும் திருநந்தி அநாதியிலும் திருநந்தி*
*வாதனையால் விளையாட வருமிடமும் திருநந்தி*
*தீதிலாத திருநந்தி திகழ்பெருமை திசை முகனார்*
*ஓதிடினும் அவர்க்குவாய் ஒரு கோடி போதாவே*

என்று ஞானக் கூத்தர் நந்திப் பெருமான் பெருமையைக் கூறியிருக்கின்றார்.

அவர் நம் பாவம் அறுத்தவர் என்பதை செம்பொருளாகத் திறன் தெரிந்து நம் பலமறுத்த நம் நந்திவானவன் எனக் குறிப்பிடப்படுகிறது. அவதார விளக்கம்:

நந்திகேசுவரர் இப் பூவுலகில் ஜனித்து பேறு பெற்றதைப் பற்றி அறிய பஞ்சநத க்ஷேத்திரம் என்கிற திருவையாறு ஸ்தல புராணத்தை நாட வேண்டும். திருவையாற்றில் சிலாத முனிவர் என்கிற மகா தபஸ்வி ஸ்ரீ பஞ்சாக்ஷர சித்தியின் பொருட்டு வந்து தங்கி துர்வாஸமஹரிசியின் ஆக்ஞைப்படி கல் பொடிகளை ஆகாரமாகக் கொண்டு ஸ்ரீ ஐப்யேஸ்வரர் சன்னிதியில் அமர்ந்து ஜபம் செய்து மந்திர சித்தியைப் பெற்றார்.

கற்களை ஆகாரமாகக் கொண்டதால் இவருக்கு 'சிலாதர்' என்ற பெயர் ஏற்பட்டது. இவர் வசிஷ்டருடைய தங்கையாகிய சாருலக்ஷணையை மணந்து சைலாதர் என்கிற புத்திரனைப் பெற்றார். இப் புத்திரன் கிடைத்த வரலாறு பின்வருமாறு.

மகப்பேறின்மையால், வருத்தமுற்று சிலாத முனிவர். ஐயாரப்பனை பூசித்து வழிபட்டு வந்தார். புத்திரகாமேஷ்டி யாகம் செய்யும் படியும் அப்படி யாகம் செய்யும்போது பூமியிலிருந்து புத்திரன் கிடைப்பான் என்றும் அசரீரி வாக்கு கூறியது. அப்படியே பூமியை உழும்போது ஒரு பெட்டி கிடைத்தது. அதை சிலாதர் திறந்து பார்த்தபோது நான்கு தோள்களும் மூன்று கண்களும் சந்திரனை அணிந்த முடியுடன் கூடிய ஒரு மூர்த்தியைக் கண்டார். பெட்டியை மூடித் திற என்று அசரீரி கேட்டது. அவ்வண்ணமே மூடித் திறந்ததும் ஒரு அழகான குழந்தை அதில் காணப்பட்டது. பெற்றோர்கள் இவருக்கு சைலாதர் என்ற பெயரிட்டு வளர்த்து வந்தார்கள்.

இவர் இறைவனை நோக்கி கடுமையாக தவம் செய்ததால் பாதிக்கப்பட்ட உடம்பை சீர்படுத்த கங்கை நீர், மேகநீர், பிரமன் கமண்டல நீர், அம்மையின் ஸ்தனப் பால் இடப நந்தியின் வாஸ்துரை நீர் என்கிற ஐந்து நீரினால் குளிப்பாட்டப்படவே சைலாதர் உடல் குறைகள் அகன்றன. சைலாதர் ஐயாறப்பனின் உபதேசம் பெற்று கயிலையில் சிவகணங்களுக்குத் தலைவர் பதவியையும் முதல் திருவாயிலில் இருந்து காக்கும் உரிமையும் சைவாச்சாரியர்களின் முதல் குருவாகும் தன்மையையும் பெற்றார்.

சைலாதர் திருவையாற்றில் சிவனைக் குறித்து கடும் தவம் இயற்றினார். அவர் இவர் முன் தோன்றி சைலாதர் விரும்பிய படியே சிவந்நிதானத்தினின்றும் என்றும் விலகாத வரம் அருளி சிவகணங்களுக்கெல்லாம் தலைமையாய் விளங்கும் அதிகாரமும் தந்து பட்டாபிஷேகம் செய்தருளினார். இவருடைய பட்டாபிஷேகத்திற்காகவே பஞ்சநதிகள் வரவழைக்கப்பட்டன. அப்போது தான் பரமேஸ்வர சாரூப்யத்தையும் ரிஷப முகத்தையும் நந்தி தேவர் என்ற தீக்ஷா நாமத்தையும் இரத்தினப் பிரம்பையும் இறைவன் இவருக்கு அருளினார்.

நந்திகேஸ்வரர் வசிஷ்ட மகரிசியின் பௌத்திரியும், வியாத்ர பாத முனிவரின் புத்திரியும் உபமன்யன் என்பவரது சகோதரியுமான சுயம் பிரபை என்பவளை மணந்தார். இத் திருமணம் திருமழப்பாடி என்ற ஸ்தலத்தில் நடைபெற்றதென்றும், இறைவனே இதை முன்னின்று நடத்தி வைத்ததாகவும் புராணங்கள் கூறுகின்றன. திருமழப்பாடி விருத்தாச்சலம் திருச்சி பாதையில் புள்ளம்பாடி ஸ்டேசனுக்கு கிழக்கே பன்னிரண்டு மைலில் கொள்ளிடக் கரையில் உள்ளது.

இத்தலத்தில் இறைவன் எதிரில் நந்திகேஸ்வரர் நின்ற கோலத்தில் எழுந்தருளியிருக்கிறார். இந்த நந்திதேவரின் திருமணவிழா பங்குனிமாதத்தில் நடைபெறுகிறது. திருவையாற்றிலிருந்து ஐயாரப்பனும் அறம் வளர்த்த நாயகியும் மணமகனான அதிகார நந்தியுடன் மணப்பெண் வீடான திருமழப்பாடிக்கு எழுந்தருளுகின்றார்கள். இந்த மழப்பாடி மணாளரை தரிசனம் செய்யவே ஏராளமான கூட்டம் இவ்விழாவின்போது கூடுகிறது.

நந்திதேவர் சிவகணங்களுக்குத் தலைவராக விளங்குபவர் சிவபெருமான் திருக்கோயில் வாயிலின் முன்புறம் உடைவாளும் பொற்பிரம்பும் ஏந்தியபடி நந்திதேவர் காவல் புரிகிறார். நந்திதேவரின் அனுமதியின்றி பிரம்மாதி தேவர்களும், முனிவர்களும், அணிமாதி சித்தர்களும் எம்பெருமானைத் தரிசிக்க முடியாது. திருக்கோயிலுக்குள் செல்ல முடியாது. அவரிடம் உத்தரவு பெற்ற பிறகே செல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாலயங்களுக்குச் செல்லும் நாமும் முதலில் நந்தி தேவரை வணங்கி அதன் பிறகே எம்பிரானைத் தரிசிக்கச் செல்ல வேண்டும். பிரதோச காலங்களில் இறைவனுக்குச் செய்யப்படும் எல்லா வழிபாடுகளும் நந்திதேவருக்குச் செய்யப்படுகின்றன.

ஊழிக் காலத்தில் ஏழு கடல்களும் ஒன்றாகி உலகம் அனைத்தும் அதனுள் ஒடுங்கி எல்லாமே இறுதியில் சிவபெருமானுக்குள் அடங்கிவிடும். அனைத்துயிர்களும், பிரம்மாதி தேவர்கள், முனிவர்களனைவரும் சிவனுக்குள் ஒடுங்கி விடுகின்றனர். அந்த நேரத்தில் நந்தி தேவர் மட்டும் சிவனருளால் சிவனுக்குள் ஒடுங்காமல் அவருக்கு வாகனமாக விளங்குகிறார். ஆகவே தான் பிரதோச காலத்தில் நந்தி தேவருக்கும். இறைவனுக்கும் அபிஷேக ஆராதனைகள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன.

நந்தி தேவர் ஒப்புமையிலாப் பெருமை நிறைந்தவர். தருமத்தின் வடிவமாய்த் திகழ்பவர். பஞ்சாட்சரத்தின் வடிவமானவர் இறைவனைச் சுமந்து செல்லும் வாகனமாக இருக்கும் சிறப்பினைப் பெற்றவர். பிரமன், திருமால், இந்திரன், தேவர்கள் மற்றும் முனிவர்களால் போற்றித் துதிக்கப்படுபவர். கயிலாய மலையில் பரமேஸ்வரன் உமாதேவியுடன் நவரத்தின மயமான பொன்னூஞ்சலில் அமரும் போது அவர்களுக்கு எதிரிலே காட்சிதரும் ரிசப் தேவனின் மூச்சுக் காற்றுப்படுவதினால் அந்த ஊஞ்சல் மிக அழகாக ஆடும். அதன் காரணமாகவே சிவபெருமான் சந்நிதிக்கு முன்பாக நந்தி தேவர் காட்சி அளிக்கிறார்.

இத்தகைய சிறப்புமிகு நந்தி எம்பெருமான் வேறு இறைவன் வேறு அல்ல என்பதை தேவாரப் பாடல்களில் எம்பெருமானைப் போற்றிப் பாடும். தேவாரம் பாடிய செல்வக் குழந்தையாம் திருஞானசம்பந்தர்.

'தேவாரம்' 'பழநகர்'

*வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு வெள்ளையெருதேறிப்*
*பூதஞ்சூழப் பொலிய வருவார் புலியி னுரிதோலார்*
*நாதா எனவும் நக்கா எனவும் நம்பா என நின்று*
*பாதந் தொழுவார் பாவந்தீர்ப்பார் பழன நகராரே* என்றும்

திருவெண்காடு

*கண்காட்டும் நுதலாலுங் கனல் காட்டுங் கையானும்*
*பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்*
*பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்*
*வெண்காட்டில் உறைவாளும் விடைகாட்டுங் கொடியானே*

இறைவன் தன் கொடியிலே சின்னமாக ஏற்றிருக்கிறார். நந்தியை பிரதோஷகாலங்களில் நந்தி தேவருக்கு நெய்விளக்கேற்றி வெல்லம் கலந்த பச்சரியை நிவேதனம் செய்வார்கள். வில்வ இலையால் அர்ச்சனையும் அலங்காரமும் அருகம் புல் ஆராதனையும் நடைபெறுவதுண்டு.

சிவன் கோவிலில் தரிசனம் செய்யும்போது நந்திகேஸ்வரருக்கு இடப்புறமாகச் சென்று சிவபெருமானைத் தரிசித்து. நந்திகேஸ்வரரை வலம் வந்து அவர்பின் நின்று மீண்டும் சிவபெருமானை தரிசித்து விட்டுச் செல்ல வேண்டும்.

'திருமூலர்'

*நந்தியருளாலே நாத நாம்பேறு பெற்றோம்*
*நந்தியருளாலே மூலனை நாடினோம்*
*நந்தியருளாவது என் செய்யும் நாட்டினில்*
*நந்திவழிகாட்ட நான் இருந்தேனே.*

அவனருளாலே அவன்றாள் வணங்கி வாழ்வோமாக.

## பண்டிதர் இ. வடிவேல் அவர்களின் மறைவுக்கு

# மாமன்றத்தின் அனுதாபம்



**தி**ருகோணமலையைச் சேர்ந்த மூதறிஞர் பண்டிதர் இ. வடிவேல் அவர்கள், கடந்த நவம்பர் மாதம் முதல்வாரத்தில் காலமானார். அவரது மறைவையொட்டி, மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் விடுத்திருந்த அனுதாபச் செய்தியை. 'இந்து ஒளி' பிரசுரம் செய்கிறது.

"மறைந்த முதுபெரும் சமய அறிஞர் ஞானசிரோன்மணி பண்டிதர் இ. வடிவேல் ஈழத்து தமிழ் இலக்கிய சமயத் துறையில் என்றுமே மறக்கப்பட முடியாதவர். அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமான திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் காப்பாளர்களுள் ஒருவராகவிருந்து அவர் ஆற்றிய சமயப் பணிகள் என்றென்றும் போற்றத்தக்கன. பேரவையினால் ஏற்பாடு செய்து நடத்தப்படும் பன்னிரு திருமுறை முற்றோதும் நிகழ்வு உட்பட பேரவையின் பல்வேறுபட்ட செயற்பாடுகளுக்கு பண்டிதர் வடிவேல் பெரும் பங்களிப்பைச் செய்துவந்துள்ளார்.

இவர் திருக்கோணேஸ்வரம் தொன்மையும் வன்மையும், திருமுறைப் பண்ணிசை திறனாய்வு உட்பட பல சமய ஆராய்ச்சி, மற்றும் தமிழ் இலக்கிய நூல்களை எழுதியிருப்பதன் மூலம், ஈழத்து அறிஞர்கள் வரிசையில் சிறப்பாகப் போற்றப்படுகிறார்.

பல அறிஞர்களைத் தோற்றுவித்த கிழக்கிலங்கையில் தோன்றிய பண்டிதர் வடிவேல் அவர்களது மறைவு கிழக்கு மாகாணத்திற்கு குறிப்பாக, திருகோணமலைப் பகுதிக்கு பெரும் இழப்பாகும்.

அன்னாரின் மறைவையொட்டி அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பில் அவரது குடும்பத்தினருக்கும், திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்."

*தன்னைத்தான் அடக்கிக் கொள்ள இயலாதவனை அவனது சினமே அழித்து விடுகிறது.*

(சாணக்கியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக் கோட்பாடுகளில் காணப்படும் ஒழுக்கவியல் சிந்தனைகள் – ஒரு கண்ணோட்டம்

கி. புண்ணியமூர்த்தி B.A., Dip. in Edu.M.Ed
*விரிவுரையாளர், மட். தேசிய கல்விக் கல்லூரி*

"இந்துக்களின் ஒழுக்கப் பெறுமானங்கள் தற்காலத்தில் குறைந்து கொண்டு வருகின்றன. இந்துக் கோட்பாடுகள் வலியுறுத்தி நிற்கும் ஒழுக்கப் பெறுமானங்கள் பற்றிப் பலருக்குத் தெரியாததாகவே உள்ளது. அது தவிர பலர் தங்களுக்கென்றே வெவ்வேறு ஒழுக்கப் பெறுமானங்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர். இந்துக்களின் வாழ்க்கையின் அடிப்படையே ஒழுக்கமாகும். ஏனையமதங்களிலிருந்து இந்து மதம் தனித்துவமாக மதிக்கப்படுவதும் இந்து ஒழுக்கத்தின் அடிப்படையிலே என்றால் அது மிகையாகாது.

இன்றைய இளம் சந்ததியினருக்கு இந்துக் கோட்பாடுகள் எடுத்துக் கூறும் ஒழுக்கம் பற்றி எடுத்து விளக்கவும் அவர்கள் இவ்வறிவினைப் பெற்று அவற்றிற்கு மதிப்பளித்துப் பின்பற்றவும் வழி செய்வதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும். உலகில் இன்று தோன்றியுள்ள பல்வேறு போட்டிகள் , பூசல்கள், இன அழிவுகள் இயற்கை அழிவுகள், இன்னல்கள் இவையாவற்றிற்கும் மத்தியில் மனிதனால் வாழமுடிகிறது என்றால் அதற்குக் காரணம், இன்னும் ஒழுக்கம் ஒரு சிலராலாவது பின்பற்றப்படுவதேயாகும்.

## அறமும் ஒழுக்கமும்

ஒழுக்கமும் குறிக்கோளுமில்லாத மனிதனோ, சமூகமோ செம்மையுறவோ, நிலைக்கவோ முடியாதென்பார். உயிர்களைப் படைத்த தந்தையாகக் கடவுளைக் கருதுமிடத்து மக்கள் மத்தியில் பரவசமும், பக்தியும் ஏற்படுகிறது. இதனடிப்படையில் பொது அமைதிக்கு வேண்டிய ஒழுக்க நெறிகளைப் பேணும் உணர்வு வலுக்கவும் அது உதவியாகின்றது.

அறம் என்பது நீதி நூல்களில் " விதித்தன செய்தலும் , விலக்கியன ஒழிதலும்" என விளக்கப்படுகிறது. அறம் மூவகைப்படும். அவையானவன ஒழுக்கம், வழக்கு, தண்டம் என்பனவாகும். இவற்றுள் ஒழுக்கம் என்பது ஒருவர் தமக்கு விதித்த நெறியில் வழுவாது நிற்றலாகும். இந்நெறியில் நிற்பவர்கள் அறநெறியில் நிற்பவர்களாகவே கருதப்படுவர்.

*"மெய்ம்மை பொறையுடைமை மேன்மை தவமடக்கம்*
*செம்மை ஒன்றின்மை துறவுடைமை – நன்மை*
*திறம்பா விரதந் தரித்த லோடின்ன*
*அறம் பத்தும் ஆன்ற குணம்"*

என்பது அறநெறிச்சாரச் செய்யுளாகும். இச் செய்யுளின்படி உண்மைபேசுதல், பொறுமையாயிருத்தல், உயர்வாயிருத்தல், தவவுடைமை, அடக்கவுடமை, நடுவுநிலைமை, தனக்கென வாழாது பிறர்க்கு உதவுதல், அவாவின்மை, நல்லன செய்தல், நல்ல விரதங்களை அனுட்டித்தல் என்பன பத்து அறங்கள் என இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வறங்களைக் கடைப்பிடித்து வாழும் வாழ்க்கையே ஒழுக்க நெறிசார்ந்த வாழ்க்கை எனலாம்.

## வேதங்கள் காட்டி நிற்கும் ஒழுக்க கருத்துக்கள்

"பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம் " எனவும் "நாகரிகம் என்பது மக்களின் திருந்திய வாழ்க்கை" எனவும் தேவநேயப்பாவாணர் விளக்கியுள்ளார். வேதகாலப் பண்பாடும் ஒழுக்கம் நிறைந்த பண்பாடாகவே உள்ளது. வேத கால மக்கள் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களாக இருந்தார்கள். பிறர் நன்மைக்காகக் காரியங்கள் செய்தனர். "என்னுடைய மனம் பிறர்க்கும் , எனக்கும் நன்மையான எண்ணங்களைக் கொள்ளவும், எந்த உயிருக்கும் துன்பம் செய்யாதிருக்கவும் நல்லிச்சைகளை மாத்திரம் உடையதாக அருளுக, அது என்றும் எப்பொழுதும் நன்மைகளை நாடுவதாக" என்பன போன்ற கூற்றுக்களிலிருந்து அக்கால மக்களின் பரந்த மனப்பான்மையை விளங்கிக் கொள்ளலாம்.

வேதகால மக்கள் நரகம், மோட்சம் போன்றவற்றில் நம்பிக்கை கொண்டிருந்ததால் மக்கள் அறவழியில் நின்று அதன்படி ஒழுகினர். மக்கள் ஒற்றுமையாக வாழ ரிஷிகள் முயற்சி செய்தனர்.

இயற்கை ஓர் ஒழுங்கில் ஒரு நியதியில் இயங்குவதை வேதகால ரிஷிகள் "ரிதம்" என அழைத்தனர். மனிதன் ஒழுக்கம் தவறும்போது ரிதத்தின் தெய்வமான வர்ணன் (ரிதாயு. ரிதர்ஷியகோபா) மழை, புயல் போன்ற ஆபத்துக்களை ஏற்படுத்துவான் என அஞ்சினான். அதனால் ஒழுக்கத்தைப் பின்பற்றுவதில் அக்கறை செலுத்தினர். இதனால் ஒழுக்கம் எனும் சிந்தனை இயற்கையாகவே தோற்றம் பெற்றது எனலாம். மனுதர்மசாஸ்திரம் "வேதோ கிலோ தர்ம மூலம்" எனக் கூறுகிறது. அதாவது சகல தர்மங்களுக்கும் வேதமே மூலம் என மனுஸ்மிருதி கூறி நிற்கிறது.

வேதங்களில் வர்ணன் ஒரு விறலுடைய பேரரசனாகக் கருதப்பட்டான். "இறப்பிலிருந்து இறவாமைக்கு இட்டுச் செல்வாயாக, தீமையிலிருந்து நன்மைக்கு இட்டுச் செல்வாயாக, நாமாகவே செய்த பாவங்களிலிருந்தும் எமது மூதாதையர் செய்த பாவங்களிலிருந்தும் எம்மைக் காப்பாயாக" எனும் பாடல்கள் வர்ணனின் சிறப்பிற்கு எடுத்துக் காட்டுகளாகும்.

வேதகால மக்கள் எளிய வாழ்க்கை வாழ்ந்தனர். அரசனே மக்களின் தலைவனாக இருந்தான். குடும்பத்தில் ஆண்மகன் தலைவனாக இருந்தான். அவர்களின் சாதிப்பாகுபாடு காணப்படவில்லை. தொழிலில் ஏற்றதாழ்வு இருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்யவிவாகம் இருக்கவில்லை. இல்லறத்தில் ஆணும், பெண்ணும் சமமாகவே இருந்தனர். உடன்கட்டை ஏறும் வழக்கம் காணப்பட்டதற்குச் சான்றுகள் இல்லை. ஒழுக்கத்தைப் பேணும் வகையில் ஆடைகள் ஆபரணங்கள் இருந்தன. உழைப்பை மேலாகக் கருதினர். எனவே வேதகால மக்கள் சமயரீதியிலும், சமூகரீதியிலும், பண்பாட்டு ரீதியிலும் நல்லொழுக்கத்தை பேணினர் எனலாம்.

### உபநிடதங்களில் காணப்படும் ஒழுக்கக் கருத்துக்கள்.

மக்கள் தங்களின் குறிக்கோள்களின்படி வாழ்க்கையின் பயனை அடைவதற்கு ஒழுக்கம் இன்றியமையாததென்று உபநிடதம் கூறுகிறது. ஒழுக்கம் என்பது மேலான அல்லது செவ்விய நெறி என உபநிடதம் வரையறுக்கின்றது. மறுபிறப்புக் கோட்பாடு உபநிடதங்களில் விதைந்துரைக்கப்படுகிறது. மறுபிறப்பு பற்றிய சிந்தனையே ஒரு மனிதனை ஒழுக்கமுடையவனாக வாழத் தூண்டுகிறது எனலாம். ஒருவரது வினைப் பயனிற்கேற்பவே அவரது பிறப்பு அமைகிறது. "வினைப் பயனை எல்லோரும் அநுபவித்தே ஆக வேண்டும்." என்று உபநிடதம் கூறுகிறது.

வினைப்பயனிலிருந்து நீங்குவதானால் பந்த பாசங்களிலிருந்து நீங்குதல் வேண்டும் அதற்கு இறைவனது அருள் தேவை. இறையருளை பக்தி மார்க்கத்திலேயே அடைய முடியும். பக்தி மார்க்கத்தைப் பின்பற்ற நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்தல் அவசியம். பக்தி மார்க்கத்தினூடாகவே ஞான மார்க்கத்தை அடைய முடியும். ஞான மார்க்கம் என்பது அறிவினால் உய்ந்துணர்ந்து இறைவனுடன் ஒன்று சேர்தலைக் குறிக்கும்.

முத்திக்கு வழியாக உபநிடதம் ஒழுக்கத்தையே காட்டுகிறது. நிலையானவைகளையும், நிலையற்றவைகளையும் பிரிந்துணர்தல், தன்னலக் காரியங்களிலிருந்து விடுபடுதல், நம்பிக்கை, மன அமைதி, தன்னடக்கம், துறவு மேற்கொள்ளல், பொறுமை, மனதை ஒருமைப்படுத்தல், பொறுமை, மனதை ஒருமைப்படுத்தல், வீடுபேறடைய அதிக விருப்புக் கொள்ளல் ஆகிய பண்புகளை வளர்த்துக் கொள்ளல் முத்திக்குரிய வழியாகும். அது தவிர சிரவணம், மனனம், நித்தியாசனம் போன்ற வழிமுறைகளையும் உபநிடதம் காட்டி நிற்கிறது. "ஆன்மாக்கள் தமது அவத்தையிலிருந்து விடுபட்டுப் பிரமத்துடன் இணைய தியானம் சிறந்த கருவி" என முண்டக உபநிடதம் குறிப்பிடுகிறது.

தைத்திரிய உபநிடதத்தில் "மாத்ரு தேவா பவ" (தாயைத் தெய்வமாகப் போற்று) "பித்ரு தேவா பவ" (தந்தையைத் தெய்வமாகப் போற்று) "ஆச்சார்ய தேவா பவ" (குருவைத் தெய்வமாகப் போற்று) எனும் கருத்துக்கள் காணப்படுகின்றன. அத்துடன் செல்வத்தைப் புறக்கணிக்காதே, விருந்தினரை தெய்வமாகக் கருது. உனக்காக மட்டுமின்றி நாட்டிற்கு பயன்படுமாறு ஏராளமான உணவினை உண்டாக்கு, எவருக்கும் இடமில்லை என்று சொல்லாதே, இதுவே ஒழுக்கம் என்று உபநிடதங்கள் கூறுகின்றன.

உபநிடதங்களில் காணப்படும் சத்திய காமன், ஐபாலா கதையின் மூலம் "பிறப்பு எவ்வாறு இருந்தாலும், நல்லொழுக்கத்தை உடையவர்கள் உயர்ந்த சாதியினராகவே கருதப்படவேண்டும்" என்ற உண்மையை உணர்ந்து கொள்ள முடிகிறது. அதாவது தமது ஆரம்பக் கல்வியை ஒருவர் கற்பதாக இருந்தால் சிறந்த குருவிடம் சென்று தன் வர்ணத்தையும் குறிப்பிட வேண்டும். ஆனால் சத்திய காமன் தனது தந்தை, யாரெனத் தனக்கு தெரியாது எனும் உண்மையைக் குருவிடம் கூறினான். உண்மை கூறியபடியால் நீ உயர்ந்த குலத்திலேயே பிறந்திருக்க வேண்டும். எனக் கூறி குரு கல்வி போதித்தார்.

கட உபநிடதத்திலும் நசிகேதன் தனது தந்தையிடம் "கிழட்டுப்பசுவைத் தானம் கொடுக்க வேண்டாம்" என வேண்டினான். இது அவனது அறப்பண்பைக் காட்டுகிறது. எனவே உபநிடதங்களில் காணப்படும் ஒழுக்கக்கருத்துக்கள் ஒருவரின் ஆன்ம ஈடேற்றத்திற்கு வழி காட்டுபவையாக உள்ளன எனலாம்.

### இதிகாச புராணங்களில் காணப்படும் ஒழுக்கக் கருத்துக்கள்.

இதிகாசங்களின் சாரம் ஒழுக்கக் கோட்பாட்டை வலியுறுத்துவதாகவே உள்ளது. ஒரு ஆண் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இராமன், தர்மன் போன்ற கதாப்பாத்திரங்களும், ஒரு பெண் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு சீதை, திரௌபதை போன்ற கதாப்பாத்திரங்களும் எடுத்துக் காட்டப்படுகின்றன. இதிகாசங்களும், புராணங்களும் நெறியில்லாநெறியில் வாழ்ந்தோர்க்கு ஏற்பட்ட அல்லல்களும், நெறிபிறழாமல் வாழ்ந்தோருக்கு ஏற்பட்ட நல்லவைகளும் பற்றி உணர்த்துகின்றன. மகாபாரதத்தில் கதைகள், உபகதைகள் மூலமாக ஒழுக்கம் வலியுறுத்தப்படுகின்றது. குடும்ப ஒழுக்கம், சமூக ஒழுக்கம், அரச ஒழுக்கம் ஆகியன கூறப்பட்டுள்ளன.

தண்டநீதி, வர்ணதர்மங்கள் முதலியன பற்றியும் மகாபாரதம் வலியுறுத்தப்படுகிறது. சத்தியம், தவம், கொல்லாமை, கல்விஞானம், விசாரநோக்கு, கடமை என்பன மகாபாரதத்தின் இலட்சியங்களாகும். தனிமனிதன், குடும்பம், சமூகம் ஆகியன பின்பற்றவேண்டிய நீதிமுறைகள். குருகுலக்கல்வி முறைகள், குருபக்தி ஆகியன கூறப்பட்டுள்ளன. பெண்களின் நிலைகளும், உரிமைகளும் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

அரச ஒழுக்கத்திற்கு மகாபாரதம் புதிய விளக்கம் கொடுக்கின்றது. அரச ஒழுக்கத்திற்கு விதுரனும், தர்மத்தின் தலைவனாக தர்மனும் வர்ணிக்கப்படுகின்றனர். தர்மத்தை நிலைநாட்டுவதே அரச தர்மம் எனப்படுகிறது. மகாபாரதத்தில் "துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனமே" அரசர்க்குரிய கருமம் எனப்படுகிறது. இதிகாசங்களில் காணப்படும் ஒவ்வொரு கதாபாத்திரமும், ஒழுக்கத்தின் பிரதிபலிப்பாகவே உள்ளன. பெரியோரை மதித்து நடக்கும் பண்பில் இராமனும், வீமனும் எடுத்துக்காட்டான கதாப்பாத்திரங்களாகவே உள்ளனர். தர்மன் தான் பொறுமையைக் கடைப்பிடிப்பதுடன் மற்றவர்களையும் பொறுமையை கடைப்பிடிக்குமாறு வேண்டுகிறான். விருந்தோம்பலுக்கு சீதையும், திரௌபதையும் எடுத்துக் காட்டாக விளங்குகிறார்கள். ஏகபத்தினி விரதத்திற்கு இராமன் ஆதாரமாக உள்ளான். சகோதரத்துவத்திற்கு இலக்குமணனும், பரதனும் இலக்கணமாக விளங்குகின்றனர். இராமன் குகனைத் தோழனாக ஏற்றமை நட்பிற்கு இலக்கணமாகும். நன்றி மறவாமைக்கு இலக்கணமாக கர்ணனும், கும்பகர்ணனும் விளங்குகின்றனர். கொடைக்கும் கர்ணனே எடுத்துக்காட்டாக உள்ளான். இராமன் அறவழியிலே பொருளை, இன்பத்தை அனுபவிக்கின்றான். தன்னலமற்ற சேவைக்கு இலட்சுமணன், அனுமான் போன்றோர் காட்டப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச ஒழுக்கத்திற்குரிய அடிப்படைக் கருத்துக்களை கம்பராமாயணம் தன்னகத்தே கொண்டுள்ளது. "ஒரு மன்னனானவன் நீதியை நிலைநாட்டுவதற்காக துலாக்கோல் ஆட்சியையும் மது மாது அற்றவனாகவும் சத்திய தர்மத்தைக் கடைப்பிடிப்பவனாகவும், தன்னுயிரைப்போல் மன்னுயிரையும் நினைப்பவனாகவும் வாழவேண்டும்". என கம்பராமாயணத்தில் வசிட்டர் இராமனுக்கு அறிவுரை வழங்குகிறார்.

இராமன் இராவணனை "இன்று போய் நாளை வா" என்றது அவனது சத்திரிய தர்மத்தைக் காட்டுகின்றது. குருஷேத்திரப் போரின் போது சோர்ந்துநின்ற அர்ச்சுனனைப் பார்த்து கிருஷ்ணன் "தர்மத்தை நோக்குமிடத்து நீ மனம் நடுங்கலாகாது. அறப்போரைக் காட்டிலும் வேறு சிறப்பு அரசனுக்கில்லை அரசனது உயிருக்கு மேலானது அறம்" எனக் கூறுவது அரச ஒழுக்கத்திற்கு ஆதாரமான கருத்தாகும். குருஷேத்திரப் போர் நன்மைக்கும், தீமைக்கும் இடையிலான போராட்டமாகவே உள்ளது. இறுதியில் நன்மையே ஜெயிக்கிறது.

மகா புராணங்களிலும் ஒழுக்கம் பற்றிய பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. யாகம், தவம், தீர்த்தம், விரதம், அர்ச்சனை, சிவசின்னங்கள், தர்மம், பூசை என்பன பற்றியெல்லாம் புராணங்கள் கூறுகின்றன. உதாரணமாக அக்கினி புராணம் விநாயக விரதத்தின் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது. மார்க்கண்டேய புராணத்தில் மார்க்கண்டேயரின் பக்தியின் சிறப்பும் , பாகவத புராணத்தில் பிரகலாதன், அர்ச்சுனன் போன்றவர்களின் பக்தி சார்ந்த சீரிய வாழ்க்கை நெறிகளும் எடுத்துக்காட்டப்படுகின்றன. தமிழ்ப் புராணங்களான பெரிய புராணம், கந்தபுராணம் போன்றவையும் ஒழுக்கக் கருத்துக்களை நிலைநிறுத்துவதற்காகத் தோற்றம் பெற்றவையென்றே கொள்ள முடிகிறது. எனவே இதிகாச புராணங்கள் ஒழுக்கம் நிறைந்த இலட்சியவாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைக் கருத்துக்களைக் கொண்டுள்ளன எனலாம்.

## ஆகமங்களில் காணப்படும் ஒழுக்கக் கருத்துக்கள்

ஆகமங்கள் ஒழுக்க வாழ்விற்கு வழிகாட்டுகின்றன. ஆன்மாக்கள் மலமாசு நீங்கப்பெற்று மேலான வீடுபேற்றை அடைவதற்கு ஆகமங்கள் பல்வேறு வழிமுறைகளைக் காட்டி நிற்கின்றன. நாம் ஒவ்வொருவரும் நல்லொழுக்கத்தின் பொருட்டும் ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டும் தினமும் செய்ய வேண்டிய கடமைகளையும் அனுசரிக்க வேண்டிய ஒழுக்கங்களையும் கூறுகின்றன. பூசைகள், விழாக்கள், ஆலய தரிசனம், ஆலயக் கிரியைகள், சைவசமயிகள் பின்பற்றவேண்டிய ஆசார அநுஷ்டானங்கள், சிவசின்னங்கள் அணிதல், சிவதீட்சை, திருமந்திரம் என்பவை பற்றியெல்லாம் ஆகமங்கள் கூறுகின்றன. இவை தவிர ஆகமங்கள் ஆன்ம ஈடேற்றத்திற்கு அடிப்படையான சரியாபாதம், கிரியாபாதம், யோகாபாதம், ஞானபாதம் ஆகிய நாற்பாதங்களையும் எடுத்துக் காட்டுகின்றன.

ஆகமங்களில் அந்தியேட்டி விதி, சிரார்த்தவிதி, சந்நியாவந்தனம், பூசை, செபம், ஓமம், சமய, விஷேட நிர்வாண தீட்ஷைகள், ஆசாரியார் அபிடேகம், சிவப்பிரசாதம் உண்ணல் முதலிய பல்வேறு விடயங்கள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக யோகாபாதத்தில் இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகரம், தியானம், தாரணை, சமாதி ஆகிய அட்டாங்கயோக இயல்பும், மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை ஆகிய ஆதாரங்களின் முறைமையும் கூறப்பட்டுள்ளன.

அட்டாங்க யோகத்தில் ஒன்றான இயமத்தில் கொல்லாமை, வாய்மை, கள்ளாமை, இரக்கம், வஞ்சனையின்மை, பொறாமையுடமை, அற்பாகாரம், சுகியுடமை ஆகிய ஒழுக்கப் பண்புகளும் நியமத்தில் தவம், கடவுள் உண்டெனும் விசுவாசம் பாவத்திற்குப் பயந்து தேடிய பொருளைச் சற்பாத்திரமாய் உள்ளவருக்குக் கொடுத்தல். தன்னின் மூத்தோரை வழிபடல், உயிர்க்கு உறுதிபயக்கும் உண்மை நூல்களைக் கேட்டல், குலம், செல்வம், அதிகாரம் முதலியவைகளினாலே கர்வமின்றி அடங்கி ஒழுகுதல் தக்கனவும் தகாதனவும் பகுத்தறிதல், செபம், விரதம், ஆகிய ஒழுக்கப் பண்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே ஆகமங்களில் பல்வேறு ஒழுக்கக்கருத்துக்கள் நிறைந்திருப்பதை அறிந்து அதன்படி ஒழுகுதல் நமது கடமையாகும்.

## பகவத் கீதையில் காணப்படும் ஒழுக்கக் கருத்துக்கள்

உபநிடதம், பிரம்மசூத்திரம், பகவத்கீதை ஆகிய மூன்றும் பிரஸ்தான திரயங்களாகக் கொள்ளப்படுகின்றன. ஒருவன் எப்படி வாழவேண்டும்? எப்படி வாழக்கூடாது? என பகவத்கீதை தெளிவாகக் கூறுகின்றது. "அஞ்சாமை, அகத்தூய்மை, ஞானயோகங்களில் ஊன்றல், ஈகை, புலனடக்கம், வேள்வி, கல்வியறிவு, தவம், நேர்மை, இன்னாசெய்யாமை, வாய்மை, சினமின்மை, துறவு, பிறர் தீமை கருதாமை, உயிர்த்தயை, பிறன்பொருள் விழையாமை, மென்மை, நாணம், மன உறுதி, துணிவு, பொறை, உறுதி, தூய்மை, வஞ்சகமின்மை, செருக்கின்மை எல்லாம் தெய்வ இயற்கைக்கு பிறந்தவனுக்கு இயல்பாகின்றன." (16: 1–3) என்று கீதை சொல்கின்றது. அது தவிர கீதை அசுரகுணத்தவர் பற்றிக் குறிப்பிடும் போது "பகட்டு, செருக்கு, அகங்காரம், சினம், கொடுமை, அறியாமை, தூய்மையேனும், ஒழுக்கமேனும், வாய்மையேனும் காணப்படாமை எல்லாம் அசுர இயற்கைக்குப் பிறந்தவனுக்கு இயல்பாகின்றன." (16:4–7) என்கிறது. இதிலிருந்து ஒரு மனிதன் நல்லொழுக்கத்தைப் பேண வேண்டியதன் அவசியம் எடுத்துக்காட்டப்படுகிறது.

இந்துமதம் காட்டும் நல்லொழுக்கங்களை கடைப்பிடித்து வாழ்க்கையில் வெற்றியடைய "உனக்குள் இருந்து உழலும் உன்னைச் சிறைப்படுத்திக் கொள்" எனக் கீதை கூறுகிறது. அத்துடன் "நன்று செய்தவன் எவனும் தீய நிலையடையான்" (6:40) எனும் கருத்திற்கேற்ப கீதை நல்லொழுக்கத்தை எடுத்து விளக்குகிறது. தர்மத்தை நிலைநாட்டவே அவதாரம் இடம்பெறுவதாக கீதை கூறுகிறது. "துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலக" என்பதே கீதையின் கருத்தாகும். அறமே எல்லாவற்றிலும் மேலானது என்பது கீதையில் வலியுறுத்தப்படுகிறது. பலன் கருதாது கடமை புரிவது மேலான ஒழுக்கம் என கீதை கூறுகிறது. நிஷ்காமிய கர்மம் ஒரு வழிபாடாகும். அது வேத உபாசனைக்கும், வேதப்பாராயணத்திற்கும், ஞானநெறிக்கும் ஈடேற்றத்தைப் பொறுத்தவரையில் ஒப்பானதாகும். எனவே கீதை காட்டும் வழியில் நின்று நல்லொழுக்கங்களைக் கடைப்பிடித்து நற்பேறடைவது நம் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தர்மசாஸ்திரங்களில் காணப்படும் ஒழுக்கக் கருத்துக்கள்:

மனுநீதியின் பொருட்டு விதித்தன செய்தலையும் விலக்கியன தவிர்த்தலையும் வற்புறுத்தும் நூல்கள் தர்ம சாஸ்திரங்களாகும். தனி மனிதனுக்கும், சமூகங்களுக்கும் அன்றாடவாழ்க்கை நெறிகளையும் வழிகாட்டத்தக்க விதிகளையும் கூறும் வகையில் ஸ்மிருதிகள் சிறப்புப் பெறுகின்றன. சரியான வழிகளைத் தெரிந்து சமய வாழ்வு வாழத் தேவையான ஒழுக்க நெறிகளை ஸ்மிருதிகள் முன்வைக்கின்றன.

வர்ணாச்சிரம தர்மங்கள், பெற்றோரைப்பேணுதல், புனிததலயாத்திரை, இல்லறத்திற்கு வேண்டிய அறங்கள், விரதங்கள் அவற்றின் பலன்கள், ஆன்மீக நலன்கள், உலகியல் சமூகவாழ்வு நலன்கள் என்பன பற்றியெல்லாம் எடுத்துக்கூறி வாழ்க்கை அறநெறிப்பட்டதாக அமைய தர்ம சாஸ்த்திரங்கள் வழிகாட்டுகின்றன.

பிறப்பிலிருந்து இறப்பு வரை மனிதன் செய்யவேண்டிய கடமைகளும், சடங்குகளும் மனுஸ்மிருதியில் சொல்லப் படுகின்றன. அரச நெறியின் நீதிமுறையும் வர்ண தர்மங்களும், சமூக வழமைகளும் இதில் கூறப்படுகின்றன. அத்துடன் மனித சமத்துவம் இதில் சிறப்பித்துக் கூறப்படுகின்றது. கலப்புத் திருமணம், கூட்டு விருந்து, பெண்கல்வி என்பன இதில் வலியுறுத்தப்படுகின்றன. மனுஸ்மிருதியின் 8ம், 9ம் அத்தியாயங்களில் கற்பு பெண்களுக்கு மட்டுமல்ல ஆண்களுக்கும் உரியது என வலியுறுத்தப்படுகிறது.

நாரதர் ஸ்மிருதி சமயக் கருத்துக்களைவிட மனிதனுடைய ஒழுக்கத்திற்கே சிறப்பிடம் கொடுக்கிறது. ஞாஞ்ய வல்லிய ஸ்மிருதி நன்னடத்தைக் கோட்பாடுகளுக்கும், பிராயச்சித்த விதிகளுக்கும் முதன்மை கொடுக்கிறது. பிரகஸ்பதி ஸ்மிருதி குற்றம் செய்த ஒருவனை அதே இனத்தவனே விசாரிக்க வேண்டும் என்கிறது. அர்த்த சாஸ்த்திரம் அரசன் தர்மத்தின் பாதுகாவலனாக விளங்க வேண்டும் என்கிறது சுக்கிரநீதி அரச ஒழுக்கத்திற்கு சிறப்பிடம் கொடுக்கிறது. அரசன், காமம், வெகுளி,மோகம், உலோகம், மானம், மதம் எனும் இவ்வறுவகைக் குணங்களையும் களைதல் வேண்டும் என வலியுறுத்துகிறது அது தவிர "இவ்வுலகில் அந்தணராதலும் அரசராதலும், வணிகராதலும், சூத்திரராதலும், மிலேச்சராதலும் பிறப்பினாலில்லை. குணஞ்செயல்களினாலேயே என்கிறது."

தர்ம சாஸ்திரங்கள் தனிமனித தர்மம், சமூக தர்மம், அரச தர்மம் என்பவை பற்றி மிக விரிவாகக் கூறுகிறன. "பிராமணர் ஒழுக்கம் கெட்டால் சூத்திரனுக்குக் கீழ் வைத்து மதிக்கப்படல் வேண்டும்" சூத்திரன் ஒழுக்கமுடையவனாக இருந்தால் அவனுக்கு பிராமண அந்தஸ்த்து வழங்கப்பட வேண்டும் என்கிறது. அதுதவிர அரசன் நாட்டுமக்கள் அனைவரையும் பாராபட்சமின்றிப் பேணுதல் வேண்டும். குற்றம் செய்தவனின் வலிமை, குற்றம் செய்த இடம், காலம், சூழல் என்பவற்றை ஆராய்ந்தே அவனுக்குத் தண்டனை வழங்க வேண்டும். தான் வறுமைப்பட்டாலும் சூத்திரரையும், பிராமணரையும் பாதுகாக்க வேண்டும் என தர்மசாஸ்த்திரங்களில் அரச ஒழுக்கம் வலியுறுத்தப்படுகிறது. அர்த்த சாஸ்த்திரத்தில் "அரசனே தர்மத்தின் காவலன் எனவும் அவன் நீதி தவறுமிடத்து தண்டம் என்ற வடிவில் தர்மம் அவனையும் , சுற்றத்தையும் நாட்டையும் அழிக்கும்." எனவும் கூறப்பட்டுள்ளது. எனவே தர்ம சாஸ்த்திரங்களில் கூறப்பட்டுள்ள ஒழுக்கக் கருத்துக்கள் வாழ்க்கையை அறநெறிப்பட்டதாக வழிகாட்டுபவையாக உள்ளன.

## நால்வகை புருடார்த்தங்களில் காணப்படும் ஒழுக்கக் கருத்துக்கள்:

புருடார்த்தங்கள் எனப்படுபவை அறம், பொருள், இன்பம்,வீடு என்பவையாகும். வாழ்க்கைக்கு அவசியமானது பொருள். இப்பொருள் அறவழியில் தேடப்படுதல் வேண்டும் அத்துடன் அப்பொருளை அறவழியில் செலவிடுதல் வேண்டும். அறநெறி நிற்பதற்கும், இன்பம் துய்ப்பதற்கும் பொருள் அத்தியாவசியமாக வேண்டப்படுவதாலேயே அறம், இன்பம் ஆகிய இரண்டிற்கும் நடுவே பொருள் இடம்பெறுமாறு புருடார்த்தங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. புருடார்த்தங்களின் வழி நின்றொழுகும் போது பேராசை அறுவதுடன் அன்பு ., நேர்மை, தூய்மை, கொல்லாமை, பரிவு, சகோதரத்துவம், சேவை மனப்பான்மை எனும் சமய ஒழுக்கங்கள் எம்மில் விருத்தி பெறுகின்றன.

அறம் என்பது மனிதன் தனியாகவும், கூட்டாகவும் வாழும் இடத்து கடைப்பிடிக்க வேண்டிய மேலான ஒழுக்கங்களாகும். இது சிவதர்மம், குலதர்மம், ஜாதிதர்மம், சிரேனிதர்மம், ராஜதர்மம் என்பவையாகும். பொருள் என்பது தனி மனித வாழ்விற்கும், சமுதாயத்திற்கும் ஆதாரமானதாகும். இவை ஒவ்வொருவரினதும் தகமைக்கேற்ப ஈட்டவேண்டுமென புருடார்த்தங்கள் குறிப்பிடுகின்றன. இன்பம் என்பது ஆண், பெண் உறவைப்பற்றிக் கூறுவது ஒவ்வொருவரும் பருவமடைந்த காலத்தில் இல்வாழ்க்கை நடாத்துவது மரபு. வடமொழியில் தமிழ் மொழி போன்ற அகத்திணை மரபு இல்லை. இதனால் காமசூத்திரம் போன்ற வடமொழி நூல்கள் இன்ப உணர்வுகளையும் அனுபவங்களையும் மறைவின்றிக் கூறுகின்றன.

அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை உரிய வகையில் அனுசரிப்போர்க்கு வீடு கிடைக்கும்.

*"அறம் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து*
*தீதின்றி வந்த பொருள்"* என்கிறார் வள்ளுவர்.

அவரது கூற்றுப்படி நல்பொருள் பெற்றவர்க்கே அறவாழ்க்கையும் இன்பவாழ்க்கையும் எளிதாக வந்தடையும் என்பதை அறியமுடிகிறது. அறவாழ்க்கையில் வள்ளுவர் கூறுகின்ற அன்புடமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி அறிதல், நடுவு நிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில்சொல்லாமை, ஈகை, அருளுடைமை, கள்ளாமை, வாய்மை, இன்னாசெய்யாமை, கூடாஒழுக்கம் ஆகிய பண்புகள் சமுதாய விருத்தியை மேம்படுத்தும் பண்புகளாகும். எனவே நல்வகைப் புருடார்த்தங்களிலும் கூறப்பட்டுள்ள ஒழுக்கக்கருத்துக்களை நாம் வாழ்க்கையில் பின்பற்றுவது இன்றியமையாததாகும்.

## வர்ணாச்சிரமதர்மக் கோட்பாடுகளில் காணப்படும் ஒழுக்கக் கருத்துக்கள்:

இந்துமதம் வாழ்க்கை முறையை மனித வளர்ச்சிப் படிமுறைக்கு அமைவாகவே வகுத்துள்ளது. பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என ஒவ்வொருவரும் மேற்கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமைகளின் அடிப்படையில் மக்களை நான்கு வர்ணங்களாக வகுத்துள்ளது. அதேபோல இந்துக்களின் வாழ்க்கைப் பருவங்களை பிரம்மச்சரியம், கிருஹஸ்தம், வானபிரஹஸ்தம், சந்நியாசம் எனும் நான்கு ஆச்சிரமங்களாக வகுத்துள்ளது. அத்துடன் இவ்வர்ணங்களினதும் ஆச்சிரமங்களினதும் ஒழுக்கக் கடமைகளையும் வகுத்துக் காட்டியுள்ளது.

பிரமச்சரியப் பருவத்திலுள்ளவர்கள் மிகவும் எளிய முறையில் குருவின் ஆச்சிரமத்தில் வாழ்ந்து வேதம் கற்றல் வேண்டும். இப்பருவத்தில் மது, புலால், சந்தணம் முதலிய மணம் தரும் பொருட்கள், இனிப்புப் பானங்கள், பெண்கள், அழுகி ஊசிப்போன பண்டங்கள் என்பவற்றை பிரம்மச்சாரி ஒதுக்க வேண்டும். அவன் எந்த உயிருக்கும் இம்சைசெய்யக் கூடாது. காமம், குரோதம், லோபம் ஆகியவைகளில் சிக்குதல், சூதாடுதல், பிறரைத் தூசித்தல், பொய்கூறுதல் ஆகியவை தவிர்க்கப்பட வேண்டியவையாகும். புராதன கல்வி நிலையங்களில் இப்பருவத்தினருக்கு ஒழுக்க நெறிகள் போதிக்கப்பட்டன. பிரம்மச்சரிய பருவத்தில் இருக்கும் ஒருவர் தாய் தந்தையாரையும் குருவையும் தெய்வமாகப் போற்றுதல் இன்றியமையாததாகும்.

கல்வி கற்று முடிந்ததும் "சமாவர்த்தனம்" என்ற சடங்கு செய்து குருவிற்கு தட்சணை அளித்துவிட்டு பிரம்மச்சாரி தன் வீடு திரும்பி மணம் செய்து கொண்டு இல் வாழ்க்கையில் புகவேண்டும் வாழ்க்கை இன்பங்களை நுகர்வதும், விருந்தினரை உபசரித்து உயிர்ப் பிராணிகளுக்கு உதவுதலும், சிறந்த முறையில் வாழ்தலும் இதற்குரிய கடமைகளாகும். இப்பருவத்தினர் ஐவகை வேள்விகளைச் செய்வதுடன் ஏனை மூவரையும் பேணுதல் வேண்டும். கடவுள் வழிபாடு, குரு வழிபாடு சமயநூல்களைப் படித்தல், புலனடக்கம், தவம், தானம் ஆகிய ஆறு கடமைகளையும் கடைப்பிடித்து ஒழுகுதல் வேண்டும்.

உலக இன்பங்களை அனுபவித்த பின் பிள்ளைகளுக்கு வயது வந்து குடும்ப பொறுப்பை ஏற்றுக் கொண்டபின் கிருஹஸ்தன் வீட்டைவிட்டு வெளியேறி காட்டுக்குச் செல்லும் நிலை வானப்பிரஸ்த நிலையாகும். இப் பருவத்தினரது கடமைகள் துறவு, தியானம், புலனடக்கம், விருந்தினரைப் பேணுதல் எல்லா உயிர்களிடமும் அன்பும்,கருணையும் காட்டுதல் என்பன போன்றவைகளாகும்.

வானப் பிரஸ்த நிலையிலுள்ள ஒருவர் சகல ஆசாபாசங்களையும், விருப்பு வெறுப்புக்களையும், நன்மை, தீமைகளையும் துறந்து ஞானநிலையை அடைதல் சந்நியாச நிலை எனப்படும். இப்பருவத்தில் எல்லாவகையான கருமங்களையும், சடங்குகளையும் விட்டு விட வேண்டும். அவர் பிச்சையேற்று உண்ணவும் ஒரே இடத்தில் தங்காமல் சுற்றிக்கொண்டே இருக்கவும் எப்பொழுதும் பிரம்ம தியானத்தில் ஆழ்ந்திருக்கவும் வேண்டும். எனவே வர்ணாச்சிரம தர்மக்கோட்பாடுகளில் கூறப்பட்டுள்ள ஒழுக்கக் கருத்துக்களை ஒவ்வொரு பருவத்தினரும் அறிந்து அவற்றைப் பின்பற்றுதல் வேண்டும்.

## சைவ சித்தாந்தக் கோட்பாடுகளில் கூறப்பட்டுள்ள ஒழுக்கக் கருத்துக்கள்

சமயம் , தத்துவம் இரண்டும் இணைந்து விளங்கி மக்கள் ஆன்மீக நெறியில் ஈடுபட வழிவகுப்பது சைவசித்தாந்தமாகும். ஆன்மீக விடுதலைக்கு எளிதான வழிமுறைகளை எடுத்துக்கூறும் வகையில் சைவ சித்தாந்தம் சிறப்புப் பெறுகிறது. நால்வகை நெறிகள், தீட்சை, சிவசின்னங்களைப் பேணுதல், ஆலயசேவை, ஆலய தரிசனம், பஞ்சாட்சரஜபம், அடியார்களுக்குத் தொண்டு செய்தல், குருவின் வழிகாட்டலில் வாழ்தல், குருலிங்க சங்கம வழிபாடு, சிவ புண்ணியச் செயல் என்பன போன்ற சமய ஒழுக்கத்திற்கு அடிப்படையான செயற்கருமங்களை சைவ சித்தாந்தக் கோட்பாடுகள் எடுத்து விளக்குகின்றன.

"வினைவிதைத்தவன் வினை அறுப்பான் தினை விதைத்தவன் தினை அறுப்பான்" எனும் பழமொழிக்கேற்ப சைவசித்தாந்தம் கன்மக் கோட்பாட்டின் அடிப்படையில் ஒழுக்கக் கோட்பாட்டினை விளக்குகிறது. சஞ்சிதம், பிராரத்தம், ஆஹாமியம் எனும் கன்ம வினைகளை எடுத்துக்காட்டி அவற்றிலிருந்து விடுபடுவதற்குரிய ஒழுக்கக் கோட்பாட்டினையும் சைவ சித்தாந்தம் காட்டி நிற்கின்றது. அலகிடல், மெழுகிடல், திருவிளக்கேற்றல், நந்தவனம் அமைத்தல், ஆலய புனருத்தாரணம் செய்தல், கும்பாபிஷேகம் செய்வித்தல் ஆகியன போன்ற சிவ நல்வினைகளையும் சைவ சித்தாந்தம் ஆன்மீக ஈடேற்றத்திற்குக் காட்டி நிற்கிறது. எனவே சைவசித்தாந்தம் காட்டி நிற்கும் ஒழுக்கக் கோட்பாடுகளை ஒவ்வொரு சைவசமயியும் கடைப்பிடித்தல் வேண்டும். சைவ சித்தாந்தம் போன்றே ஏனைய வைணவம், கௌமாரம், காணபத்யம், சௌரம், சாக்தம் ஆகிய சமயப் பிரிவுகளுக்குரிய கோட்பாடுகளும், ஒழுக்கக் கோட்பாடுகளைப் பின்பற்றியே தோற்றம் பெற்றுள்ளன எனலாம்.

## நீதிநூல்களில் கூறப்பட்டுள்ள ஒழுக்கக் கருத்துக்கள்:

*"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப்படும்"*

எனும் குறளில் வள்ளுவர் ஒழுக்கத்தின் மேன்மையை எடுத்து விளக்கியுள்ளார். ஒருவனது சொல், செயல், நடத்தை, பழக்க வழக்கம் என்பவற்றைக் கொண்டு ஒழுக்கம் கணிக்கப்படும். கடவுள் வணக்கம் ஒழுக்கத்தின் முதற்படியாகும்.

*"கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழா அர் எனின்"*

என்கிறார் வள்ளுவர் இதற்கேற்பவே நாவலரும் நாம் இந்த மானிடப் பிறப்பெடுத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும் என்கிறார்.

*"நல்லொழுக்கம்மில்லாரிடஞ் சேர்ந்த நல்லோர்க்கு*
*நல்லொழுக்கமில்லாச் சொல் நண்ணுமே"*

என நீதிவெண்பா கூறுகிறது. அதாவது ஒழுக்கநெறி நிற்பவர்கள் நல்லோர்கள். அவர்கள் தீயோருடன் சேர்ந்தால் அவர்களுக்குப் பழிச் சொல் வந்து சேரும் என்பது இச் செய்யுளின் பொருள். மேலும் நீதி வெண்பாவில்,

*"மனம் வேறு சொல்வேறு மன்னுதொழில் வேறு*
*வினை வேறு பட்டவர் போல் மேவும் – அனமே*
*மனமொன்று சொல்லொன்று வான்பொருளுமொன்றே*
*கன மொன்று மேலவர் தங் கண்"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்படுகின்றது. அதாவது ஒழுங்கற்ற செய்கையை உடைய கீழோரிடத்தில் மனமும், சொல்லும், செயலும் வேறுவேறாய் இருக்கும். இதற்கு மாறாகப் பெரியோரிடத்தில் மனமுஞ் சொல்லும் செயலும் ஒன்றாகவே இருக்கும். இத்தகைய உண்மை நிலையின்றி உண்மைப் பொருளாகிய இறைவனை அடைதல் சாத்திய மாகாது எனப்படுகிறது.

*"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக"*

என்கிறார் வள்ளுவர் அதாவது நூல்களைப் படித்தால் மட்டும் போதாது அதனை வாழ்க்கையிலும் பின்பற்றுதல் வேண்டும்.

*"கெட்டாலும் மேன்மக்கள் மேன் மக்களே – சங்கு*
*சுட்டாலும் வெண்மை தரும்"*

என்கிறார் ஔவையார். ஔவையார் கூறும் மேன்மக்கள் ஒழுக்கமுடையோராவர் அது தவிர,

*"நல்லோரைக் காண்பதுவும் நன்றே– நலமிக்க*
*நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே*
*நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே*
*அவரோடிணங்கி இருப்பதுவும் நன்று"*

என்று நடைமுறை வாழ்க்கையில் ஒருவர் ஒழுக்கமுடன் வாழும் வாழ்க்கை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். எனவே நீதி நூல்கள் எமது வாழ்க்கைக்கு வழிகாட்டும் தீபங்களாகும்.

## இந்து ஒழுக்கமும், பௌத்த, சமண ஒழுக்கங்களும்

இந்துசமயம் வேதத்தை முதன்மையாக ஏற்பது. ஆனால் பௌத்தம் வேதத்தை ஏற்பதில்லை. ஆனால் ஒழுக்கத்திற்கு இரண்டும் முக்கியத்துவம் கொடுக்கின்றன. சமணமும் வேதத்தை ஏற்காதபோதும் ஒழுக்கத்திற்கு மிக முக்கிய இடம் கொடுக்கிறது. இம் மூன்று சமயங்களும், கன்மம் மறுபிறப்புக் கோட்பாட்டையும் ஏற்றுக்கொள்கின்றன. இந்துசமயம் ஆச்சிரம நிலைகளுக்கு அவை சார்ந்த ஒழுக்கங்களுக்கும் முதன்மை கொடுக்க பௌத்தம் துறவுக்கு முதன்மை அளிக்கின்றது. இந்து ஒழுக்கத்திற்கு ஆதாரமாக விரதம், தவம், தீர்த்தம், போன்றவற்றை இந்துமதம் கூற பௌத்த மதமும் இந்து சமய விரதத்திற்கு ஒத்த வகையில் "சில்" அனுட்டானத்தைக் குறிப்பிடுகிறது. இவ்விரண்டு நெறிகளையும் பொதுவாக நோக்கும்போது இரண்டு மனிதனை நிறைமனிதனாக வாழ வழி கூறுகின்ற பஞ்சமா பாதங்களைத் தவிர்க்க வற்புறுத்துகின்றன. கர்மக் கோட்பாட்டில் வினைக்குரிய பலன் செய்தவனையே சேரும் என பௌத்தம் கூற செய்தவனுக்குரிய பயனை செயற்பிக்க இறைவன் அருள் தேவை என இந்துசமயம் கூறுகிறது. புத்தரையும் சங்கத்தையும் சரணடைதல் பௌத்தத்தில் சிறப்பம்சமாகும்.

பௌத்த சமயத்தில் கொலை, களவு, காமம், மது, பொய், ஆகியவற்றைத் தவிர்த்தல் பஞ்சசீலம் எனப்படுகிறது. இவற்றுடன் அகால உணவு, களியாட்டயர்தல், சொகுசுநாடல் ஆகியவற்றையும் விலக்கல் அட்டசீலம் எனவும் கொள்ளப்படுகிறது. இவை இந்துசமயத்திற்கும் பொருத்தமான கொள்கையாகும். அதாவது கொலை, களவு, காமம், மது, பொய் ஆகியவை இந்து சமயத்தில் பஞ்சமா பாதகச் செயல்கள் எனப்படுகின்றன.

பௌத்தம் தனிமனித மேம்பாட்டிற்குப் பல்வேறு ஒழுக்க வழிமுறைகளை முன்வைக்கின்றது. நற்காட்சி, நற்கருத்து, நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கொள்கை, நல்லமைதி ஆகிய எட்டு வழிகளைக் காட்டுகிறது. பௌத்த உபதேசங்களில் தரும சீலங்கள் மனதை ஒரு நிலைப்படுத்தும் நெறிமுறைகள் உபாசனை, தியானம் போன்றவை முக்கியத்துவம் பெறுகின்றன. ஒருவனது முயற்சியிலேயே அவனது ஒழுக்கம் சிறப்படையுமென பௌத்தம் கூறுகிறது. பௌத்த ஒழுக்கவியலின் நோக்கம் இம்மை மறுமைப் பயனைத் தருவதாகும். பௌத்தம் கூறும் துறவு இந்துசமயம் கூறும் சந்நியாச வாழ்வுடன் ஒப்பிடத்தக்கது. பௌத்தம் கூறும் பஞ்சசீலம் , அட்டசீலம், தவசீலம் ஆகிய ஒழுக்க நெறிகள் இந்து சமயத்தின் யோகமார்க்கம் கூறும் புலனடக்கத்துடன் தொடர்புபட்டதாகும்.

சமணம் ஒழுக்கத்தை உயிரேனும் மேலாகக் கருதுகின்றது. சமணர்கள் புலால் உண்பதை அறவே நீக்குவர். பிற உயிர்களுக்கு தீமை செய்யமாட்டார்கள். நிலத்தில் கிடக்கும் சிறு பூச்சிகளையும் கொல்ல மாட்டார்கள். சுவாசிக்கும் போது சிறிய ஜந்துக்கள் சுவாசத்தோடு உட்சென்று இறக்காமல் இருக்க மூக்கைத் துணிகொண்டு மூடியே சுவாசிப்பர் . எனவே உலகில் முதன் முதலில் தோன்றிய இந்துசமயத்தின் ஒழுக்கக் கோட்பாடுகளைப் பின்பற்றியே அவைதிக சமயங்களும் தங்கள் ஒழுக்கக் கோட்பாடுகளை வகுத்துள்ளன எனலாம். பிற மதங்களின் ஒழுக்கக் கோட்பாடுகள் பற்றியும் நாம் அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். சமய ஒழுக்கம், சமுதாய ஒழுக்கத்திற்கு அடிப்படையாக உள்ளது. சமய நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டது. தெய்வ நம்பிக்கை சமூக ஒழுக்கத்திலும், சமூக கட்டுப்பாட்டிலும், சமுதாய சீர்திருத்தத்திலும் பெரும்பங்கு வகிக்கிறது. ஒரு சமூகத்தால் ஒழுக்கம் பின்பற்றப்படாத சந்தர்ப்பங்களில் சமூகம் சமநிலையை இழந்துவிடும். வீட்டிலும் பாடசாலையிலும் பின்பற்றப்படும் ஒழுக்கச் செயற்பாடுகள் சமூக ஒழுக்கத்தை வளர்த்து சமூகச் சமநிலையைப் பேணுவதற்குரிய அடிப்படையை ஏற்படுத்துகின்றன. பாடசாலைப் பாடவிதானங்களில் சமயம் கட்டாய பாடமாக்கப்பட்டுள்ள போதிலும் அது பரீட்சையை மையமாகக் கொண்டிருப்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். அதைவிடுத்து சமூக ஒழுக்கவரலாறுகளையும் மனப்பாங்கு விருத்தியையும் மையமாகக் கொண்டதாக அது ஒழுங்கமைக்கப்படுதல் வேண்டும் அதாவது; அன்பு, கருணை, சகிப்பு, நேர்மை, பொறுப்பு, புரிந்துணர்வு, மனத்தைரியம்,மனவுறுதி, வலிமை , சேவைமனப்பான்மை, தியானம், சகோதரத்துவம் எனும் உயர் பண்புகளை வாழ்க்கையில் பின்பற்றக் கூடிய ஒழுக்க சீலமுள்ள மாணவர்களை உருவாக்குவதாகச் சமயக்கல்வி அமைதல் வேண்டும். விரத காலங்களில் பாடசாலை மாணவர்கள் நித்திய கர்மானுட்டங்களை முறைப்படி செய்யப்பழகுதல் வேண்டும். மந்திரசெபம் செய்யும்போது மாமிசபோசனம் இல்லாதவராய் ஆசாரமுடையவராய் சிவதீட்சை பெற்றவராய் இருத்தல் வேண்டும். விரத நாட்களில் திருக்கோயில்களில் நெய்விளக்கேற்றுதல் வேண்டும். விழாக்காலங்களில் மருத்துநீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேய்த்தல், மங்கல நீராடல், ஆலய வழிபாடு செய்தல் ஆகிய பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். மாதா, பிதா, குரு, தெய்வம் என்பதற்கேற்ப தாய் தந்தை குரு மூவரையும் தெய்வமாக போற்றுதல் வேண்டும்.

"இந்த தேசத்தின் ஆத்மா அதன் சமயத்தில் உறைந்துள்ளது" என்கிறார் விவேகானந்தர். வாழ்க்கையை ஒழுக்கமுடன் வாழ்ந்து காட்டிய திருவள்ளுவர், நாயன்மார்கள், ஆழ்வார்கள், மகாத்மாகாந்தி, இராமகிருஷ்ணர், விவேகானந்தர், சாரதாதேவியார், விபுலானந்தர், திலகவதியார், கஸ்தூரிபாய், வாசுகி என்போர் தமக்காக வாழாது சமூகத்திற்காக வாழ்ந்தவர்களாவர். ஒரு வள்ளுவன் உருவாக வாசுகியும், ஓர் இராமகிருஷ்ணர் உருவாக சாரதாதேவியும், ஒரு மகாத்மா உருவாக கஸ்தூரிபாயும் ஆதாரமாக இருந்துள்ளனர்.

இவர்களைப் போல் ஒருவரை எம்மிடையே பலதசாப்தங்களாய் காண முடியாதுள்ளது. இதற்குக் காரணம் இந்துசமய ஒழுக்கக் கருத்துக்களை அறிந்து கொள்ளாமையும் அவற்றைப் பின்பற்றாமையுமே ஆகும். எனவே எதிர்கால சமுதாயம் இந்துசமயக் கோட்பாடுகள் கூறி நிற்கும் ஒழுக்கக் கருத்துக்களை வாழ்க்கையில் பின்பற்றி மனிதருள் மாணிக்கங்களாக தோற்றம் பெறுதல் வேண்டும்.

# திருவெம்பாவைச் சிறப்பு



வருடந்தோறும் மார்கழி மாதம் பூரணையும், திருவாதிரையும் சேர்ந்து வரும் காலம் சிறப்பானது. ஏனென்றால் அந்த நட்சத்திரமே சிவபெருமானுக்கு உரியது. இத்தினத்தில் சிதம்பரத்தில் மிகமிக விசேடமான உற்சவமும் அபிஷேகமும் நடக்கும்.

இதற்கு முன்னுள்ள பத்து நாட்களும் திருவெம்பாவை ஓதுவார்கள். மார்கழி மாதம் முழுவதுமே விஷேட காலமாகக் கணிக்கப்படும். கோயில்களிலும், வீட்டு வாயில்களிலும் அழகிய பலவகையான சித்திரக் கோலங்கள் அமைத்து, கோமயத்தால் மார்கழிப் பிள்ளையார் என்று விநாயகரை வைத்துப் பூக்கள் சூடி வழிபடுவார்கள். சிலர் ஒன்பது நாளும் ஒரு பொழுது உண்டு விரதம் இருந்து திருவாதிரையில் உபவாசமாய் இருந்தும் அனுஷ்டிப்பர்.

தேவர்களுடைய காலக் கணக்கின்படி இம்மாதம் பிரம்ம முகூர்த்தமாகும். நமக்கும் ஒவ்வொருநாளும் சூரியன் உதிக்கு முன் ஐந்து நாழிகை இரண்டு மணித்தியால காலமும் அந்த முகூர்த்த காலமாகும். அதாவது உஷாக்காலம் என்பது. இக்காலத்தில் நித்திரை விட்டு எழுந்து காலைக்கடன்கள் கழித்து, நீராடி, அனுட்டானம் முடித்து, கடவுள் வழிபாடு, செபம், தியானம் ஆகியன செய்ய வேண்டும் என்று சைவ நூல்கள் கூறுகின்றன. இதனால் தேகமும், மனமும், அனேக நன்மைகளை அடைகின்றன.

இக்காலத்தில் சத்துவகுணம் மேலோங்கி விளங்கும். கரியமில வாயு குறைந்து, பிராணவாயுவின் வன்மை மிகுந்தும் (ஓசோன்) என்னும் சஞ்சீவிக் காற்று நிலை ஏற்பட்டும் இருக்கும் என்பர். இக்காலமே தியானம், பூசை, வழிபாடு, படிப்பு, சிந்தித்தல் முதலிய நற்காரியங்கள் வசப்படுவதற்கு இயற்கை அன்னை உதவும் நேரமாகும்.

இந்த நுட்பங்களை நம் முன்னோர் அறிந்தே, சூரிய உதயத்துக்கு முன் நித்திரை விட்டெழுதலை வற்புறுத்திக் கடைப்பிடித்து வருகின்றனர். தினமும் பிரம்ம முகூர்த்தம் நமக்கிருப்பது போலவே தேவர்களுக்கும் உண்டு.

மிகப்பழைய காலம் இருந்து மார்கழி நீராடல் கைக்கொள்ளப்பட்டு வந்திருக்கிறதைச் சங்க இலக்கியங்கள், நிகண்டுகளிலிருந்து தெரியலாம். இதைப் பாவை நோன்பு என்பர். பெரும்பாலும் கன்னிப் பெண்களே தங்களின் எதிர்கால வாழ்க்கையின் சிறப்பு நோக்கி காத்தியாயினி என்னும் சக்தியை மார்கழி மாதம் முழுவதும் வழிபட்டு வந்திருக்கிறார்கள்.

சைவ மக்கள் சிறப்பாக மார்கழித் திருவாதிரைக்கு முன்னுள்ள பத்து நாளும், கோயில்கள், வீடுகள் முதலிய இடங்களில் திருவெம்பாவை படித்தலும், திருவாதவூரடிகள் புராணம் படித்தலும், இறைவனை வேண்டுதலும் செய்து வருகின்றனர். நடேசப் பெருமானுக்கே மூர்த்திகளில் விசேடங்கள் யாவும் சிறப்பாகச் செய்கின்றனர். மார்கழிமாதம் முழுவதும் திருவாசகமே பெரும்பாலும் வீடுகளில் ஓதுகின்றனர்.

ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமிகள் சிதம்பரதரிசனத்துக்குப் போகும்போது திருவண்ணாமலையிற் தங்கினார். அவர் தங்கின காலம் திருவெம்பாவைக் காலம். அண்ணாமலையில் உள்ள பெண்கள் விடியற்சாமம் எழுந்து வீடுகள் தோறும் சென்று, மற்றைய கன்னிமார்களையும் எழுப்பி, ஆடிப்பாடி நீராடிச் சென்ற காட்சியைக் கண்டார். அவர்கள் பாடியதாகவே திருவெம்பாவை பாடினார். ஞானமும் தத்துவார்த்தமும் நிரம்ப அப் பதிகத்தில் அமைந்துள்ளன.

ஸ்ரீ நடேசப் பெருமானும் அந்தணர் வடிவாய் மாணிக்கவாசகப் பெருமானிடம் வந்து, திருவாசகம் முழுவதையும் பாடக்கேட்டு எழுதிய பின் "பாவை பாடிய வாயால் கோவை பாடு" என்று கேட்டதிலிருந்தே அதன் அருமை விளங்கும். "எம்பாவாய்" என்று பாடல்கள் முடிகிறபடியால் அது சக்திவழிபாடு என்பதும் தெரியவருகிறது. இவ்வழிபாட்டால் நாட்டுக்கு நீர்வளம் முதலிய பல செல்வங்கள் உண்டாவதுடன், மக்களுக்கும் மிக மேலான நன்மைகள் உண்டாகின்றன.

(நன்றி: சிவதொண்டன் – நவம்பர் 1966)

*வாழ்க்கையில் துன்பம் கண்டு துவளாமல் இருப்பதற்கு உரிய மறைமுகமான பயிற்சியை இறைவழிபாடு தருகிறது.*
(சுவாமி கமலாத்மானந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை இந்து மாமன்றம்

# நாட்காட்டி 2005

### ஜனவரி

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

### பெப்ரவரி

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | | | | | | |

### மார்ச்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

### ஏப்ரல்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

### மே

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

### ஜூன்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | | | |

### ஜூலை

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

### ஆகஸ்ட்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

### செப்டம்பர்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

### அக்டோபர்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

### நவம்பர்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

### டிசம்பர்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

### அரசாங்க – வங்கி விடுமுறை தினங்கள்

| | | |
|---|---|---|
| 14.01.2005 | (வெள்ளி) | தைப்பொங்கல் |
| 21.01.2005 | (வெள்ளி) | ஹஜ்ஜுப் பெருநாள் |
| 24.01.2005 | (திங்கள்) | நோன்மதி தினம் |
| 04.02.2005 | (வெள்ளி) | தேசிய தினம் |
| 23.02.2005 | (புதன்) | நோன்மதி தினம் |
| 08.03.2005 | (செவ்வாய்) | மகா சிவராத்திரி |
| 25.03.2005 | (வெள்ளி) | நோன்மதி தினம், பெரிய வெள்ளி |
| 13.04.2005 | (புதன்) | தமிழ் – சிங்கள புதுவருடத்திற்கு முன்தினம் |
| 14.04.2005 | (வியாழன்) | தமிழ் – சிங்கள புதுவருடம் |
| 22.04.2005 | (வெள்ளி) | நபிகள் நாயகம் பிறந்த தினம் |
| 23.04.2005 | (சனி) | நோன்மதி தினம் |
| 01.05.2005 | (ஞாயிறு) | மே தினம் |
| 23.05.2005 | (திங்கள்) | நோன்மதி தினம் (வெசாக்) |
| 24.05.2005 | (செவ்வாய்) | வெசாக் மறுதினம் |
| 21.06.2005 | (செவ்வாய்) | நோன்மதி தினம் |
| 21.07.2005 | (வியாழன்) | நோன்மதி தினம் |
| 19.08.2005 | (வெள்ளி) | நோன்மதி தினம் |
| 17.09.2005 | (சனி) | நோன்மதி தினம் |
| 17.10.2005 | (திங்கள்) | நோன்மதி தினம் |
| 01.11.2005 | (செவ்வாய்) | தீபாவளி |
| 04.11.2005 | (வெள்ளி) | றம்ழான் பெருநாள் |
| 15.11.2005 | (செவ்வாய்) | நோன்மதி தினம் |
| 15.12.2005 | (வியாழன்) | நோன்மதி தினம் |
| 25.12.2005 | (ஞாயிறு) | நத்தார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய விழாக்களும் விரத நாட்களும் [2005]

## ஜனவரி

06 – ஏகாதசி விரதம்
08 – சனிப்பிரதோஷ விரதம்
10 – அமாவாசை விரதம்
13 – சதுர்த்தி விரதம்
14 – தைப்பொங்கல்
15 – சஷ்டி விரதம்
19 – கார்த்திகை விரதம்
21 – ஏகாதசி விரதம்
22 – சனிப்பிரதோஷ விரதம்
25 – பூரணை விரதம், தைப்பூசம்
29 – சங்கடஹர சதுர்த்தி

## பெப்ரவரி

05 – ஏகாதசி விரதம்
06 – பிரதோஷ விரதம்
08 – அமாவாசை விரதம்
12 – சதுர்த்தி விரதம்
14 – சஷ்டி விரதம்
16 – கார்த்திகை விரதம்
19 – பீம ஏகாதசி விரதம்
21 – பிரதோஷ விரதம்
23 – பூரணை விரதம்
24 – மாசி மகம்
27 – சங்கடஹர சதுர்த்தி

## மார்ச்

06 – ஏகாதசி விரதம்
08 – மகா சிவராத்திரி, பிரதோஷ விரதம்
10 – அமாவாசை விரதம்
13 – சதுர்த்தி விரதம்
15 – கார்த்திகை விரதம்
16 – சஷ்டி விரதம்
21 – ஏகாதசி விரதம்
23 – பிரதோஷ விரதம்
25 – பூரணை விரதம், பங்குனி உத்தரம்
29 – சங்கடஹர சதுர்த்தி

## ஏப்ரல்

05 – ஏகாதசி விரதம்
06 – பிரதோஷ விரதம்
08 – அமாவாசை விரதம்
11 – கார்த்திகை விரதம்
12 – சதுர்த்தி விரதம்
14 – சித்திரைப் புதுவருடம், சஷ்டி விரதம்
17 – ஸ்ரீராம நவமி
20 – ஏகாதசி விரதம்
21 – பிரதோஷ விரதம்
23 – சித்திரைச் சித்திரை
24 – சித்திரா பூரணை விரதம்
27 – சங்கடஹர சதுர்த்தி

## மே

04 – ஏகாதசி விரதம்
05 – பிரதோஷ விரதம்
08 – அமாவாசை விரதம்
09 – கார்த்திகை விரதம்
12 – சதுர்த்தி விரதம்
14 – சஷ்டி விரதம்
19 – ஏகாதசி விரதம்
21 – சனிப்பிரதோஷ விரதம்
23 – பூரணை விரதம், வைகாசி விசாகம்
27 – சங்கடஹர சதுர்த்தி

## ஜூன்

02 – ஏகாதசி விரதம்
04 – சனிப்பிரதோஷ விரதம்
05 – கார்த்திகை விரதம்
06 – அமாவாசை விரதம்
10 – சதுர்த்தி விரதம்
13 – சஷ்டி விரதம்
18 – ஏகாதசி விரதம்
19 – பிரதோஷ விரதம்
21 – பூரணை விரதம்
25 – சங்கடஹர சதுர்த்தி

## ஜூலை

02 – ஏகாதசி விரதம், கார்த்திகை விரதம்
03 – பிரதோஷ விரதம்
06 – அமாவாசை விரதம்
10 – சதுர்த்தி விரதம்
12 – குமார சஷ்டி விரதம், ஆனி உத்தரம்
17 – சயன ஏகாதசி விரதம், ஆடிப்பிறப்பு
19 – பிரதோஷ விரதம்
21 – பூரணை விரதம்
24 – சங்கடஹர சதுர்த்தி
30 – கார்த்திகை விரதம்
31 – ஏகாதசி விரதம்

## ஆகஸ்ட்

02 – பிரதோஷ விரதம்
04 – ஆடி அமாவாசை விரதம்
07 – ஆடிப்பூரம்
09 – நாக சதுர்த்தி விரதம்
11 – சஷ்டி விரதம்
16 – ஏகாதசி விரதம்
17 – பிரதோஷ விரதம்
19 – பூரணை விரதம்
23 – சங்கடஹர சதுர்த்தி
26 – கார்த்திகை விரதம்
30 – ஏகாதசி விரதம்

## செப்டம்பர்

01 – பிரதோஷ விரதம்
03 – அமாவாசை விரதம்
07 – ஆவணி சதுர்த்தி விரதம்
09 – சஷ்டி விரதம்
12 – ஆவணி மூலம்
14 – பரிவர்த்தன ஏகாதசி விரதம்
15 – பிரதோஷ விரதம், ஆவணி ஓணம்
17 – பூரணை விரதம்
21 – சங்கடஹர சதுர்த்தி
22 – கார்த்திகை விரதம்
29 – ஏகாதசி விரதம்
30 – பிரதோஷ விரதம்

## அக்டோபர்

03 – அமாவாசை விரதம்
04 – நவராத்திரி விரதாரம்பம்
07 – சதுர்த்தி விரதம்
09 – சஷ்டி விரதம், சரஸ்வதி பூஜாரம்பம்
11 – சரஸ்வதி பூஜை
12 – விஜயதசமி, கேதார கௌரி விரதாரம்பம்
13 – ஸ்மார்த்த ஏகாதசி
15 – சனிப்பிரதோஷ விரதம்
17 – பூரணை விரதம்
19 – கார்த்திகை விரதம்
21 – சங்கடஹர சதுர்த்தி
28 – ஏகாதசி விரதம்
30 – பிரதோஷ விரதம்

## நவம்பர்

01 – தீபாவளி, அமாவாசை விரதம், கேதார கௌரி விரதம்
02 – கந்தசஷ்டி விரதாரம்பம்
05 – சதுர்த்தி விரதம்
07 – கந்தசஷ்டி விரதம்
12 – உத்தான ஏகாதசி விரதம்
13 – பிரதோஷ விரதம்
15 – பூரணை விரதம், சர்வாலய தீபம்
16 – திருக்கார்த்திகை விரதம், விநாயக விரதாரம்பம்
19 – சங்கடஹர சதுர்த்தி
27 – ஏகாதசி விரதம்
29 – பிரதோஷ விரதம்

## டிசம்பர்

01 – அமாவாசை விரதம்
05 – சதுர்த்தி விரதம்
06 – விநாயக சஷ்டி விரதம்
08 – திருவெம்பாவை பூஜாரம்பம்
11 – ஏகாதசி விரதம்
13 – கார்த்திகை விரதம், பிரதோஷ விரதம்
15 – பூரணை விரதம்
17 – திருவெம்பாவை நிறைவு, ஆர்த்திரா தரிசனம்
19 – சங்கடஹர சதுர்த்தி
27 – ஏகாதசி விரதம்
28 – பிரதோஷ விரதம்
30 – அமாவாசை விரதம்

### மாமன்றத்தில் நடேசர் அபிஷேகம்

22.02.2005 (மாசி பூர்வபட்ச சதுர்த்தசி)
01.05.2005 (சித்திரைத் திருவோணம்)
13. 07.2005 (ஆனி உத்தரம்)
18.08.2005 (பூர்வபட்ச சதுர்த்தசி)
16.10.2005 (பூர்வபட்ச சதுர்த்தசி)
17.12.2005 (மார்கழித் திருவாதிரை)

### மாமன்ற வருடாபிஷேகம்

24.04.2005 (சித்திரைச் சுவாதி)

### குருபூசை தினங்கள்

03.05.2005 திருநாவுக்கரசு நாயனார்
26.05.2005 திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
10.06.2005 மாணிக்கவாசக சுவாமிகள்
12 .08. 2005 சுந்தரமூர்த்தி நாயனார்
24.11.2005 ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

### நினைவு தினங்கள்

19.07.2005 சுவாமி விபுலானந்தர்
05.12.2005 ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரமௌலீஸ்வரர் கோயில்கொண்ட தொண்டீஸ்வரம்

த. மனோகரன்

இற்றைக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் இலங்கைக்கரையில் விஜயன் கரையொதுங்கியதாக வரலாற்றில் கூறப்பட்டுள்ளது. அதாவது கி.மு. 237 இல் இலங்கைக்குப் பௌத்தசமயம் தேவநம்பியதீசன் என்ற அரசன் காலத்தில் மகிந்த தேரரால் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திற்கு முன் இரண்டரை நூற்றாண்டுகளுக்கு முன்பே விஜயன் இலங்கைக் கரையில் ஒதுங்கியதாக மகாவம்சம் கூறுகின்றது.


விஜயன் இலங்கைக்கு வந்தொதுங்கிய காலத்தில் அதாவது இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் பிரசித்திபெற்ற ஐந்து சிவாலயங்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

வரலாற்று ஆய்வாளரும், வரலாற்றாசிரியருமான கலாநிதி போல் பீரிஸ் என்ற சிங்கள இனத்தைச் சேர்ந்த அறிஞர் றோயல் ஆசிய சங்கத்தின் (JOURNAL OF THE ROYAL ASIATIC SOCIETY) வெளியீட்டில் இதுபற்றி 1917 இல் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு விஜயன் வருகை தருவதற்கு மிக நீண்டகாலத்திற்கு முன்பு இலங்கையில் ஐந்து பிரசித்திபெற்ற சிவஈஸ்வரங்கள் இருந்தன. அவை திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், தொண்டீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம் என்னும் ஐந்துமாகும். ஒன்று கலாநிதி போல் பீரிஸ் தெளிவாகக் கூறியுள்ளார்.

நகுலேஸ்வரம் இலங்கையின் வடக்கினும், திருக்கோணேஸ்வரம் கிழக்கிலும், முன்னீஸ்வரம், திருக்கேதீஸ்வரம் என்பன மேற்கிலும், தொண்டீஸ்வரம் தெற்கிலும் அமைந்துள்ளன. இவை ஐந்துமே பழம்பெரும் ஈஸ்வரங்களான பஞ்சேஸ்வரங்கள் என்று குறிப்பிடப்படுகின்றன.

போர்த்துக்கீசரின் வருகையின்பின் அவர்களால் இச் சிவாலயங்கள் சிதைக்கப்பட்டன என்பது வரலாறு. தமிழர் வாழும் பகுதிகளில் அந்நியர்களால் சிதைக்கப்பட்ட சிவாலயங்கள் மீண்டும் சிவாலயங்களாக மீளமைக்கப்பட்டன.



இலங்கையின் தென்முனையிலிருந்த தொண்டீஸ்வரம் எனும் சிவாலயம் விஷ்ணு ஆலயமாக புனர் நிர்மானம் செய்யப்பட்டு இன்று பிரசித்திபெற்ற விஷ்ணு ஆலயமாக விளங்குகின்றது.

இன்று பாடசாலை மட்டத்திலும் பல்கலைக்கழக மட்டத்திலும் பழம்பெரும் பஞ்ச ஈஸ்வரங்களாக நகுலேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம் என்பவற்றுடன் பொன்னம்பலவாணேஸ்வரம், ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் என்பவற்றைப் பயிற்றுவிக்கின்றனர். சில பாடப் புத்தகங்களில் கூட இதே தவறு உள்ளது.

கலாநிதி போல் பீரிஸ் போன்ற சிங்கள ஆய்வாளர்கள் தென்னிலங்கையிலிருந்த சிவாலயத்தைச் சுட்டிக்காட்டும் போதும் நமது தமிழ், இந்து, வரலாற்று ஆய்வாளர்கள், பேராசிரியர்கள் போன்றவர்கள் இந் நாட்டின் நமது இன , மத, வரலாற்றுச் சான்றுகளை ஆராயாதிருப்பது கவலைக்குரியது. சங்ககாலம், பல்லவர் காலம், சோழர் காலம் என்று முன்பு எழுதப்பட்டவற்றையே திரும்பத் திரும்ப மாற்றி எழுதுவதால் பயனில்லை. வரலாற்று உண்மைகள் மறையாது, மறைக்கப்படாது வெளிக்கொண்டுவர வேண்டிய பொறுப்பு தட்டிக்கழிக்கப்படுவது அறிவியல் ஆய்வியல் சார்ந்த அறிஞர்களது புலமைக்கு சிறப்பு சேர்க்காது.

மறக்கப்பட்டுவிட்ட தொண்டீஸ்வரம் பற்றிய கிடைக்கப் பெற்ற விபரங்களைப் பார்ப்போம்.

இலங்கையின் தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் தென் முனையிலுள்ளது தேவேந்திரமுனை. பருத்தித்துறையிலிருந்து தேவேந்திர முனைவரையும் என்று கூறப்படுவதை நாம் அறிவோம். வடமுனையில் பருத்தித்துறையில் உள்ளது பசுபதீஸ்வரம். அதேபோல் தென்முனையில் அதாவது தேவேந்திர முனையில் இருந்தது தொண்டீஸ்வரம்.

தொண்டீஸ்வரம் அமைந்திருந்ததால் ஐரோப்பியர் தொன்றாமுனை (DONRA POINT) என்று தேவேந்திர முனையைக் குறிப்பிட்டுள்ளனர். நீர்கொழும்பு என்ற தமிழ்ப் பெயர் நிகம்பு (NEGOMBO) என்றும் சிலாபம் (CHILAW) என்றும் சிலொவ் ஐரோப்பியரால் குறிக்கப்பட்டமை போன்று தொண்டீஸ்வரம் இருந்தமுனை தொன்றா முனை என்று குறிக்கப்பட்டுள்ளது, பெயர் மாற்றமடைந்துள்ளது என்றே கொள்ள வேண்டும்.

## சந்திரமௌலீஸ்வரர்

தொண்டீஸ்வரத்தின் மூலமூர்த்தியாக விளங்கிய சிவன் சந்திரமௌலீஸ்வரர் என்ற திருநாமம் பெற்றிருந்தார் என்றும், தொண்டீஸ்வரத்தின் கோபுரம் கடலில் செல்லும் கப்பல்களுக்கு திசைகாட்டியாக இருந்ததென்றும் கிரேக்க மாலுமிகளால் வரையப்பட்டு நூலகமொன்றில் காணப்படும் தேசப்படமொன்றில் இச் சிவாலயம் குறிக்கப்பட்டுள்ளதும் தெரியவந்துள்ளது. சிவலிங்கத்தின் முடியில் பெறுமதிவாய்ந்த மாணிக்கக்கல்லொன்று கிரீடமாகப் பதிக்கப்பட்டும் இருந்துள்ளது. என்று கூறப்பட்டுள்ளது.

இது மட்டுமன்றி கோயில் விமானத்தில் தங்கத் தகடுகள் பதிக்கப்பட்டு இருந்தமையால் சூரிய ஒளி பட்டுப் பிரகாசித்ததாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போர்த்துக்கேய எழுத்தாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இவ்வொளி மாலுமிகளுக்கு உதவியாயிருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. சிறப்பாக இயங்கிவந்த இச் சிவாலயம் போர்த்துக்கீச படையினரால் சிதைக்கப்பட்டதுடன் ஆலய பூசகர்களான பிராமணரை இம்சைப்படுத்தும் நோக்கில் மூலஸ்தானத்தில் வைத்துப் பசுவொன்று வெட்டிக்கொலை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

1998 நவம்பர் மாதம் வெளியாகிய லண்டன் நகரில் பிரபலமான வார இதழான நியூஸ்லங்கா (NEWS LANKA) வில் "சிவலிங்கம் ஒன்று தெவிநுவரவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க தெவிநுவரை விசித்ராம விகாரையின் (HISTORICAL VICHITHRAMA VIHARAVA) ஒத்பிலிம விகாரையில் (OTHPILIMA VIHARA) இச் சிவலிங்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது".

"ஒருவர் நிலத்தைச் செதுக்கிக் கொண்டிருந்தபோது அச்சிலை கண்டுபிடிக்கப்பட்டது. அச்சிவலிங்கம் 4 அடி உயரமும் 2 1/2 அடி அகலமும் கொண்டது. முன்பும் கூட அதே வளவில் இது போன்ற உருவங்கள் கண்டெடுக்கப்பட்டன. இப் பகுதியில் முன்பு சிவதேவாலயம் இருந்ததற்கான ஆதாரமாக இதனைக் கொள்ள முடியும்" என்று கூறப்பட்டுள்ளது.

அண்மைக் காலத்தில் இப் பகுதியில் ஒரு இந்துக் கோயிலில் இயங்கியதாக ஆதாரம் இல்லாதிருப்பதால் இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ள சிவலிங்க மூர்த்தியானது தொண்டீஸ்வரத்திலிருந்த மூர்த்தியாக இருத்தல் வேண்டும். அத்துடன் அதன் அளவை நோக்கும்போது அப்பழம் பெரும் கோயிலின் மூலமூர்த்தியாகவே இருத்தல் வேண்டும்.

அதேபோன்று அன்றை தொண்டீஸ்வரமாகிய இன்றைய விஷ்ணுகோயிலில் காணப்படும் நந்தியும் சிவாலயத்தின் இருப்பை உறுதி செய்கின்றது. நன்கு வடிவமைக்கப்பட்ட நந்தியும், சிவலிங்கமும் தொண்டீஸ்வரத்தை மீள உலகிற்கு விளக்கும் சான்றுகளாயுள்ளன.

தேவேந்திர முனை என்றும், தொன்றா முனை என்றும் குறிக்கப்பட்ட அவ்விடம் இன்று தெவிநுவர என்று பெயர் கொண்டு விளங்குகின்றது. தெவிநுவர என்ற சிங்களச் சொல்லின் பொருள் தேவநகரம் அல்லது தெய்வநகரம் என்பதாகும்.

இன்று தென்னிலங்கையின் கடற்கரையில் சிறப்புடன் விளங்கும் பெயர் மாறிய தொண்டீஸ்வரத்தின் மூலமூர்த்தியாக மகாவிஷ்ணு விளங்குகின்றார். அத்துடன் சகல இந்து தெய்வங்களுக்கும் தனித்தனிக் கோயில்கள் அங்கு சிறப்புடன் உள்ளன.

பிள்ளையார் கோயில், கந்தசுவாமி கோயில் வள்ளியம்மன் கோயில், பத்தினியம்மன் கோயில், கிழக்குத் தேவதை கோயில், தடிமுண்ட என்று பௌத்தர்களால் குறிக்கப்படும் காவல் தெய்வத்தின் கோயில் என்பன அங்கு தனித்தனியாகவுள்ளன. பழம்பெரும் சிவாலயத்தில் சிவன்கோயில் இன்று உள்ளதா என்ற வினாவும் எழலாம்.

இவ்விடத்தில் நாம் ஒரு விடயத்தை ஆராய்வது பொருத்தமாகும். சிவனொளிபாத மலையைச் சிங்களத்தில் சமனெலகந்த என்கின்றனர். சிவனொளிபாத திருவிழாவிற்கு இரத்தினபுரி சமன் தேவாலயத்திலிருந்து தெய்வத்திருவுருவம் கொண்டு செல்லப்படுகின்றது. சிவன் என்று நாம் தமிழில் குறிப்பிடும் பெயர் சமன் என்று சிங்கள மொழியில் மருவியுள்ளது என்பது பொருத்தமாக, ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவுள்ளது. இது பற்றி ஆய்வு செய்ய வேண்டும்.

அன்று தொண்டீஸ்வரம் என்று பெயர்கொண்டிருந்த அப் புனித இடத்தில் இன்று சமன் தேவாலயமும் இருக்கின்றது. இந்துத் தெய்வங்களான பிள்ளையார், அம்மன், முருகன், விஷ்ணு ஆகியோருடன் சமன் என்ற மருவிய திருப்பெயருடன் சிவனாரும் எழுந்தருளியுள்ளார் என்று கொள்வது பொருத்தமாகும். கிழக்குத் தேவதை என்னும் போது கிழக்கில் உதயமாகும் சூரியன் என்று கொண்டால் இந்து மதத்தின் ஆறு பிரிவுகளும் ஒருங்கே அமைந்த இடமாக பண்டைய தொண்டீஸ்வரமாகிய இன்றைய தெவிநுவரைவிஷ்ணு கோயில் விளங்குகின்றது எனலாம்.

விஷ்ணுவுக்கோ ஏனைய இந்துத் தெய்வங்களுக்கோ தொடர்பற்ற நந்தி விஷ்ணு தேவாலய வளவினுள்ளே கந்தசுவாமி கோயில் முன்னால் சகல அம்சங்களுடனும் உள்ளது.

தொண்டீஸ்வரம் இருந்த முனை ஐரோப்பியரால் தொன்றாமுனை (DONRA POINT) என்று குறிப்பிடப்பட்டமையும், கிரேக்க மாலுமிகளால் வரையப்பட்ட தேசப்படத்தில் சிவாலயம் அதேயிடத்தில் குறிக்கப்பட்டுள்ளமையும், போர்த்துக்கீச எழுத்தாளர்களின் கூற்றுக்களும் தற்போது கண்டெடுக்கப்பட்டுள்ள சிவலிங்கம், நந்தி, என்பனவும் அங்கு அதாவது இலங்கையின் தென்முனையில், தேவேந்திர முனையில் விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்பிருந்த பஞ்சாஸ்வரங்களில் ஒன்றாகிய தொண்டீஸ்வரத்தின் அமைவிடத்தை உறுதிப்படுத்துகின்றன.

ஐந்து நூற்றாண்டுகளாக மறைந்திருந்து இன்று மீண்டும் வெளியுலகிற்குத் தெரியவந்துள்ள பழம்பெரும் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றாகிய தொண்டீஸ்வரம் பற்றி மேலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். தொண்டீஸ்வரத்தில் எழுந்தருளி பல்லாயிரம் ஆண்டுகள் அருள் வழங்கிய சந்திரமௌலீஸ்வரரின் அருள் மீண்டும் இந் நாட்டில் அமைதிக்கும், நலனுக்கும் துணைசெய்யவும், தமிழ், இந்து மக்களின் வரலாற்று உறுதிக்கும் பண்டைய இருப்புக்கும் ஆதாரமாக விளங்கவும் வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும்.

பஞ்சஈஸ்வரங்களின் தொன்மையான வரலாறு இலங்கைத் தமிழரது, இந்துக்களது வரலாற்றுடன் பின்னிப் பிணைந்ததென்பதை கவனத்திற் கொள்ளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இது சிறுவர்களுக்கான சிறப்புப் பகுதி. ஸ்ரீராமகிருஷ்ணரின் நீதிக் கதை ஒன்றினை இங்கு தருகிறோம். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இக்கதையைப் படித்துக் காட்டி அதன் தத்துவத்தை விளக்குவது கடன்.**

# தன்வினை தன்னைச் சுடும்

ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான். அவன் எந்தக் காரியத்தைச் செய்தாலும் தனது குலகுருவைக் கலந்து ஆலோசித்துத் தான் செய்வான்.

அரசகுரு புரோகிதத் தொழிலில் வல்லவர். வருங்காலத்தைத் தெரிந்து உரைக்கும் ஆற்றல் பெற்றவர். சகல கலைகளும் உணர்ந்த அவர் பார்ப்பதற்கு அழகாகவும் விளங்கினார். எலுமிச்சம்பழம் போன்ற நிறம். ஆனால், பற்கள் மட்டும் சிறிது வெளியே நீட்டிக் கொண்டிருக்கும்.

ஒருநாள் அரசகுரு அரண்மனைக்கு வந்து கொண்டிருந்தார். வழியில் தம்மைப் போலவே இருக்கும் புரோகிதர் ஒருவரைக் கண்டார். அவர் அரசகுருவைப் போலவே இருந்தார். நிறமும் அப்படியே இருந்தது. எல்லாவற்றையும் விடப் பெரிய ஆச்சரியம் என்னவென்றால், இந்தப் புதிய புரோகிதரின் பற்களும் வெளியே நீட்டிக் கொண்டிருந்தன.

தம்மைப் போலவே உள்ள அந்த மனிதரைப் பார்த்த அரசகுரு 'தாங்கள் யார்?' என்று கேட்டார். "ஐயா, நான் வில்வ நாட்டைச் சேர்ந்தவன். எங்கள் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டுவிட்டதால் புறப்பட்டு இங்கே வந்து விட்டேன். இங்கு ஒரு நண்பர் என்னை ஆதரித்து வருகிறார்" என்றார் புதியவர்.

இதனைக் கேட்ட அரசகுருவின் மனத்தில் பொறாமை ஏற்பட்டது. 'இவனை உயிருடன் விட்டு வைத்தால் என்றாவது ஒரு நாள் இவன் நமக்குப் போட்டியாக வந்து விடுவான். இவனை எப்படியாவது ஒழித்துவிட வேண்டும்!' என்று அப்பொழுதே தீர்மானம் செய்து கொண்டார். பிறகு தமது எண்ணத்தை வெளிக்குக் காட்டாதவராய் அவரிடம் அன்பாகப் பேசி அவரை அனுப்பிவிட்டார்.

ஒரு நாள் அரசன் அரசகுருவிடம் "குருவே, பகைவர்களால் நமது நாட்டுக்கு அடிக்கடி துன்பம் ஏற்படுகிறது. பகைவர்களின் படையெடுப்பிலிருந்து நமது நாட்டைக் காப்பாற்ற என்ன செய்யலாம்" என்று கேட்டான்.

'அரசே, நகருக்கு வெளியே ஒரு பெரிய காளி கோயில் எழுப்ப வேண்டும். காளி தேவிக்கு முறைப்படி செய்ய வேண்டிய பூசைகள் அனைத்தும் செய்ய வேண்டும். அதற்கு முதலில் உயிர்ப்பலி கொடுத்து அந்த மாமிசத்தையும் இரத்தத்தையும் பள்ளத்தில் இட்டு அதன்மேல் அடிக்கல் நாட்டினால்தான் காளிதேவி மகிழ்ச்சியடைவாள்' என்றார் அரசகுரு.

"அப்படியே செய்யுங்கள்" என்றான் அரசன். "நாளைய தினம் நாள் நன்றாக இருக்கிறது. நாளைய தினமே அடிக்கல் நாட்டும் பணியைத் தொடங்கி விடுவோம். பலி கொடுப்பதற்கு ஒரு பிராமணர் தேவைப்படுகிறார்" என்றார் அரசகுரு.

"நாட்டின் நன்மைக்காக எவ்வளவோ பேர் தங்கள் உயிரைத் தரச் சம்மதிப்பார்கள். எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுத்து விடலாம்" என்றான் அரசன்.

"அந்தப் பிராமணர் தங்க நிறமுள்ளவராக இருக்க வேண்டும். அத்துடன் அவரது முன் பற்கள் காளி தேவியின் பற்களைப் போல் வெளியே நீட்டிக் கொண்டிருக்க வேண்டும். இப்படிப்பட்ட உத்தமமான மனிதரையே காளிதேவி விரும்புவாள்" என்றார் அரசகுரு.

"நீங்கள் அம்மாதிரியான ஒரு மனிதரைத் தேர்ந்தெடுத்து வாருங்கள்" என்று அரசகுருவிடமே அந்தப் பொறுப்பை ஒப்படைத்தான் அரசன்.

அதைக் கேட்டதும் அரசகுருவுக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி ஏற்பட்டது. 'தன்னைப் போலவே உள்ள – தனக்குப் போட்டியாக வந்துள்ள புதிய புரோகிதரை ஒழிப்பதற்கு இதுவே சரியான தருணம்' என்று நினைத்துக் கொண்டார்.

அந்த மகிழ்ச்சியுடனேயே வீட்டுக்குச் சென்றார். என்றுமில்லாதவாறு மிகவும் மகிழ்ச்சியுடன் வந்த அரசகுருவைப் பார்த்து அவர் மனைவி, 'இன்று என்ன அளவுக்கு மீறிய சந்தோஷத்துடன் இருக்கிறீர்கள்!' அரசர் உங்களுக்கு மந்திரிப் பதவியைத் தந்து விட்டாரா? இல்லை, ஏதாவது ஓர் ஊருக்கு உங்களைச் சிற்றரசராக நியமித்திருக்கிறாரா?' என்று கேட்டாள்.

"பைத்தியக்காரி! நாளைய தினம் பார். அதை விடப் பெரிய காரியம் ஒன்று நடைபெறப் போகிறது" என்று கூறினார் அரசகுரு.

"அப்படி என்ன பிரமாதமான காரியம் நடைபெறப்போகிறது?" என்று கேட்டாள் அரசகுருவின் மனைவி.

"அந்த நீண்ட பல்லனை உனக்குத் தெரியுமா? எனக்குப் போட்டியாக ஒருவன் இவ்வூருக்குப் புதிதாக வந்திருக்கிறான். நாளைய தினம் அவன் மரணமடையப் போகிறான்" என்றார் அரசகுரு.

கணவர் கூறிய அந்தப் புரோகிதரை அவளும் பார்த்திருக்கிறாள். 'எவ்வளவு நல்ல மனிதர்!! பார்ப்பதற்கு சாதுவைப் போல் இருக்கும் அவருக்கா இந்தக் கொடிய தண்டனை? என்று நினைத்தாள் அரசகுருவின் மனைவி.

"அவர் அப்படி என்ன தவறு செய்து விட்டார்?" என்று கேட்டாள்.

"என்னைப் போலவே இருக்கிறானே, இதுவே பெரிய தவறில்லையா? எங்காவது வானத்தில் இரண்டு சந்திரன்கள் இருக்க முடியுமா? அதற்காகத்தான் இவனைக் கொல்வதற்கு ஏற்பாடுகள் செய்து விட்டேன்." என்று பெருமிதம் பொங்கப் பூராச் செய்தியையும் மனைவியிடம் கூறினார் அரசகுரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று இரவு முழுவதும் அரசகுருவின் மனைவிக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. 'எப்படியாவது அந்த எளிய பிராமணரைக் காப்பாற்ற வேண்டும்' என்று தீர்மானித்துக் கொண்டாள்.

அரசகுரு மகிழ்ச்சிக் கடலில் மிதந்தவாறே ஆனந்தமாகத் தூங்கிக் கொண்டிருந்தார். அவருடைய மனைவி இரவோடிரவாக வீட்டைவிட்டு வெளியேறி பிராமணர்கள் வசிக்கும் பகுதிக்குச் சென்றாள். அங்கிருந்த புதிய புரோகிதரின் வீட்டைத் தேடிக் கண்டுபிடித்தாள். அவரிடம் பூராச் செய்தியையும் கூறினாள்.

"இரவோடு இரவாக இந்த நாட்டை விட்டே ஓடிச் சென்று விடுங்கள். இங்கிருந்தால் உங்கள் உயிருக்கு அபாயம் ஏற்படும்" என்று கூறினாள்.

அவள் கூறியதைக் கேட்ட புரோகிதரும் தமது குடும்பத்தாருடன் அவ்வூரை விட்டு வெளியேறி விட்டார்.

இந்தச் செய்தி அக்கம் பக்கத்தில் இருந்தவர்களுக்கும் எப்படியோ தெரிந்து விட்டது. 'தங்க நிறமான மேனியுடன் நீண்ட பற்கள் உள்ள பிராமணனைக் காளிகோயில் கட்டுவதற்கு பலி கொடுக்கப் போகிறார்கள்' என்று அவர்களுக்குத் தெரிந்ததும், அவரைப் போலவே இருந்த வேறு சிலரும் அந்த ஊரை விட்டு இரவோடு இரவாக வெளியேறி விட்டனர்.

பொழுது புலர்ந்ததும் கோயில் கட்டுமிடத்தில் ஆழமாகக் குழி வெட்டப்பட்டது. பூசைக்குரிய பொருள்கள் வந்து சேர்ந்து விட்டன. அரசரும் மற்றவர்களும் வந்து விட்டனர். இன்னும் அரச குருவை மட்டும் காணோம்.

அவர் தமது பழைய விரோதியைத் தேடித் தேடி அலுத்து விட்டார். தம்மைப் போலவே உள்ள அந்த மனிதர் கிடைக்காவிட்டாலும் அவரைப் போல் உள்ள வேறு யாராவது கிடைத்தாலும் பரவாயில்லை என்ற நினைப்புடன் ஊர் பூராவும் சுற்றி அலைந்து விட்டார். அவர் கூறிய அங்க அடையாளங்களின்படி ஒருவர் கூடக் கிடைக்கவில்லை. பதற்றத்துடன் காளிகோயில் கட்டப்பட வேண்டிய இடத்திற்கு வந்தார். அவருக்கு முன்னாலேயே அரசரும் மந்திரிப் பிரதானிகளும் வந்திருந்தனர்.

"குலகுருவே தாங்கள் குறித்த நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறதே!" என்று கேட்டார் அரசர்.

"அரசே, மன்னிக்க வேண்டும், பலிக்கு ஏற்றவனைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காகவே இவ்வளவு நேரத்தைச் செலவிட்டேன். முடிவில் என்னுடைய முயற்சிகள் அனைத்தும் வியர்த்தமாகி விட்டன. நான் கூறிய அடையாளங்கள் உள்ள மனிதர்கள் முன் கூட்டியே செய்தியை அறிந்து கொண்டு இந்த ஊரைவிட்டே ஓடிப்போய் விட்டார்கள்" என்றார் அரசகுரு.

"அப்படியா! இம் மாதிரியான ஒரு நல்ல நேரம் மறுமுறை வாய்ப்பதரிது என்று கூறினீர்களே! இப்பொழுது என்ன செய்யலாம்? என்று குழம்பிய மனத்துடன் அரசகுருவைப் பார்த்துக் கேட்டான்" அரசன்.

"அரசே, எனக்கொரு யோசனை தோன்றுகிறது. நமது குலகுரு சொன்ன அடையாளங்கள் அனைத்தும் அவரிடமே பொருந்தியுள்ளன. இந்த நாட்டின் நன்மைக்காக அவரே தமது உயிரைத் தியாகம் செய்யலாம்" என்றார் மந்திரி.

இது என்ன பைத்தியக்காரத்தனமான யோசனை, நமது குலகுரு இல்லாவிட்டால் இந்தப் பூசையை யார் முன்னின்று நடத்துவது என்றான் அரசன்.

"அரசே, நமது குருவுக்கு எவ்வளவோ சீடர்கள் இருக்கிறார்கள் அனைவருக்கும் அவர் தமது வித்தைகள் அனைத்தையும் கற்பித்து இருக்கிறார். அவர்களில் ஒருவரைக் கொண்டு இந்தப் பூசைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம்" என்றார் மந்திரி.

"நல்ல யோசனை! இம்மாதிரியான தருணம் மறுமுறை வாய்ப்பதரிது. அப்படியே செய்து விடுவோம். எங்கே கூப்பிடுங்கள் இவரது சீடரை" என்றார் அரசர்.

கண்மூடிக் கண் திறக்கும் நேரத்திற்குள் அரசரின் ஆணை நிறைவேற்றப்பட்டது.

குலகுருவின் சீடன் ஒருவனை அரசரின் முன் கொணர்ந்து நிறுத்தினார்கள். அதே சமயத்தில் குலகுருவின் கழுத்தில் கயிற்றைக் கட்டி அவரைப் பலி கொடுப்பதற்கு தயார் செய்தார்கள்.

சீடன் குருவின் கழுத்தில் கட்டியிருந்த கயிற்றைப் பிடித்துக் கொண்டு குருவை யாக குண்டத்தைச் சுற்றி வலம் வரச் செய்தான்.

குருவும் சீடனும் தனியே வரும்போது 'சீடனே, நான் உனக்கு எவ்வளவோ கலைகளைக் கற்பித்து இருக்கின்றேன். ஆபத்து சமயத்தில் நீ தான் எனக்கு உதவ வேண்டும். இது தான் நீ எனக்குத் தரும் குருதட்சணை' என்று மெல்லிய குரலில் கூறினார் குரு.

"தங்களைக் காப்பாற்ற என்னால் இயன்ற அளவுக்கு முயல்கிறேன்" என்று கூறிய சீடன் குருவை அழைத்துச் சென்று பலி பீடத்தருகில் உட்கார வைத்தான். திடீரென்று ஏதோ யோசித்தவன் போல, அரசே நாம் பூசையைச் சற்று தாமதித்து ஆரம்பித்து விட்டதால் பலி கொடுக்க வேண்டிய நேரம் தவறி விட்டது. மீண்டும் மாலை தான் நல்ல நேரம் வருகிறது" என்றான் சீடன்.

"சரி, அப்பொழுதே பலி கொடுத்து விடுங்கள்" என்று கூறிவிட்டு அரசன் சென்றான். மற்றவர்களும் சென்று விட்டனர். கோயில் கட்டுவதற்கு அடிக்கல் போடுவதற்காக மிகப் பெரிய பள்ளம் வெட்டப்பட்டிருந்தது. அனைவரும் சென்ற பிறகு சீடன் ஓர் ஆட்டைக் கொண்டு வந்து கொன்று பள்ளத்தில் அதன் இரத்தத்தையும், மாமிசத்தையும் போட்டான். பின்னர் குருவின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த கயிற்றை அவிழ்த்து, "இருட்டியதும் ஒருவர் கண்ணுக்கும் தென்படாமல் தப்பித்துச் சென்று விடுங்கள்" என்று கூறினான்.

குருவும் 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று கருதியவராக ஒருவர் கண்ணிலும் படாமல் ஓடிச்சென்று விட்டார்.

சீடனும் ஆட்டு மாமிசத்தையும், இரத்தத்தையும் அரசரிடம் காட்டிக் குருவைப் பலியிட்டு விட்டதாகக் கூறினான்.

அரசனும் அவன் பேச்சை நம்பிக் கொண்டு அவ்விடத்தில் காளி கோயில் எழுப்புமாறு கூறினார்.

*பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா*
*பிற்பகல் தாமே வரும்.*

- நன்றி : குறள் நெறிக் கதைகள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இது மாணவர்களுக்கான பக்கம். இதில் சமய வரலாறு, மற்றும் புராணக் கதைகள் உட்பட மாணவர்களுக்குப் பயனுள்ள பல விஷயங்கள் அலங்கரிக்கின்றன. இது போன்ற விஷயங்கள் மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.**

# பெரிய புராணக் கதைகள்

## ஆள்பட்ட அடியார்

“அருட் பெருங் கடலாகிய சிவபெருமானால் தடுத்தாட் கொள்ளப்பட்டவர் திரு ஆரூரர் என்னும் சுந்தரமூர்த்தி நாயனார் ஆவர். தடுத்தாட் கொள்ளுதல் என்பது, இறைவன் அடியார் மீது அன்பு கொண்டு, அவர்கள் செல்கின்ற துன்ப நெறியிலிருந்து அவர்களை விலக்கி, தம்பக்கம் ஈர்த்துக் கொள்ளுதல் ஆகும். இவ்வாறு இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு ஆள்பட்டவரே சுந்தரர். இவர் இறைவரது ஆணைப்படி திருப்பதிகள் தோறும் சென்று, திருப்பதிகங்களாகிய செந்தமிழ்ப் பாமாலைகள் பாடித் தேனிசை பொழிந்தவர் ஆவார். இவரது சுவையான வாழ்க்கை வரலாறு அறிய வேண்டிய ஒன்றாகும்.

தமிழ் நாட்டின் ஒரு பகுதியாகிய விளங்கியது திரு முனைப்பாடி நாடு. இந்நாட்டை நரசிங்க முனையரையர் என்பவர், ஆட்சி புரிந்து வந்தார். அவர் அன்புள்ளமும், அறப்பண்பும் கொண்டவர். நாட்டு மக்களில் தம்மையும் ஒருவராக எண்ணி, அவர்களோடு நெருங்கிப் பழகி அவர்கள் நலம் பேணியவர்.

இந்நாட்டில் திருநாவலூர் சிறப்புடைய ஊர். வளம் மிகுந்தது. இங்குள்ள மக்கள் தெய்வ பக்தி நிரம்பியவர்கள். சைவ நெறியையே மெய்ந்நெறியாகக் கொண்டு வாழ்ந்தவர்கள்.

இவ்வூரில் சைவ அந்தணர் மரபில் சடையனார் என்று ஒருவர் இருந்தார். இவரது அன்பு மனைவியார் இசைஞானியார் ஆவர். இவர்களுக்கு அழகிய ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இக்குழந்தைக்குப் பெற்றோர்கள். நம்பியாரூரர் என்னும் பெயரைச் சூட்டி வளர்த்து வந்தனர்.

நம்பியாரூரருக்கு மார்பில் இரத்தினச் சுட்டிகையும், அரையில் அரைஞாணும், அடிகளுக்குச் சதங்கையும் அணிந்து பெற்றோர்கள் அழகு செய்தனர். இயற்கையிலேயே அழகுத் திருவோடு பிறந்த குழந்தைக்கு அணிகலன்கள் அணிந்தால் மேலும் அழகு மிகுந்து தோன்றுமல்லவா?

ஆரூரர் தளர்நடை பயின்று தெருவீதியில் சிறுதேர் உருட்டி விளையாடிக்கொண்டிருந்தார். நாட்டை ஆளும் மன்னர் நரசிங்க முனையார். இவரது காட்சியில் பட்டார் குழந்தை ஆரூரர். குழந்தையின் தெய்வ அழகில் சொக்கித் தம்மையே மறந்து நின்றார் மன்னவர். ஆரூரரை அன்பினால் வாரியெடுத்து மகிழ்ந்தார். குழந்தையின் பெற்றோர் யார் எனக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும் செய்தார்.

மன்னர் நேராகச் சடையனார் வீடு சென்றார். சடையனாரைக் கண்டு வணங்கி, அழகிய ஆரூரரைத் தமக்கு மகனாகத் தரும்படி கேட்டுக் கொண்டார். தம் மகன்மீது மன்னருக்கிருக்கும் அன்பையும் ஆசையையும் உணர்ந்து கொண்டார் சடையனார். இல்லையே என்னாத இனிய பண்பு படைத்தவராயிற்றே அவர்! எனவே மன்னர் விருப்பத்துக்கு மறுப்புக் கூறாது மகிழ்வோடு இசைந்தார். அன்றிலிருந்து ஆரூரர் மன்னர் மைந்தராக வளர்ந்து வரலானார்.

ஆரூரர் மன்னர் மாளிகையில் வளர்ந்த போதும் அந்தணர் மரபுக்குரிய ஒழுக்கங்களைக் கருத்தாகப் பேணி வந்தார். மார்பில் முந்நூல் அணிந்து, மறைகளையும் பிற நூற்களையும் கற்கலானார். கல்விகள் அனைத்தும்! இவருக்கு வருந்தாமல் திருந்த வந்தன.

ஆரூரருக்கு மணப் பருவம் வந்தெய்தியது. தக்க பருவத்தில் மணம் செய்து வைக்க வேண்டியது பெற்றோர்கள் கடமையல்லவா? எனவே சடையனாரும் தம் புதல்வருக்குத் திருமணம் செய்து வைக்க பெரிதும் விரும்பினார். மகனுக்குத் தகுந்த மங்கையைத் தேடலானார்.

திருநாவலூருக்கு அருகாமையில் புத்தூர் என்னும் ஓர் ஊர் உண்டு. இவ்வூரில் சைவ அந்தணர் மரபில் தோன்றிய சடங்கவியார் என்பவர் இருந்தார். இவருக்குப் பெண்மைப் பங்குகள் அனைத்தும் நிரம்பிய அழகிய மகள் ஒருத்தி இருந்தாள். இம்மங்கையே தம் மகனுக்கு ஏற்ற பெண் எனக் கருதிச் சடையனார் இவரிடம் மணம் பேசப் பெரியோரை அனுப்பி வைத்தார். சடங்கவியாரும் இதற்கு இசைந்தார். திருமண நாளும் நிச்சயிக்கப்பட்டது.

திருமண நாளன்று ஆரூரர் அழகுக் கோலம் புனைந்து, மணப் பந்தலினுள் வந்து தமக்குரிய ஆசனத்தில் அமர்ந்திருந்தார். மணச் சடங்குகள் தொடக்கமாயின. இந்நேரம் முதுமை சான்ற அந்தணர் ஒருவர் அங்கே வந்தார். இவர் முதுமைப் பருவம் உடையவராயினும் இவரது தோற்றம் அங்கிருந்தோர் அனைவரையும் கவர்ந்தது. அழகிய திருநெற்றியிலே வெண்ணீறு அணிந்திருந்தார். இவரது தலை மயிர் அனைத்தும் நரைத்து வெள்ளிய வண்ணத்தில் ஒளி வீசிக் கொண்டிருந்தது. காதுகளில் குழைகளும், மார்பில் முந்நூல், தோளில் வெள்ளை மேலாடையும் இலங்கி எழில் வீசின.

வந்த இம்முதியவர் அனைவரும் காண ஆரூரர் முன்னே வந்து, ''இங்கிருப்போர் அனைவரும் நான் சொல்வதைக் கேளுங்கள்'' எனக் கூறினார்.

மறையோரும் பிறரும், அவரை நோக்கி, ''பெரியீர், தாங்கள் இங்கு வந்தது எங்கள் பெரும் தவமேயாகும். தாங்கள் சொல்ல விரும்புவதைச் சொல்லுங்கள்'' என வேண்டிக் கொண்டார்கள்.

அந்தணர் ஆரூரரைப் பார்த்து, ''உனக்கும் எனக்குமுள்ள தொடர்பின் காரணமாகப் பெரும் வழக்கு ஒன்று உள்ளது. அதைத் தீர்த்த பின்னரே உன் திருமணம் நடக்க வேண்டும்'' என நவின்றார்.

முதிய அந்தணரின் இம்மொழிகளைக் கேட்டு மணப்பந்தலில் இருந்தோர் அனைவரும் திடுக்கிட்டுப் போயினர். ஆரூரரும் அந்நிலையே அடைந்தார். எனினும் அவர் தெளிவுகொண்டவராய், முதியவரைப் பார்த்து, ''ஐயா உமக்கும் எனக்கும் உண்மையாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கொன்று இருக்குமாயின் அது முடிந்த பின்னரே என் திருமணத்தைச் செய்து கொள்வேன். அவ் வழக்கு இன்னதென்பதைத் தெளிவாகச் சொல்லுங்கள்" என்று புன்முறுவல் அரும்ப, வேண்டிக் கொண்டார்.

இது கேட்ட முதியவர் அங்கிருந்தோரைப் பார்த்து, "அந்தணர்களே, நீங்கள் அனைவரும் கேளுங்கள். இந்த நம்பியாரூரன் என் அடிமை" எனக் கூறினார்.

இம்மொழி கேட்டு அங்கிருந்தோரில் சிலர் சினம் கொண்டார்கள். சிலர் எள்ளி நகைத்தார்கள். இன்னும் சிலர் முதியவர் பக்கமாக நெருங்கி வந்தார்கள். நம்பியாரூரர் அந்தணரைப் பார்த்து, "இந்த முதியவர் மொழிவது புதுமையாக உள்ளது. நன்றாகச் சொல்லுகிறார்!" என்று ஏளனமாகச் சிரித்தார்.

முதியவர் தம் மேலாடையைக் கையில் தாங்கிய ஆரூரரைப் பார்த்து, "ஏன் சிரிக்கின்றாய்? அந்த நாளில் உன் பாட்டன் எனக்கு எழுதிக் கொடுத்த அடிமை ஒலை இதோ உள்ளது. நான் வீணுக்குச் சொல்லுகிறேன் என நினைத்தாயா? என்று கூறினார்.

இதைக் கேட்ட நம்பியாரூரர், "அந்தணர்கள் மற்றொரு அந்தணருக்கு அடிமையாகும் வழக்கம் இது வரையிலும் இல்லையே. நீர் இப்போது சொல்லித் தான் கேட்கிறோம். நீ பித்தனாகவே இருக்க வேண்டும்" என்று பதில் உரைத்தார்.

முதியவர், "நான் பித்தனோ, பேயனோ என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள், இதற்காக நான் நாணப்படப் போவதில்லை. நீ இன்னும் என்னை அறியாது அறிவுடையவன் போல் பேசிக் கொண்டிருக்கின்றாய். பேச்சை நிறுத்திப் பணியைச் செய்" என்று கூறினார்.

முதிய அந்தணரின் உருவமும் தோற்றமும் ஆரூரரின் உள்ளத்தில் அன்பைச் சொரிந்த போதிலும் அவர் தம்மை 'அடிமை' என்று கூறியது ஆரூரரால் பொறுக்க இயலவில்லை. இச்சொல் அவரிடம் கோபத்தை மூட்டியது. திகைப்பும் சினமும் கொண்ட ஆரூரர், முதியவர் கூறிய அடிமையோலையைப் பார்க்க அடங்கா வேகத்தோடு "எங்கே அந்த முறியோலை? என்னிடம் காட்டுங்கள்" என்றார்.

முதியவர் இகழ்வாக, "உன்னிடம் காட்டவா? நீ பணி செய்யும் தொண்டன். ஒலையைப் பார்க்கும் தகுதி உனக்கில்லை. பஞ்சாயத்தார் அதைப் பார்ப்பார்கள்" என்று பதிலளித்தார்.

இம்மொழிகளைக் கேட்ட நம்பியாரூரரால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. அவர் உள்ளத்தில் மேலும் வேகம் மூண்டது. அந்த ஒலையை எப்படியாவது கைப்பற்ற வேண்டுமெனக் கருதினார். எழுந்து முதியவரை நோக்கித் தாவினார். அவரோ இதைக்கண்டு அஞ்சியவர் போல் ஓடினார். முன்னும் பின்னுமாக இருவரும் அம் மணப்பந்தருக்குள்ளே ஓடினார்கள். இறுதியில் முதியவர் சோர்ந்தவர் போலானார். அவர் கையிலிருந்த அம்முறியோலையை வலிந்து பற்றி, "அந்தணர் அடிமையாவது எப்படி முறையாகும்" எனக் கூறி அவ்வோலையைக் கிழித்தெறிந்தார் ஆரூரர்.

முதியவர் இச்செயல் கண்டு, "இது முறையோ?" எனக் கூவினார். அங்கிருந்தோர் இருவரையும் விலக்கி அந்தணரிடம், "ஆமாம், நீ யார்? உமது ஊர் எது, சொல்லும்?" என வினவினார்கள்.

முதியவர் இதற்குப் பதிலாக, "நான் இவனது தலைவன். எனது ஊர் அருகேயுள்ள திருவெண்ணெய் நல்லூர்தான்....... அது இருக்கட்டும். இவன் அறநெறிக்கு முரணாக, என் கையிலிருந்த ஒலையைப் பற்றிக் கிழித்ததினால் இவன் எனக்கு அடிமையென்பதை மெய்ப்பித்துவிட்டான்" எனக் கூறினார்.

இதைக் கேட்ட நம்பியாரூரர் 'இவர் வழிக்காட்டுவதைப் பழக்கமாய்க் கொண்டவர்போல் தெரிகிறது' எனத் தம்முள் நினைத்துக் கொண்டார். ஆனால் அப்பெரியாரிடம் தமக்குப் பாசம் பொங்கிப் பெருவதைக் கண்டு வியப்பும் திகைப்பும் கொள்ளலானார் ஆரூரர். அந்தண முதியவரிடம் ஆரூரர், "உமக்குத் திருவெண்ணெய் நல்லூரானால் உமது வாழ்க்கை அங்கேயே பேசி முடிவு செய்யலாம்" எனத் தம் கருத்தைத் தெரிவித்தார்.

இதற்கு முதியவர் இசைந்து, "அப்படியே செய்வோம். அங்குள்ள ஆன்றோர் முன்னிலையில் என்னிடமுள்ள மூலவோலையைக் காட்டி நீ அடிமை என்பதை நிரூபிப்பேன்" என்று சொல்லிக் கோலூன்றி முன்னே நடக்கலானார். நம்பியாரூரர் அவரைப் பின்தொடர்ந்தார். அந்த அதிசய வழக்கைக் கேட்ட உற்றார் உறவினர்களும், 'என்ன ஆகுமோ? ஏது நிகழுமோ?' என்ற திகைப்புடன் இவர்களைப் பின்தொடர்ந்து செல்லலாயினர்.

அனைவரும் திருவெண்ணெய் நல்லூரை அடைந்தார்கள். அங்குள்ள அந்தணர் அவையில் முதியவர் சென்று, "அவையோரே, இந்த நாவலூரான் எனது அடிமை. இவன் பாட்டன், தானும் தன் வழித்தோன்றல்களும் எனக்கு அடிமை என ஒலை எழுதித் தந்திருந்தான். அந்த ஒலைப் பிரதியை இவன் என்னிடமிருந்து வலிந்து பற்றிக் கிழித்தெறிந்து விட்டான். இதுவே நான் உங்களிடம் முறையீடு செய்து கொள்ளும் வழக்கு" எனத் தெரிவித்தார்.

அவையினர் நம்பியாரூரரைப் பார்த்து, "இந்த முதியவரிடமிருந்து அடிமையோலையை வலிந்து பற்றிக் கிழித்தெறிந்தது முறையன்று. இது உமது தோல்வியையே காட்டும். முதியவரோ அனைவரும் ஏற்கும் வண்ணம் தமது வழக்கைத் தெரிவிக்கிறார். நாவலூரர் தம் கருத்தைத் தெரிவிக்கட்டும்!" என வினவினர்.

நாவலூரர் அனைவரையும் பார்த்து, "பெரியீர், நீங்கள் நூலறிவு சான்றவர்கள். நான் ஆதி சைவன் என்பதையும் அறிவீர்கள். இவரோ, என்னை அடிமையெனக் கூறுகிறார். இது ஒரு மாயமாகவே இருக்கிறது. இதற்கு என்னால் பதில் எதுவும் சொல்லத் தெரியவில்லை" என மொழிந்தார்.

அவையோர் அம்முதிய அந்தணரைப் பார்த்து, "பெரியீர், நீங்கள் சொல்வது அபூர்வ வழக்காய் உள்ளது. இதை நீங்கள் இப்போது எவ்வாறு உறுதிப்படுத்தப் போகிறீர்கள்?" என்று கேட்டார்கள். உடனே முதியவர், "உடன்படிக்கை உள்ளது. இவன் கிழித்தெறிந்தது படியெடுக்கப்பட்ட ஒலைதான். மூல ஒலை என் கைவசமே உள்ளது" எனத் தெரிவித்தார்.

"அவ்வாறு இருப்பின் அதைக் காட்டுக!" என்றனர் அவையோர்.

"காட்டுகிறேன். ஆனால் இதையும் இவன் கிழித்தெறியாது நீங்கள் தடுக்க வேண்டும்" என்றார் முதியவர்.

அவையினர் இதற்கிசையவே முதியவர் ஒலையை எடுத்தார். அவையினர் ஆணைப்படி கணககன் எல்லோரும் கேட்குமாறு அவ்வோலையைப் பெற்றுப் படித்தான். அதில் ஆரூரர் முதிய அந்தணருக்கு அடிமையென்பது ஐயமறத் தெளிவாயிற்று. ஆரூரரின் பாட்டனார் கையெழுத்து இதை உறுதி செய்தது.

இதைக் கண்ட அவை மறையோர்கள் ஆரூரரிடம், "இனி மறுக்க வழியில்லை. உமது பக்கம் வழக்கு தோற்றுவிட்டது. நீர் முதியவருக்கு தொண்டு செய்ய வேண்டியதுதான்" எனத் தீர்ப்பு வழங்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்ப்பைக் கேட்ட நம்பியாரூரர் அதிர்ந்து போனார். அவர், "விதி வழி இதுவென்றால் என்னால் என்ன செய்ய இயலும்? நான் எவ்வாறு மறுக்கக் கூடும்?" எனப் பதில் மொழிந்தார்.

அவையோர் அம் முதியவரைப் பார்த்து, "ஐயா! நீர் காட்டிய ஓலையில் உம்மை எங்கள் ஊரினர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இதுவரையிலும் நாங்கள் உம்மை இங்கு பார்த்ததில்லையே! உமது வீடு இங்கு எங்கே உள்ளது?" எனக் கேட்டார்கள்.

முதியவர் வியப்படைந்தவர் போல் தோற்றம் காட்டி, அந்தணர்களிடம் " என்னை உங்களில் யாரும் அறிய மாட்டீர்களா? அப்படியானால் என்னுடன் வாருங்கள். என் இருப்பிடத்தைக் காட்டுகிறேன்" என்று சொல்லி, அவர் செல்லவும் அவரைப் பின்தொடர்ந்து அந்தணரும் ஆரூரரும் சென்றார்கள்.

முதியவர் திருவெண்ணெய் நல்லூரிலுள்ள திருவருள் துறை என்னும் திருக்கோயிலினுள் புகுந்தார். அவ்வளவு தான்! என்னே வியப்பு! உள்ளே நுழைந்த வரைப் பின்னர் காணவில்லை. எல்லோரும் திகைப்பும் வியப்பும் கொண்டு நின்றார்கள்.

"என்னை அடிமை கொண்ட முதியவர் இந்தக் கோயிலுக்குள் ஏன் புகுந்தார்? அவர் மறைந்த விதந்தான் என்ன?" என்று நினைத்தவராய் ஆரூரர் அவரை அழைத்தவாறு அங்கே தேடிச் சென்றார்.

என்னே இன்பப் பேறு! ஆரூரர் முன்னே பிறை சூடிய பெருமான், உமையம்மையாருடன் விடைமேல்தோன்றிக் காட்சியளித்தார். அந்நேரம் இறையனார் மறைகமழும் திருவாயினின்றும், "நீ முன்னமேயே நமக்குத் தொண்டன். உள்ளத்தில் எழுந்த விருப்பத்தின் காரணமாய் இம்மண்ணுலகில் வந்து பிறந்தாய், உன்னைத் துன்பம் தொடராத வண்ணம் தடுத்து ஆட்கொண்டோம்" என்ற மொழிகள் மலர்ந்தன.

ஆரூரர் பெற்ற நிலையை என்னென்று சொல்லஇயலும்? தாய்ப்பசுவின் குரல் கேட்ட கன்று போல் ஆனார். அவரது நெஞ்சம் பக்தியுணர்வில் தோய்ந்து பொங்கியது. மெய்யெல்லாம். சிலிர்த்தது; இறைவனின் பேரருள் கனிவை நினைந்து நினைந்து உருகினார்; கசிந்து கசிந்து கண்ணீர் மல்கினார்; சொற்கள் குழற "எம் பெருமானே, அடியேனை வலியவே வந்து ஆட்கொண்டீரோ?" எனக் கூறி நிலமிசை வீழ்ந்து வணங்கினார். விண்ணிலே அமரர் இசைபொழிந்தனர்; மலர்மாரி பெய்தனர். மண்ணவர் களிகொண்டனர். மறை எங்கும் ஒலித்தது.

இறைவருக்கு ஆரூரர் எவ்வாறு முன்னரே தொண்டர்? மண்ணில் அவர் பிறப்பதற்கு முன் திருக்கைலாய மலையிலுள்ள அடியார்களில் ஒருவரான ஆலாலசுந்தரராய் இருந்தவர். இவர் அங்கு மலர் கொய்யச் சென்ற இடத்தில் அருந்திதை, கமலினி என்ற இருபெண்கள் மீது கொண்ட மையலை உணர்ந்த இறைவர், இவர்களை மண்ணுலகில் பிறப்பெடுத்துத் தம்மை வந்து சேரத் திருவாய் மலர்ந்தார். அவ்வாறு மண்ணகம் வந்து பிறந்தவரே ஆரூரர். இதையே இறைவர் ஆரூரருக்கு நினைவு படுத்தினார்.

ஆரூரருக்குத் திருக்காட்சியளித்த இறைவர் அவரை நோக்கி, "எம்முடன் நீ வன்சொற்கள் பேசியதால் வன்றொண்டன் எனப்படுவாய். நமக்கு அன்பில் சிறந்த அருச்சனை பாடலேயாகும். எனவே தமிழால் எம்மைப் பாடுக" என்றார்.

இதைக் கேட்ட ஆரூரர், "அருட்கடலே, தங்கள் பேரன்புப் பெருங்கருணையை நான் எவ்வாறு பாடுவேன்?" என்று சொல்லவும், இறைவர், "நீ நம்மைப் பித்தன் என்றாய். 'பித்தா' என்றே பாடுக என அருளினார்.

உடனே ஆரூரர் "பித்தா பிறைசூடி" என்ற பதிகத்தைப் பாடினார். இறைவர் மகிழ்ந்து, "இன்னும் பலவகையாக எம்மைப் பாடுக!" என்று கூறியருளி மறைந்தார். ஆரூரரும் அவ்வாறே பாமாலைகள் பாடி இறைவரை வழிபட்டு வந்தார்.

ஆரூரருக்குத் திருமணம் நடக்க வேண்டாத இடத்தில் நடக்க இருந்ததை இறைவரே வந்து நிறுத்தி, அவரை ஆட்கொண்டு வழிகாட்டி, அருள் புரிந்ததை இக்கதையிலிருந்து நாம் அறிந்து கொள்கிறோம்.

# மார்கழித் திருவாதிரை

**செல்வி தாரணி இரத்தினவேல்**

*தரம் 10, கொ/ திருக்குடும்பகன்னியர் மடம்*

"ஆண்டுதோறும் மார்கழித் திருவாதிரை தினத்தில் திருவெம்பாவை வழிபாட்டின் இறுதித் தினத்தில் நடராஜப்பெருமானை வழிபட்டு நோற்கும் விரதம் ஆகும். திருவெம்பாவையின் பூர்த்தியே திருவாதிரை. மார்கழி மாதம் தேவர்களுக்கு வைகறைப் பொழுதாகக் கருதப்படும். மார்கழித் திருவாதிரை அன்று சிதம்பரத்தில் நடராஜப் பெருமானுக்கு விசேட அபிடேக ஆராதனை இடம்பெறும். இதனை " ஆருத்திரா தரிசனம்" என்பர்.

நடராஜ வடிவம் சிவபிரான் புரியும் ஐந்தொழில்களையும் குறிக்கும். உடுக்கை ஏந்திய கை படைத்தலையும் அபயகரம் காத்தலையும், தூக்கிய திருவடி அருளலையும் தீச்சுடர் ஏந்திய கை அழித்தலையும் (முயலகனை) ஊன்றிய திருவடி மறைத்தலையும் குறிக்கும். "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்...." என்ற அப்பர் சுவாமிகளின் தேவாரம் நடராஜப் பெருமானின் திருவடிவத்தை நன்கு விளக்குகின்றது. மார்கழித் திருவாதிரை அன்று சேந்தனார் திருப்பல்லாண்டு பாடியதும் தேர் ஓடியது. பின்னர் ஆண்டுதோறும் திருவாதிரைத் திருவிழாக் காலத் தேரோட்டம் நிகழும் போது திருப்பல்லாண்டு ஓதும் வழக்கம் தில்லையில் ஒரு சைவ மரபாயிற்று.

*"சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த*
*தூய்மனத் தொண்டருள்ளீர்*
*சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்*
*சிறுநெறி சேராமே*
*வில்லாண்ட கனகத் திரண்மேரு*
*விடங்கன் விடைப்பாகன்*
*பல்லாண்டென்னும் பதங்கடந்தானுக்கே*
*பல்லாண்டு கூறுதுமே"*

சிதம்பரத்திலே திருவாதிரைக்கு முதல் நாள் இரவு மூன்றாம் சாமம் தொட்டுச் சபாநாயகருக்குப் பெருமுழுக்குச் செய்வார்கள். விடிந்ததும் அங்கே தேர்த்திருவிழா. தேருக்குச் சுவாமி புறப்படுவதற்கு முன் அவர் உள்வீதி வலம் வருவார். ஆனால் ஒரு வித்தியாசம் பெருமான் சுவாமியை நேர்முகமாகப் பார்த்தவண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்காட்டியே வலம் வருவார். தாம் தேடிப் பெற்றுக்கொண்ட "அருமருந்தை" ஓர் இமைப்பொழுது நேரமாகிலும் கண்ணாற் கண்டு பருகுதலைத் தவிர்க்க முடியாமல் இப்படிச் செய்கிறார் என புராணங்கள் கூறுகின்றது. மார்கழித் திருவாதிரையின் சிறப்பை திருஞான சம்பந்தரும் "ஆதிரை நாள் காணாது போதியோ பூம்பாவாய்" என்று பாடினார்.

சம்பந்தர் அப்பரிடம் திருவாரூரில் நடந்த சிறப்பைக் கூறும்படி சொல்ல அப்பர் பின்வருமாறு பாடுகின்றார்.

*"முத்துவிதான மணிப்பொற்கவரி முறையாலே*
*பக்தர்களோடு பாலையர் சூழப்பலிப்பின்னே*
*வித்தகக் கோல வெண்டலை மாணவ விரதிகள்*
*அத்தனாநூராருதிரை நாளாவது வண்ணம்"*

சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணத்தை ஒரு சித்திரை மாதத்துத் திருவாதிரை நாளிலேயே பாடித் தொடங்கினார். பெரிய புராணத்துக்குப் பொருள் விரிக்குமாறு அரசன் சேக்கிழாரிடங் கேட்டான். அப்பொழுது அவர் பொருள் விரிக்கத் தொடங்கியதும் ஒரு சித்திரை மாதத்துத் திருவாதிரை நாளாகும். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் ஒரு சித்திரைமாதத்து திருவாதிரை நாளிலேயே சீர்காழியில் திருவவதாரஞ் செய்தார் என்பதைச் சேக்கிழார் விதந்துரைக்கின்றார்.

இத்தகைய சிறப்புப் பொருந்திய திருவாதிரை நன்னாளில் நாமும் எமது துன்பங்கள் நீங்க அவனருளாலே அவன் தாள் வணங்கி ஆன்ம ஈடேற்றம் அடைவோமாக.



# தைப் பொங்கல்


சர்மிளா பாலசுப்பிரமணியம்
*(கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி)*




"**தை** பிறந்தால் வழி பிறக்கும்" என்பது முதுமொழி. தைமாதப் பிறப்பன்று தமிழ் மக்கள் தைப் பொங்கல் விழாவை கோலாகலமாகக் கொண்டாடுவார்கள். தைமாதப் பிறப்பன்று சூரியோதயத்துடன் எல்லா இல்லங்களிலும் பொங்கல் பொங்கப்படுகிறது. அதனால் இது தைப்பொங்கல் எனச் சிறப்புப் பெயரைப் பெறுகிறது.

இதனை உழவர்களின் மகிழ்ச்சி பொங்கும் விழா எனலாம். இதன் முதல் நாளாகிய போகியும், பொங்கல் விழா நடைபெறும் மூன்று நாட்களும் உழவர்களுக்கு சிறந்த நாட்கள். ஆடிமுதல் மார்கழி வரை நெற்பயிரிடும் காலம். இரவு பகல் இடைவிடாமல் உழைத்துச் சேர்த்த நெல்லை மார்கழி இறுதியில் வீட்டிற்கு கொண்டு வருவார்கள். அதனை மனைவி, மக்களுடன் வீட்டில் நிறைந்த மகிழ்ச்சியுடன் இவ்விழாவைக் கொண்டாடுவார்கள். உழவர்கள் மருதநில மக்கள். இது கழனியும் கழனி சூழ்ந்த இடமாகும். மருதநில மக்களின் தெய்வம் இந்திரன். மழை வளம் தருவது ஞாயிறு. உழவர்கட்கு பயிரிடப் பயன்படுவன மாடுகள். ஆகவே இந்திரனைப் போகியன்றும், ஞாயிறைப் பெரும் பொங்கலன்றும், மாடுகளை மாட்டுப் பொங்கலன்றும் உழவர்கள் வழிபடுகின்றனர். போகிப் பண்டிகை மார்கழி இறுதிநாள். ஆடிமுதல் உழைத்துக் களைத்த உழவர்கள் தம் சோர்வைப் போக்கிக் கொள்ளும் தைத் திருநாளிலே புத்தாடை அணிந்து புதிய பானையிலே புதிய நெல்லைக் குற்றியெடுத்து அரிசியைப் பொங்குவார்கள்.

புதிய பானைக்கு புதிய மஞ்சளை காப்பாக அணிவார்கள். கோலமிட்டு செம் மண் தீட்டிய தம் இல்ல வாசலிலே பிள்ளையார் பிடித்து வைத்து விளக்கேற்றி கதிரவனை வணங்கி பொங்கத் தொடங்குவார்கள். பொங்கல் பொங்கி வரும்போது உழவர்கள் மனைவி, மக்களுடன் சேர்ந்து பொங்கலோ, பொங்கல் என்று ஆரவாரித்து மகிழ்வார்கள்.

பொங்கல் பானையிலே அரிசி, பயறு, சர்க்கரை, ஏலம், சிறிதளவு இஞ்சிச் சாறு, சிறிதளவு கருப்பஞ்சாறு என்பன இட்டு நன்றாகத் துலாவி பொங்கல் பொங்கப்படும். இல்லத்தலைவன் தலைவாழை இலையிலே பொங்கல் சாதத்தைப் படைப்பான். சிவப்புப் பூவும், நீரும் கொண்டு பொங்கல் செய்த இடத்தை மூன்று முறை வந்து சுற்றி சூரியனைப் பார்த்து பூவையும், நீரையும் போட்டு நமஸ்காரம் செய்வார்கள்.

மக்கள் மாடுகளையும், இந்திரனையும், கண்ணனையும் வழிபட ஒரு கதையுண்டு. தைத் திங்கள் முதல்நாளன்று ஞாயிறு மகரராசியில் உத்தராயணம் தொடங்குதல் ஐதீக முறையில் மகரசங்கிராந்திப் பண்டிகையென்று அழைப்பார்கள். திருமால் கண்ணனாக அவதரித்தபோது ஆயர்கள் இந்திரனை வழிபடுவதை விட்டு கண்ணனை வழிபடத் தொடங்கினார்கள். இதனால் இந்திரன் சினம் கொண்டு பெரும் மழை பெய்வித்தான். ஆநிரைகட்கு பெரும் துன்பம் விளைவித்தான். கண்ணன் கோவர்த்தனம் எனும் மலையை குடையாகப் பிடித்து ஆயர்களையும் ஆநிரைகளையும் காத்தான். தன் ஆற்றல் செல்லாததால் இந்திரன் கண்ணனை வணங்கி ஆயர்கள் தன்னையும் வணங்கும்படி வேண்டிக் கொண்டான். அவ்வாறே போகியன்று இந்திரனையும் தைப் பொங்கலன்று கண்ணனையும் மாட்டுப் பொங்கலன்று மாடுகளையும் மக்கள் வழிபட்டார்கள்.

## பட்டிப் பொங்கல்

தைப் பொங்கலின் மறுநாள் மாட்டுப் பொங்கல் இடம்பெறும். பட்டி பெருகினால் வாழ்வு வளம்பெறும். இந்நாளிலே மாடுகளையும், காளைகளையும் நன்றாகத் தேய்த்துக் குளிப்பாட்டி மாட்டுப் பொங்கலன்று மாடுகட்கு பட்டு அணிவித்து, மாலை அணிவித்து, அலங்காரம் பண்ணி மாட்டுக் கொட்டிலிலே பொங்கல் செய்து அவற்றிற்குப் படைப்பார்கள்.

## கோவில் பொங்கல்

தைமாதம் பிறக்கும் வேளையில் கோயில்களில் சங்கிராந்தித் தீர்த்தம் நடைபெறுகிறது. குலதெய்வ வழிபாட்டின் மேம்பாடு காரணமாக அவ்வேளை கோவில்களிலே பொங்கல் செய்து படைத்து, பூசைகள் நடைபெற்று பொங்கல் மக்களுக்கு கொடுக்கப்படும்.

## மார்கழிப் பிள்ளையார்

இவ்வாறு வழிபாடுகள் இனிதே நிறைவேறியதும் மார்கழி மாதத்தில் சாணத்தினால் பிடிக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்ட பிள்ளையாரை சிறு தேரிலோ அல்லது பல்லக்கிலோ கொண்டு சென்று குளத்தில் போட்டு வழிபாடுகள் இனிதே நிறைவு பெறும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பட்டினத்தாரும் இறை வழிபாடும்



*வேலாயுதம்பிள்ளை குகன்யா*

நிகழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய நவீன உலகத்தில் விஞ்ஞானம் மனிதனது வாழ்க்கைத் தரத்தில் எவ்வளவு தான் உச்ச நிலையை அடைந்தாலும் இறை வழிபாடு செய்து வருதல் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டு தான் வருகின்றது. ஏனெனில் அவனது வாழ்க்கையின் மன நிம்மதியோ, சந்தோசமோ வேண்டுமாயின் இறை வழிபாட்டுடன் கூடிய சமய சம்பந்தமான செயற்பாடுகளைச் செய்து வருகிறான் என்பதனை நாம் மறுக்க முடியாது.

ஒரு மனிதன் நாளாந்த வாழ்க்கையில் அதிகாலையில் தூக்கம் கலைந்து எழுந்திடும்போதும் இரவில் படுத்து உறங்க முன்பும் தன்னை கடவுளிடம் முழுமையாக ஒப்படைத்து விடுகிறான். அத்துடன் அன்றைய நாளில் அவன் செய்த அனைத்து செயல்பாடுகளையும் இறைவனுக்கு சமர்ப்பணம் செய்து விடுகிறான். இதுவும் மனதுக்கு நிம்மதியை தருகின்றதாகவே அமைந்துள்ளது.

"அரிது அரிது மானிடராதல் அரிது" என ஔவையார் கூறியது போல உலகில் மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் இறைவழிபாடு செய்தல் அவசியமாகின்றது. இந்துக்களாகிய நாம் சிவ வழிபாட்டின் முக்கியத்துவத்தினை அறிந்திருத்தல் வேண்டும். இறைவன் என்று கூறினாலேயே தலைவன் என்று பொருள்படும். சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாக சிவனை ஏற்றுக் கொள்ளப்பட்டது யாவரும் அறிந்த உண்மையே. இவ்வாறான தலைவனால் படைக்கப்பட்ட உன்னத படைப்பான மனிதனுக்கு அறிவை உணர்த்தி தன்னை வழிபடவும் தன்னுடன் சேர்ந்து எல்லையில்லாத பேரின்பத்தை அனுபவிப்பதற்காகவும் வேதங்களை அருளிச் செய்து அதனை ஓதவும் இசைக்கவும் உணரவும் கற்பித்துள்ளான்.

இறைவன் உருவமற்றவன். எங்கும் எதனிலும் இருப்பான். விருப்பு, வெறுப்பு இல்லாதவன். எனினும் மக்கள் மனத்தை ஒரு நிலைப்படுத்தி இறைவனை வணங்குவதற்கு கோயிலை சிறந்த இடமாக தெரிந்துள்ளார்கள். எனவே அங்குள்ள இறைவன் அமைந்து இருக்கும் நிலைகளைக் கொண்டு பல பெயர்களால் அழைக்கப்படுகின்றார். சிவன் கோவில்களில் மூலஸ்தானத்தில் உள்ள மூல மூர்த்தியாக லிங்க வடிவத்தில் காட்சி தரும்போது லிங்கேஸ்வரர் என்றும் தூக்கிய திருவடியுடன் கூத்தரசனாக காட்சி தரும்போது நடராசர் என்றும் சிவன் தேவியுடன் இடப வாகனத்தில் இருக்கும் காட்சியை இரிட பாரூட மூர்த்தி என்றும் சிவன் உமையோடும் முருகனோடும் அமைந்துள்ள காட்சியை சோமாஸ்கந்த மூர்த்தி என்றும் சிவனும் நாராயணனும் சேர்ந்திருப்பது ஹரிஹரன் என்னும் கல்லால மரத்தின் கீழ் குருவாக இருக்கும் நிலையை தட்சணாமூர்த்தி என்றும் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றார்.

இறைவனை நாம் அடைய வேண்டுமாயின் உண்மையுடனும் உள்ளத்தூய்மையுடனும் இறை பக்தியுடனும் இறைவனைப் பிரார்த்தித்தல் வேண்டும். இறை வழிபாட்டில் ஈடுபட்டு தம்மை கடவுளிடத்து முற்று முழுதாக அர்ப்பணித்து அவன் அருளால் பல அற்புதங்களைச் செய்து சிவபதம் அடைந்த நாயன்மார்கள் சிவ பக்தர்கள் போன்றோர்களின் வழித்தோன்றல்களில் பட்டினத்தாரும் ஒருவர் ஆவர். இவரது வாழ்க்கை வரலாற்றினையும் அற்புதங்களையும் நாம் ஆராய்வோமானால் இறைவழிபாட்டின் பெரும் பங்கை நாம் அறியமுடியும்.

பட்டினத்தாரின் இளமைப் பெயர் திருவெண்காடர். ஐந்து வயதில் தந்தையை இழந்த இவர் தாயின் அரவணைப்புடன் வளர்ந்து ஆசிரியர் முன்னிலையாக எல்லாக் கலைகளையும் கற்றுத் தேர்ந்தார். சிறு பராயத்தில் இருந்தே சிவபூஜை செய்வதில் ஈடுபாடு கொண்டிருந்ததால் இப் பூசையை சிறந்த ஆசிரியர் ஒருவர் மூலமாக கற்றுக் கொள்ள வேண்டுமென ஆவல் பட்டார். ஆனால் அவரது ஆவல் நிறைவடையவில்லை. எனவே கவலையை தீர்ப்பதற்கு திருவுளம் கொண்ட இறைவன் முதிய அந்தணர் வடிவத்திலே இவரிடம் வந்து ஒரு சம்புடத்தைக் கொடுத்துச் சென்றார். அதனை அடிகள் திறந்து பார்த்தபோது சிவலிங்கம் இருப்பதைக் கண்டு தான் பெற்ற பெரும் பேறாக நினைத்து சிவபூசை செய்து வழிபட்டு வந்தார்.

திரு வெண்காடர் வளர்ந்து பெரியவனாகி இல்லற வாழ்வில் ஈடுபட்டு இயல்புடைய மூவருக்கும் நற்துணையாக வாழ்ந்து கொண்டிருக்கையில் குழந்தை இல்லாத குறை பெருங்கவலையாயிற்று. இவரது கவலையை தீர்ப்பதற்கு மீண்டும் திருவுளம் கொண்ட இறைவன் தானே குழந்தையாக அவதரித்து தன்னுடைய கோயில் பூசகர் மூலம் இவரிடம் வந்து சேர்ந்து வளர்ந்து பெரியவனாகி வாணிபத்திற்காக அயலூர் சென்று திரும்பிய வேளை தனது தந்தையாருக்கென தான் கொண்டு வந்ததாக கூறி தாயிடம் ஒரு பேழை ஒன்றைக் கொடுத்துச் சென்றார். திருவெண்காடர் அப் பேழையை திறந்து பார்த்தபோது உள்ளே காது இல்லாத ஊசி ஒன்றும் ஓலையும் இருந்தது. அவ்வோலையில் 'காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே' என எழுதப்பட்டு இருந்ததனைப் பார்த்து திரு வெண்காடர் வாழ்க்கையின் தத்துவத்தை உணர்ந்து பக்குவம் அடைந்தார். இல்லறத்தை விடுத்து துறவறத்தை மேற்கொள்ள தலைப்பட்டார்.

துறவறத்தின் பயன் தான் பெற்ற இன்பத்தினைப் பற்றி நாட்டு மன்னருக்கும் மக்களுக்கும் போதித்து வந்தார். இதனால் உயர்வு தாழ்வு இன்றி யாவற்றையும் சிவன் செயலாகவே நினைத்து இரந்துண்டு வாழ்ந்து வந்தார். இவரது செயல் அவரின் தமக்கையாருக்கு பிடிக்காமையினால் அவர் நஞ்சு கலந்த உணவை அடிகளாருக்கு கொடுத்தபோது அவர் அதனை அறிந்து உண்ணாது "தன்வினை தன்னைச் சுடும். ஒட்டப்பம் வீட்டைச் சுடும்." என்று கூறி அம்மையாரின் வீட்டின் மீது வீசி எறிந்தார். அம் மாத்திரத்தில் வீடு தீப்பற்றியதும் அல்லாமல் இவருக்கு தீங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்த ஏனையோரது வீடுகளும் தீப்பற்றி எரிந்தன. இவ்வற்புதத்தினால் மக்களது மன இருளைப் போக்கி இறை வழிபாட்டினால் ஏற்படும் பற்றற்ற உண்மையை வெளிப்படுத்தினார்.

சதாகாலம் இறைவனைப் பற்றி சிந்திப்பதும் அவன் புகழ் பாடுவதும் அவரது தொழிலாக இருந்தது. இவ்வாறு இருக்கும்போது தாயார் இறந்ததை தம் மனக் கண்ணால் அறிந்து அங்கு சென்று அன்னை மீது அன்பினால் ஆன பாடலைப் பாடியபோது உடல் தீப்பற்றி எரிந்தது. இவ்வாறு அற்புதமாக தாயாரது ஈமக்கடனையும் தவறாது செய்து முடித்தார்.

மீண்டும் திருவாரூர் கோவிலுக்குச் சென்றபோது சன்னி என்னும் நோய் வந்ததால் இறந்த கணவனை அவனது மனைவிக்கு மீளவும் உயிர் மீட்டுக் கொடுத்த அற்புதத்தையும் செய்தார். பின்பு பிள்ளையார் கோவில் ஒன்றினுள் நிஷ்டையில் ஈடுபட்டிருந்த வேளையில் அங்கு வந்த கள்வர்களால் அவர் கழுத்தில் மாலை ஒன்று இடப்பட்டது. அம்மாலை அவ்வூர் அரசனுடைய உடைமை என்பதனை ஏவலாளர்களால் அறிந்த அரசன் அம்மாலையை இவர் களவாடியதாக நினைத்து இவரைக் கழுமரத்தில் ஏற்றும்படி பணித்தார். ஏதுபிழை அறியாத அடிகளார் கழுமரத்தைப் பார்த்து பாடிய பொழுது அது தீப்பற்றி எரிந்தது. இவ்வாறு பல அற்புதங்களைச் செய்து வந்தார்.

ஆயர் குலச் சிறுவர்களுடன் சேர்ந்து மண்ணினால் லிங்கம் அமைத்து விளையாடி மகிழ்ந்து இருந்த வேளை தன்னை இருத்தி தன் மீது மண்ணைப் போட்டு லிங்கம் அமைக்கும்படி சிறுவர்களுக்கு பணித்தார். அவ்வாறே அவர்களும் செய்தனர். ஈற்றில் உண்மையிலேயே லிங்கமாகி விட்டார். இவரது வாழ்க்கை வரலாற்றில் இறை வழிபாடு பெரும் பங்கை ஆற்றியுள்ளது என்பது அவருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட அற்புதங்களில் இருந்து அறியக் கூடியதாக உள்ளது.

நாயன்மாரது வாழ்க்கை வரலாற்றிலும் அற்புதங்கள் காணப்பட்டது போலவே இவரது வாழ்க்கை வரலாற்றையும் கண்ணுற்றோம். இவற்றிலிருந்து நாம் அறியக் கூடிய உண்மை என்னவெனில் இறைவன் விருப்பு வெறுப்பு இல்லாதவனாக இருந்தாலும் தன்னை விரும்பி ஆதரிப்பவர்களுடைய உள்ளக் கமலத்தில் எந்நேரமும் இருப்பான். அவர்களுக்கு தீங்கு வராது காத்தருள்வான்.

எனவே நாமும் இறை வழிபாட்டின் தன்மையினை மேலும் வளர்க்க வேண்டும். அவ்வாறு வளர்ப்பதாயின் படைப்புகளுக்கு மூலகாரணமான இறைவனை நினைப்பது ஆகும். கடவுளை நினைப்பதற்கு பிரார்த்தனை செய்தல் நன்று. இந்தப் பிரார்த்தனை சிறுபராயம் இருந்து வளர்ந்து வரவேண்டிய ஒன்றாகும். பாடசாலை வாழ்க்கையிலும், கோவில்களிலும் மன்றங்களிலும் வீடுகளிலும் பண்ணோடு கலந்த இசை பாடப்படல் கூட்டுப் பிரார்த்தனைகள் இடம்பெறல் நற்சிந்தனைகள் பற்றி போதித்தல் போன்றவற்றால் பிள்ளைகளின் மனதில் இறை வழிபாட்டினைப் பற்றிய சிந்தனைகளை வளர்க்க முடியும்.

சிவனுக்கு வடிவங்கள் கொடுத்து வழிபடுதல், கோவில்களுக்கு சென்று வழிபடுதல் போன்று சிவ சின்னங்களுக்கு மதிப்பு கொடுத்தல், சிவனடியார்களை ஆதரித்து உதவுதல், விரதங்கள் அனுஷ்டித்தல், சிவ தொண்டுகள் செய்தல் போன்றன சிவ வழிபாட்டிற்குரியன ஆகும். இவை மட்டுமல்ல சமூகத்தில் வாழும் மக்கள் உடலால், உளத்தால், வாயால், பணத்தால் செய்யப்படும் பல பாவங்களில் இருந்தும் நீங்கல் வேண்டும். உயிர்கள் சிற்றின்பங்களை அனுபவித்து நுகர்வதால் ஏற்படும் இன்னல்களைத் தவிர்த்து தர்ம சிந்தனைகளை வளர்த்து கொள்வோமானால் முதலில் நாம் செய்த பாவங்களில் இருந்து விலகவும் மீளவும் அதனைச் செய்யாது தவிர்க்கவும் வாய்ப்பளிக்கவும் மனம் அமைதி அடைய அடிக்கடி தியானம் செய்யவேண்டியது அவசியம். தியானத்தினால் மனதில் கிளம்பும் உத்வேகங்கள் அடங்கும். இறைவனைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க தோன்றும். அத்துடன் தனக்கென கடமைகளைச் செய்வதும், செய்யும் கருமங்கள் சுயநலப்பற்றின்றி இருப்பதும் மன அமைதிக்கு இன்றியமையாத வழிகளாகும்.

தீமை அனைத்தையும் விலக்குதல் நற்செயல்களை புரிதல், மனதைத் தூய்மையாக்குதல், தப்புச் செய்தோரை திருத்தி வழிநடத்தலும், தப்பினை உணர்ந்து கொண்டோனை மன்னித்தல், உண்மை பேசுதல், இரக்கம் காட்டுதல் போன்ற பழக்க வழக்கங்களை நெறிப்படுத்தி ஒழுகுதல், இறை வழிபாட்டிற்கு ஏற்றவையாகும்.

## மாமன்றச் செய்தி

### நாவலர் நினைவு தினமும் நூல் வெளியீட்டு விழாவும்



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவு தின வைபவமும் மாமன்ற வெளியீடுகளான சிவ வழிபாட்டு மலர், The Elements of Saiva Siddhantam ஆகிய இரு நூல்களினது வெளியீடும் இம்மாதம் (டிசெம்பர்) 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று காலை மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்றது.

மாமன்றத் தலைவர் திரு.வி. கயிலாசபிள்ளை தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் மாமன்ற உபதலைவரும், சமய விவகார, விழாக்கள் குழுத் தலைவருமான சிவஞானச் செல்வர் க. இராஜபுவனீஸ்வரன் வரவேற்புரை நிகழ்த்தினார். இளைப்பாறிய உயர்நீதிமன்ற நீதியரசர் திரு. சி. வி. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்.

இந்நிகழ்வில் இந்தியன் ஓவசீஸ் வங்கியின் இலங்கை நாட்டுக்கான தலைமை நிர்வாக அதிகாரி திரு. அ. இராமசாமி "சமய குரவர் வரிசையில் நாவலர்" என்ற பொருளில் சிறப்புரையாற்றினார்.

மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் நன்றியுரை வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னாரில் சிறுவர்களுக்கு ஒரு வளர்ப்பகம்

# இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இல்லம்

**அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முயற்சியால் இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய அறக்கட்டளையினரின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்டு மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியமும் அகில இலங்கை இந்து மாமன்றமும் இணைந்து நிர்வகிக்கும் சிறுவர்களுக்கான வளர்ப்பகம் இது.**

ஸ்ரீ கௌரியம்மன் சமேத திருக்கேதீச்சரப் பெருமான் எழுந்தருளிருக்கும் புண்ணிய பூமி மன்னார் பிரதேசம். ஆனால் கடந்த இரு தசாப்தங்களில் நடந்த கொடூர யுத்தத்தினால் பல கஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்த இடம். இன்னும் இராணுவமயம் பல இடங்களில் தென்படும் பிரதேசம்: திருக்கேதீச்சரத்தைச் சுற்றியுள்ள இடங்களிலிருந்து இராணுவம் வெளியேற்றப்பட்டு மக்கள் சமாதான சகவாழ்வு வாழ வழிவகுக்குமாறு அகில இலங்கை இந்து மாமன்றமும் திருகேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபையும் பல ஆண்டுகளாக அடுத்தடுத்து விடுத்துவந்த வேண்டுகோள்கள் செவிடன் காதில் ஊதிய சங்குக்கு ஏற்பட்ட கதியைத்தான் சந்தித்தன.

யுத்தத்தினால் எத்தனையோ பிள்ளைகள் தாய் தந்தைமாரை இழந்த நிலையில், அவர்களுக்கு சரணாகதி தந்து அகில இலங்கை இந்து மாமன்றம் இரத்மலானையிலுள்ள கொழும்பு இந்துக் கல்லூரியில் இலவசவிடுதிகள் நடத்திவருகின்றது. இச் சேவை பிரதேசரீதியாக - குறிப்பாக யுத்தத்தின் அனர்த்தங்களைப் பொறுத்துநிற்கும் பூமியான வடக்குகிழக்குப் பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்படும் என்று மாமன்றம் அறிவித்து இருந்தது. வடக்குகிழக்கில் உள்ள சிறுவர்முதியோர் இல்லங்களுக்கு இந்து மாமன்றமும், மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை தலைமையில் இயங்கும் மனிதநேய அமைப்பும் நிதி உதவி வழங்கி வருகின்றன.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமான மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியமும் மன்னாரில் இருக்கும் சிறுவர்களின் நிலைமையை ஆராய்ந்து அங்கு சிறுவர்களுக்கு இல்லங்கள் நடத்த வேண்டும் என மாமன்றத்திடம் அறிக்கை சமர்ப்பித்தனர். ஏற்கனவே இலண்டன் சிவயோக நிதியத்தின் ஆதரவுடன் நடத்தப்படும் மன்னார் அன்னை இல்லத்தில் பெண் பிள்ளைகளுக்கு வசதிகள் உள்ளன. எனவே, உடனடியாக ஆண் பிள்ளைகளுக்கு ஓர் இல்லம் அமைக்கப்பட எனவும் வேண்டும் அதைத் தொடர்ந்து பெண்பிள்ளைகளுக்கு இன்னும் ஓர் இல்லம் அமைக்க வேண்டும் எனவும் ஒன்றியம் விதைந்துரைத்து இருந்தது.

கடந்த வருடம் டிசம்பர் மாதத்திலும் இவ்வருடம் ஜுன் மாதத்திலும் இலண்டனுக்கு விஜயம் செய்திருந்த அகில இலங்கை இந்து மாமன்றப் பொதுச் செயலாளர், இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் திரு. சி. பிரேமச்சந்திரா, நிர்வாக சபைத் தலைவர் திரு. எஸ். கருணைலிங்கம் ஆகியோரைச் சந்தித்து மன்னாரின் தேவைகளை எடுத்துரைத்தார், அகில இலங்கை இந்து மாமன்றம் முன்னின்று இப்பணிகளை நிர்வகிக்க ஒத்துக்கொண்டால் நிதி உதவிதருவதாக அவர்கள் வாக்குறுதி வழங்கியிருந்தனர். அதனைத் தொடர்ந்து அகில இலங்கை இந்து மாமன்றமும் மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியமும் திட்டமிட்டு காரியத்தில் ஈடுபட்டன.

கலாநிதி அரசக்கோன் மன்னார் மூர் வீதியில் கட்டிவந்த புதிய இல்லத்தில் சிறுவர் இல்லம் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. கூடுதலான மலசல வசதிகள் மற்றும் படுக்கை, தளபாட வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டன. செப்டம்பர் மாதத்தில் இலங்கைக்கு வந்திருந்த திரு. எஸ். கருணைலிங்கம் மன்னாரில் செய்யப்படும் ஒழுங்குகளை நேரில் பார்த்து உற்சாகம் தந்தார். தமிழ் இணையத் தகவல் ஒன்றியம் மன்னாரில் அமைத்திருக்கும் கணினி வகுப்பு நிலையத்தை திறந்துவைத்த அவர் அடுத்த மாதமே இந்த இல்லமும் திறந்து வைக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார். குறிப்பிட்ட கணினி வகுப்புகளுக்கு இலண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலய தர்மகர்த்தா சபையினரே நிதி உதவி வழங்கிவருகின்றனர் என்பதையும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

கடந்த அக்டோபர் 28ம் திகதியன்று மன்னாரில் அமைந்துள்ள இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இல்லம் நல்லை ஆதீன முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. ஸ்ரீ கௌரி அம்மன் சமேத திருக்கேதீச்சரப் பெருமானுக்கு நிகழ்த்தப்பட்ட விசேட பூசையைத் தொடர்ந்து காலை 9. 45 மணியளவில் வாகன ஊர்வலத்தில் புறப்பட்ட நல்லை ஆதீன முதல்வர் தலைமையில் மாமன்றத் தொண்டர்களும் ஒன்றியத் தொண்டர்களும் மன்னார் வைரவப் பெருமான் ஆலயத்தை காலை 10. 15 மணியளவில் வந்தடைந்தனர். அங்கு பூசை வழிபாடு நடந்த பின் நல்லை ஆதீனமுதல்வரின் புனித பாதங்கள் மன்னாரின் மண்ணை ஆசிர்வதித்திட ஊர்வலமாக நாதஸ்வர மேளவாத்தியத்துடன், இல்லத்தில் அனுமதிக்கப்படும் முதல் 32 மாணவர்களும் மன்னார் நகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். ஊர்வலத்தில் மன்னார் மக்கள் பலரும் திரண்டு வந்தனர். இலண்டனிலிருந்து வந்து இந்நிகழ்வில் கலந்து கொண்ட இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் அறங்காவலர் சபைத்தலைவர் திரு. பிரேமச்சந்திரா உற்சாகத்தைக் கண்டு மனமகிழ்வுடன் பாராட்டிய வண்ணம் ஊர்வலத்தில் நடந்து கொண்டுவந்தார். "மன்னாரில் பெண்கள் விடுதியை அமையுங்கள், தையல் பயிற்சி நிலையம் நிறுவுங்கள், மன்னாரில் இந்து மாணவர்களுக்கு உதவத் திட்டம் போடுங்கள்" என்று மன்னார் மயமான உணர்வுடன் மாமன்றத்திடம் வேண்டுகோள் விடுத்துக் கொண்டிருந்தார்.

மன்னார் நகரின் வர்த்தகப் பெருமக்கள் ஊர்வலத்தின் உணர்வைக் கண்டு மெச்சி நின்றனர். மன்னார் நகரில் ஓர் புதுப் பொலிவு - புத்துணர்ச்சி ஏற்பட்ட நிலை. புதிய இல்லத்தில் சேரப்போகும் 32 மாணவர்களும் 6 வயதிற்கும் 12 வயதிற்கும் இடைப்பட்ட இளாசுகள், இராணுவப் பீதிச் சூழ்நிலையில் பிறந்து வளர்ந்த பசும் உள்ளங்கள். தங்களுக்கு ஒரு புதுவாழ்வு கிடைக்கிறது என்ற பெருமிதத்தில் அவர்கள் நடக்கவில்லை - துள்ளிக் குதித்து வெந்து கொண்டிருந்தனர்.

மூர் வீதியை ஊர்வலம் அடைகிறது. முதல் நாள் பெய்த மழையின் தாக்கங்களைக் காண்கிறோம். வெள்ளத்தின் ஊடாக நல்லை ஆதீன முதல்வரும், திரு. பிரேமச்சந்திரா, மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை முதலியோர் தலைமையில் வெள்ளத்தின் ஊடாக நடக்கின்றனர். "புனிதநீரில் கால் கழுவி நல்ல காரியத்திற்குச் செல்கிறோம்" என்று எதிலும் நிறைவு காணும் ஓர் உள்ளம் குறியிட்டது.

புதிய இல்லத்தில் சிரித்த முகத்துடன் ஊர்வலத்தை வரவேற்று நிற்கின்றார் கலாநிதி அரசக்கோன். மன்னாரில் மக்களுக்கு அரியசேவையாக மேல்நாட்டுமருத்துவம் செய்யும் கலாநிதி கதிர்காமநாதனும், ஆயுள்வேத வைத்தியம் செய்யும் கலாநிதி அரசக்கோனும் சேர்ந்திருப்பது குறிப்பிடற்பாலது. உடலுக்கு மட்டுமல்ல உள்ளத்திற்கும் குறைதீர்த்து வைத்தியம் தரும் இந்த இரு உத்தமர்களின் சேவை இன்று மன்னாரில் அவசியம் தேவை.

புதிய இல்லத்தில் முதல் நாள் இரவு சாந்தி பூசைநடந்தது. காலையில் பூசைவழிபாட்டுடன் நல்லை ஆதீன முதல்வர் இல்லத்தை திறந்து வைக்கின்றார். அதனைத் தொடர்ந்து வாழ்த்துரைகளும் சிறப்புரைகளும் இடம் பெறுகின்றன.

விழா அமைப்பாளர்கள் சார்பில் மாமன்றப் பொதுச் செயலாளர் திரு கந்தையா நீலகண்டன் வரவேற்புரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய அறக்கட்டளையினர் வடக்கு கிழக்கு மாகாணத்தில் பலபகுதிகளிலும் செய்து வரும் சேவையையும் இளம் தலைமுறையினரின் கல்வி வளர்ச்சிக்கு உதவிவரும் சிறப்பையும் எடுத்துரைத்தார். இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் ஆதரவுடன் இந்த இல்லத்திற்கு இலண்டன் ரதி ஜுவலர்ஸ் நிதிஉதவிதர முன்வந்திருப்பதையும் பாராட்டினார். இன்னும் ஒரு முக்கிய விடயத்தை அவர் குறிப்பிட்டார். பூசையின்றி பூட்டப்பட்டிருந்த திருக்கேதீச்சரப் பெருமான் திருத்தலத்தில் மகாகும்பாபிஷேகம் நடந்து தேரும் வீதிவலம் வந்தபின் மன்னாரில் ஒரு புதுயுகம் பிறந்திருக்கிறது. செப்டம்பரில் மாமன்றமும் ஒன்றியமும் இணைந்து ஒழுங்கு செய்த ஆத்மீக விழிப்புணர்வு நிகழ்வு இந்த இல்ல ஆரம்பம் - இவை எல்லாம் மன்னார் மக்களுக்கு ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியிருப்பதாகக் குறிப்பிட்டார். ஒன்றியத்துடன் இணைந்து மாமன்றம் இந்த இல்லத்தைத் திறம்பட நடத்தும் என்ற வாக்குறுதியையும் தர அவர் தவறவில்லை.

நல்லூர் ஆதீன முதல்வர் "மாமன்றமும் ஒன்றியமும் ஆரம்பித்திருக்கும் சமூகப்பணி மெச்சத்தக்கது. அதுவும் இலண்டனில் இருக்கும் எமது ஆலயம் ஒன்று மக்கள்பணிக்கு இங்கு தனது வருமானத்தை அனுப்புவது புண்ணியமான செயல் மட்டுமல்ல நல்ல உதாரணமும் கூட" என மனம் நிறைய வாழ்த்தியதுடன் ஒரு முக்கிய செய்தியை - வேண்டுகோளை இந்நாட்டு இந்து ஆலயங்களுக்கு விடுத்தார். "இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் முன்னுதாரணத்தைப் பின்பற்றி இந் நாட்டில் இருக்கும் எமது ஆலயங்களும் தங்களின் வருமானத்தில் ஒரு பகுதியையாவது மக்கள் பணிக்குக் கொடுத்து உதவவேண்டும்" என்பதே ஆதீன முதல்வரின் வேண்டுகோளாகும்.

தலைமையுரை நிகழ்த்திய மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை மாமன்றம் கடந்த சில ஆண்டுகளாக நாடளாவிய ரீதியில் செய்துவரும் உதவிகளையும் மனிதநேயத்தின் ஆதரவையும் எடுத்து விளக்கி, இளம் தலைமுறையினரை இன்றைய காலகட்டத்தில் எதிர் நோக்கும் பிரச்சனைகளிலிருந்து காப்பாற்றி அவர்கள் வளர, கல்வி கற்க உதவுவது எமது தலையாய கடமை என்றுகூறினார்.

வாழ்த்துரை வழங்கிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க மன்னார் அரசியல் பொறுப்பாளர் திரு. இனியவன் வடகிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் புள்ளி விபரங்களை எடுத்துக்கூறி இப்படியான இல்லங்கள் இன்னும் தேவை என்றும் இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயத்தினர் எமது மக்களுக்குச் செய்யும் சேவையை நாம் அறிவோம் - அதனை மெச்சுகின்றோம் என்றும் சொன்னார்.

இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் திரு. பிரேமச்சந்திரா தமது ஆலயம் மன்னார் மக்களின் தேவைகளை உணர்ந்து அதற்கு ஆதரவு தரமுன் வந்ததையும், அதற்கு உடனே இலண்டன் ரதி ஜுவலர்ஸ் நிதி உதவி தர ஒத்துக் கொண்டதையும் எடுத்துக்கூறினார். இந்த இல்லம் சிறப்பாக நடக்கவேண்டும். இன்னும் மன்னாரில் மக்கள் சேவைத்திட்டங்கள் வளரவேண்டும், மன்னார் இந்து மீனவர்களுக்கு உதவேண்டும் என்று சுருக்கமாக - ஆணித்தரமாக வலியுறுத்தினார், "காரியங்கள் செய்வதே கடமை வெறும் பேச்சில் பயனில்லை" என்பதனை எதிரொலிப்பதாக அந்த நல்ல உள்ளத்தின் சுருக்கமான வாழ்த்து அமைந்திருந்தது. மன்னார் இந்து மக்கள் அவரையும் அவரது ஆலயத்தைச் சார்ந்த திரு. கருணைலிங்கம் போன்ற தொண்டர்களையும் மனதாரப் பாராட்டிக் கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து உரையாற்றிய நடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். வினோராதலிங்கம் மன்னாரில் நிலவும் மத விரோதப்போக்கை கண்டித்ததுடன் இல்லம் அமைக்கும் முயற்சியையும் பாராட்டினார்.

அரச அதிபர் வே. விசுவலிங்கம் அவசர அலுவல் காரணமாக கொழும்பு சென்றிருந்ததால் அவரது சார்பில் உரையாற்றிய திரு. திருஞானசம்பந்தர் (மன்னார் உதவி அரச அதிபர்) இப்படியான முயற்சிகளுக்கு அரச அதிபருடன் தானும், ஏனைய அரச அதிகாரிகளும் உதவுவோம் என்றார்.

மட்டக்களப்பு சமூகநலன்புரி கழகத் தலைவர் திரு. வி. தவராஜா தனது உரையில் மன்னாரின் அவசர தேவை இன்று பூர்த்தியாகின்றது. இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் அறக்கட்டளையினர் வடக்கு கிழக்கு மாணவர்களுக்கும் அப்பியாசப் புத்தகங்கள் அன்பளித்து அவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் உதவுகின்றனர் என்றார்.

சுகயீனம் காரணமாக வரமுடியாதிருந்த திருக்கேதீச்சர ஆலய திருப்பணிப் சபைத் தலைவரும், அகில இலங்கை இந்து மாமன்ற நம்பிக்கை பொறுப்பாளர் சபைத் தலைவருமான சைவப் பெரியார் திரு. இ. நமசிவாயம் அனுப்பிவைத்த வாழ்த்துரை வாசிக்கப்பட்டது. இந்த இல்லத்தை நிறுவுவதற்கு முழுமூச்சாக உழைத்த ஒன்றியத் தலைவர் கலாநிதி எம். கதிர்காமநாதன் உருக்கமான ஒர் உரையை ஆற்றினார். மன்னாரில் இந்து மக்களின் பிரச்சனைகளைப் படம் போட்டுக் காட்டிய அவரது உரை, அவர் வெறும் பேச்சாளர் அல்ல - செயல்வீரர் என்பதை எடுத்துக் காட்டியது. இந்து மக்களுக்கான பணியை மேலும் எடுத்துச்செல்வோம் என திடசங்கற்பத்துடன் உறுதி தந்தார் அவர். திரு. சி. பிரேமச்சந்திரா, கலாநிதி. அரசக்கோன் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். மாமன்ற விடுதிகள் குழுச் செயலாளர் திருமதி. அ. கயிலாசபிள்ளை, பொருளாளர் திரு. வி. கந்தசாமி ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இல்ல அமைப்பாளர் திரு. நடராஜா நன்றியுரை கூறினார்.

நிகழ்வு முடிந்த பின் இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய அறக்கட்டளையினர் விடுத்த வேண்டுகோளின்படி விடுதியில் சேர்க்கப்பட்டிருக்கும் பிள்ளைகளை மாமன்றப் பொதுச் செயலாளர் வீடியோ ஒளிப்பதிவுக்காக பேட்டிகண்டார். விடுதிப் பிள்ளைகளின் உற்சாகம் மெய்சிலிக்கும் வகையில் இருந்தது. "காலையில் இங்கே இட்லி சாப்பிட்டோம் நல்லாய் இருந்தது" என்று அவர்களில் பலர் மனம் நிறைய - வாய் நிறைய -வயிறு நிறைந்த கதையைக் கூறிக்கொண்டிருந்தனர். அவர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்கு மேல் தந்தை இல்லை. தந்தை எப்படி இறந்தார் என்பதனைக் கூட சிலர் அறியவில்லை. மற்றவர்கள் "வீட்டில் வசதியில்லை, அம்மா கஷ்டப்படுகிறார்" என்று தங்கள் சோகக் கதைகளைக் கூறிய போது கண் கலங்காமல் இருக்க முடியவில்லை. படித்துவிட்டு என்ன தொழில் பார்க்க விருப்பம் என்று அவர்களிடம் கேட்டபோது பலரும் தந்த விடை "டாக்டராக வேண்டும்." ஒருவர் "நான் ஊசி போடும் டாக்டராகப் போகிறேன்". இன்னும் ஒருவர் "நான் ஆபரேசன் செய்யும் டாக்டர் ஆகுவேன்" என்றார். ஒருவர் கலாநிதி கதிர்காமநாதனைப் பார்த்து "இன்னும் ஏழு எட்டு வருடங்களில் நீங்கள் மருத்துவ பீடம் ஒன்று அமைக்கவேண்டி வரும் போலும்" என்று சொன்னார். இன்னும் சிலர் தந்த பதில்கள் சுவாரஸ்யமாக இருந்தது. ஒருவர் "நான் ஆமியாகப் போகிறேன்," வேறு ஒருவர் "நான் மீனவனாகக் கடலுக்குப் போவேன்," இன்னும் இருவர் தாங்கள் நீதிபதிகள் ஆவோம், வேறு சிலர் என்ஜினியர், டீச்சர் ஆகுவோம் என்றனர். இந்தக் கள்ளங் கபடமற்ற பிஞ்சு உள்ளங்களின் கனவு நனவாக ஆண்டவன் அருளட்டும்.

கலாநிதி கதிர்காமநாதன் சொன்ன இரு விடயம் "இந்த விடுதியில் பிள்ளைகளைக் கவனிக்க மாதாக்களை வைத்து இருக்கிறோம். அவர்கள் இவர்களைத் தங்கள் பிள்ளைகளாக வளர்ப்பார்கள்".

இரத்மலானை இந்துக் கல்லூரி விடுதியில் மாதாந்தம் அம்மாதத்தில் பிறந்த பிள்ளைகளுக்கு பிறந்ததின விழா நடப்பதைக் குறிப்பிட்ட திரு. நீலகண்டன், அப்படியான ஒழுங்குகள் செய்யப்பட்டு இப்பிள்ளைகள் தங்கள் சொந்த வீடுகளில் வளருவதைப் போன்ற சூழ்நிலை இங்கும் ஏற்படுத்தப்படும் என்றார்.

திருக்கேதீச்சரத் திருத்தலத்திற்கு யாத்திரை செல்லும் ஒவ்வொருவரும் இவ்விடுதிக்கும் செல்லுங்கள், உங்கள் பிறந்ததினம், திருமணஆண்டு நிறைவு நாட்கள், மறைந்தோரை நினைவுகூரும் நாட்களில் இந்தப் பிள்ளைகளையும் மறக்காது நினைத்து ஆதரவு வழங்குங்கள்.

[*தொகுப்பு* – **அ. கனகசூரியர்**]

## கடவுள் வழிபாடு



கடவுள் வழிபாடு நமது ஒழுக்கத்தையும் சீர்படுத்தக்கூடியது. தீய ஆசைகளேனும் தீய எண்ணங்களேனும் எழும்போது சிவ சிந்தனை செய்தால், அச்சிந்தனை இவற்றைக் கருக்கி மீள விடாமல் அழித்து விடும். அது மனத்தைத் தூயதாக்கி இறைவன் எழுந்தருளியிருத்தற்குத் தகுதிவாய்ந்த இடமாக்கும். இவ்வுண்மையை,

*தேடிக் கண்டு கொண்டேன் – திரு*
*மாலொடு நான்முகனுந்*
*தேடித்தே டொணாத் தேவனை யென்னுளே*
*தேடிக் கண்டு கொண்டேன்*

*நாடி நாரண னான்முக னென்றிவர்*
*தேடி யுந்திரிந்துங்காண வல்லரோ*
*மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத்*
*தாடி பாதமென் னெஞ்சு ளிருக்கவே.*

என்னும் திருநாவுக்கரசு நாயனார் திருவாக்குகளிற் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

அகில இலங்கை இந்து மாமன்றம் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்காக ஏற்பாடு செய்து நடத்திய இருநாள் கருத்தரங்கு, கடந்த அக்டோபர் 30ம் 31ம் திகதிகளில் கிளிநொச்சி கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை தலைமையில் நடந்த முதல்நாள் நிகழ்வின்போது நல்லை ஆதீன முதல்வர் வணக்கத்துக்குரிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களும், கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத் தலைவர் தவத்திரு கணேசானந்த மகாதேவ சுவாமிகள் அவர்களும் ஆசியுரை வழங்கினார்கள். பூநகரி பிரதேச செயலாளர் வரவேற்புரை நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. தி. இராசநாயகம் சிறப்புரையாற்றினார்.

மாமன்ற உபதலைவரும், மாமன்ற சமய விவகார விழாக்கள் குழுத்தலைவருமான சிவஞானச் செல்வர் க. இராஜபுவனீஸ்வரன் அவர்கள் கருத்தரங்கின் நோக்கங்கள் பற்றியும், அருள்மொழியரசி வசந்தா வைத்தியநாதன் அவர்கள் "சைவ சித்தாந்தம் அடிப்படை அம்சங்கள் " என்ற பொருளிலும், வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் "சரியைத் தொண்டு" என்ற பொருளிலும் உரையாற்றினார்கள்.

மதிய போசனத்தைத் தொடர்ந்து அன்றைய பிற்பகல் நிகழ்வு, கிளிநொச்சி அரச அதிபர் திரு. தி. இராசநாயகம் தலைமையில் ஆரம்பமானது. சிவஞானச் செல்வர் க. இராஜபுவனீஸ்வரன் அவர்கள்"நாளாந்த வழிபாடும் நித்திய கருமங்களும் சமயப் பரீட்சைகளுக்குத் தயார்படுத்தலும்" என்ற பொருளில் உரையாற்றினார். அதன்பின்னர் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இரண்டாம் நாள் நிகழ்வுகள், அக்டோபர் 31ம் திகதி காலை திரு.ந. கார்த்திகேயன் வழங்கிய யோகாப்பியாச விளக்க முறைகளுடன் ஆரம்பமானது. நிகழ்வுக்கு மாமன்ற உப தலைவர் திரு. சின்னத்துரை தனபாலா தலைமை வகித்தார். அருள்மொழியரசி வித்துவான் வசந்தா வைத்தியநாதன் "தொண்டர் தம் பெருமை" என்ற பொருளிலும் , வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் "வாழ்க்கை வளம்பெற தமிழ் பக்தி இலக்கியங்களின் பங்களிப்பு" என்ற பொருளிலும், சிவஞானச்செல்வர் க. இராஜபுவனீஸ்வரன் "சமய மாற்றமும் சிவ தொண்டர் அணியும்" எனும் பொருளிலும் உரையாற்றினார்கள். தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடலின் போது சமய விஷயங்கள் தொடர்பான சந்தேகங்களுக்கு, நிகழ்வில் உரையாற்றிய அறிஞர்களால் விளக்கம் கொடுக்கப்பட்டது.

கிளிநொச்சி பிரதேசத்திலுள்ள அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்காக மாமன்றத்தினால் இலவச அப்பியாசப் புத்தகங்களும் வழங்கப்பட்டன.

அக்டோபர் 30ம் திகதியன்று நண்பகல் 12.00 மணியளவில் மகாதேவா ஆச்சிரமம் அமைந்துள்ள பகுதிக்குச் சென்றிருந்த மாமன்றக் குழுவினர் அங்கேயுள்ள ஆலயத்தில் நடைபெற்ற பூசை வழிபாட்டில் கலந்து கொண்ட பின்னர், மகாதேவ ஆச்சிரமத்திற்கான இரு புதிய கட்டிடங்களுக்கான அடிக்கல் நாட்டும் வைபவத்திலும் பங்கு கொண்டனர். மாமன்ற விடுதிகள், முதியோர் இல்லக்குழுச் செயலாளர் திருமதி. அ. கையிலாசபிள்ளை ஆச்சிரமத்திலுள்ள பிள்ளைகளுக்காக சீருடைகளை வழங்கினார். வெளிநாட்டுப் பிரமுகர்களின் நிதியுதவியுடனும், மனிதநேயத்தின் அனுசரணையுடனும் மேற்படி இரு கட்டிடங்களும் அமைக்கப்படவிருக்கிறது.

மகாதேவ ஆச்சிரமத்துப் பிள்ளைகளுக்காக மாமன்றம் அன்பளிப்புச் செய்த இலவச அப்பியாசப் புத்தகங்களை, மாமன்றத்தின் சார்பில் அதன் உபதலைவர் திரு.சி. தனபாலா தவத்திரு கணேசானந்தா மகாதேவ சுவாமிகளிடம் கையளித்தார்.

மகாதேவ ஆச்சிரமத்திற்கு விஜயம் செய்த மாமன்றக் குழுவில் திரு. வி.கயிலாசபிள்ளை, திருமதி அ. கயிலாசபிள்ளை, திரு.க. இராஜபுவனீஸ்வரன், திரு.சி. தனபாலா, மஸ்கெலியா இந்து மாமன்றச் செயலாளர் திரு செ. தி. பெருமாள், கிளிநொச்சி அரச அதிபர் திரு. தி. இராசநாயகம் உட்பட இன்னும் பலர் இடம்பெற்றிருந்தனர்.

தொகுப்பு: எஸ். பி. மனோகர்



## சிவநெறி

நமது சிவநெறியாகிய சைவம் மக்களது இயற்கை அறிவு வளர்ச்சி வாயிலாகத் தானே தோன்றி மெய்யறிவு பெற்ற மேலோர் வழியாக நாட்டில் நிலவுவது: அதனால் இன்ன சான்றோரால் இன்ன காலத்தில் இன்ன இடத்தில் இன்ன சூழ்நிலையில் சிவநெறி தோற்றுவிக்கப்பட்டது என உரைக்கும் வரலாறே இதற்கு இல்லாதாயிற்று. ஏனைச் சமயங்கள் ஒருவரால் படைக்கப்பட்டு நிலவுவன. அவர் கூறியனவே வேதம்; அவற்றை ஏன்? எப்படி? என ஆராயாது பட்டாங்கு ஏற்று நம்புவதே மக்கள் செயலாகும். நம் சைவ சமயமோ எனின். அறிவாராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டது; அறிந்தவற்றைக் கொண்டு அறியப்படாத இறை இயல்பை எண்ணி அறிந்து மக்களை ஒழுகச் செய்வது.

*அவ்வை சு. துரைசாமிப்பிள்ளை*

# கிளிநொச்சியில் நடந்த அறநெறிப் பாடசாலை
# ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு
# (30.10.2004, 31.10.2004)



நல்லை ஆதீன முதல்வர்
ஆசியுரை வழங்குகிறார்.



கருத்தரங்கு நடைபெறுகிறது.



கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள்



கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள்



கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள்



ஆச்சிரமத்துப் பிள்ளைகளுக்காக தவத்திரு கணேசானந்த மகாதேவ சுவாமிகளிடம் மாமன்ற உபதலைவர் திரு. சி. தனபாலா, மாமன்றத்தின் சார்பில் அப்பியாசப் புத்தகங்களை அன்பளிப்பாக வழங்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் நினைவு தினம், "சிவ வழிபாட்டு மலர்", "The Elements of Siddhantam" நூல்களின் வெளியீட்டு விழா நிகழ்வுகள் (05.12.2004)



நாவலர் நினைவுதின வைபவத்தில் சிறப்புரை நிகழ்த்தும் இந்தியன் ஓவசீஸ் வங்கியின் இலங்கை நாட்டுக்கான தலைமை நிர்வாக அதிகாரி திரு. அ. இராமசாமி அவர்களுக்கு மாமன்ற உபதலைவர் திரு. சி. தனபாலா மலர்மாலை அணிவிக்கிறார்.



நூல்களின் சிறப்புப் பிரதிகளை திருக்கேதீச்சர திருப்பணிச் சபைத் தலைவர் திரு. இ. நமசிவாயம் அவர்களிடமிருந்து மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினர் திரு. க. ஜெகதீசன் பெற்றுக் கொள்கிறார். அருகே மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன்.



பிரதம விருந்தினர் மாண்புமிகு சி. வி. விக்னேஸ்வரன் உரையாற்றுகிறார்.



சிவஞானச் செல்வர் க. இராஜபுவனீஸ்வரன் வரவேற்புரை நிகழ்த்துகிறார்.



மாமன்றத்திலுள்ள நாவலர் திருவுருவச் சிலைக்கு வழிபாடு செய்யப்படுகிறது.





நிகழ்வுக்கு வருகை தந்தவர்களுள் ஒரு பகுதியினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










## வாழ்த்து

மண்ணொடு விண்ணும் வாழ்க நான்மறை இனிது வாழ்க
கண்ணுதற் பெருமானார் தம் அடியவர் என்றும் வாழ்க
பண்ணொடு பரதம் வாழ்க பாவலர் சேவை வாழ்க
எண்ணிலா உயிர்கள் யாவும் இன்புற்று நீடு வாழ்க!


# இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
தாரண வருடம் ஐப்பசி – மார்கழி இதழ்
மார்கழித் திங்கள் 9ஆம் நாள்
24.12.2004

**ஆசிரியர் குழு :**

புலவர் அ. திருநாவுக்கரசு
திரு. கந்தையா நீலகண்டன்
திரு. க. இராஜபுவனீஸ்வரன்
திரு. மு. பவளகாந்தன்
திரு. த. மனோகரன்
திரு. கு. பார்த்தீபன்

| | | |
|---|---|---|
| ஒரு பிரதியின் விலை | ரூபா | 20.00 |
| வருடாந்தச் சந்தா (உள்நாடு) | ரூபா | 80.00 |
| வருடாந்தச் சந்தா (வெளிநாடு) | US டொலர் | 10.00 |

## அகில இலங்கை இந்து மாமன்றம்

A.C. H. C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு - 2, இலங்கை.
இணையத்தளம் : http:/www.hinducongress.org
மின்னஞ்சல் : admin@hinducongress.org
தொலைபேசி எண் : 2434990, தொலைநகல் : 2344720

*இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.*

# HINDU OLI

Aipasi - Markazhi
**ALL CEYLON HINDU CONGRESS**
24th DECEMBER 2004

**Editorial Board :**

**Pulavar A. Thirunavukarasu**
**Mr. Kandiah Neelakandan**
**Mr. K. Rajapuvaneeswaran**
**Mr. M. Pavalakanthan**
**Mr. D. Manoharan**
**Mr. G. Partheepan**

| | | | |
|---|---|---|---|
| Price : | Rs. | 20.00 | per copy |
| Annual Subscription (Inland) | Rs. | 80.00 | |
| Annual Subscription (Foregin) | U. S. $ | 10.00 | |
| (Including Postage) | | | |

## ALL CEYLON HINDU CONGRESS

**A.C.H.C. Bldg.**
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha,
Colombo - 2, Sri Lanka.
Website : http://www.hinducongress,org
E-Mail : admin@hinducongress.org
Telephone No.: 2434990, Fax No.: 2344720

Next Issue :
Thai - Pankuni

Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO - 13. TEL: 2330195


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org